கிராம நலம்

அக்டோபர் 1961

பஞ்சாயத்து மாநாடு-
சிறப்பு மலர்

புதிய பஞ்சாயத்துக்கள் சட்டம்

(தமிழ்நாடு, 1958-ம் ஆண்டு, 35-வது சட்டம்)

முன்னுரை

ஆண்டுதோறும், மக்கள் எண்ணிக்கை பெருகிவருவதற்கு ஏற்ப, உணவு உற்பத்தியைத் தொடர்ந்து பெருக்குவதும், மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும், நாட்டு நலனுக்கு அவசியமாக இருப்பதாலும்,

இந்த இரண்டு தேசியக் குறிக்கோள்களையும் வெற்றியுடன் நிறைவேற்ற, கிராம மக்களின் வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்தல், அவர்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்குதல், அவர்கள், கலை, பண்பாடு, பொழுதுபோக்கு ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு, கிராமப்புறங்களிலேயே வசதிகளைச் செய்தல், ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய ஒரு திட்டத்தின் பகுதியாக, இவற்றை மேற்கொள்வது அவசியமாக இருப்பதாலும்,

சமுதாய நல அபிவிருத்திக்கான தேசிய வளர்ச்சித் திட்டத்தில், மேலே கூறப்பெற்ற பல பணிகளையும் மேற்கொள்ள ஏற்பாடு செய்து, அவற்றிற்கேற்ப, கட்டிடங்கள் அமைத்தல், பல்வேறு வசதிகளைச செய்து கொடுத்தல் ஆகியவை நடந்துவருவதாலும்,

இக்கட்டிடங்கள், பிற வசதிகள் ஆகியவற்றைப் பராமரித்து, தொடர்ந்து பெருகச்செய்யும் பொறுப்பை, கிராமப் புறங்களில் ஏற்று நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த தலஆட்சி அமைப்புக்கள் சட்டப்படி ஏற்படுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளபடியாலும்,

மேலும், கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, அவை சுயாட்சி அமைப்புக்களாகப் பணியாற்றுவதற்கு, அவசியமான பொறுப்புக்களையும், அதிகாரங்களையும், மாநில அரசாங்கம், அவற்றிற்கு வழங்கவேண்டுமென்று, அரசியல் அமைப்பில் கண்டுள்ள, அரசாங்க நெறிமுறைக் கோட்பாடு* கூறுவதாலும்,

இந்தியக் குடியரசின், ஒன்பதாவது ஆண்டில், இச் சட்டம் இயற்றப்படுவதாக.

---

* இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 40-வது பிரிவு கூறுவதாவது :

"ராஜ்யமானது, கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடு செய்து, சுய ஆட்சியின் உறுப்புகளாக, அவை வேலை செய்வதற்கு, அவசியமான சக்திகளையும் அதிகாரங்களையும் அளிக்க வேண்டும்."



கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"
—பாரதியார்.

மாடி 7 | அக்டோபர் 1961 | படி 1

அஞ்சலி

விடிவு காலம் ஏற்படாமல், நம் நாடு, அடிமை இருளில் ஆழ்ந்திருந்த பல ஆண்டுகளுக்கு முன்பு, நம்மையும் அறியாமலேயே, அக்டோபர் இரண்டாம் தேதிக்கு, ஒரு தனி முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டது. கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் நாம் எல்லோரும், பல நல்ல முயற்சிகளை, அந்தப் புனித தினத்திலேயே ஆரம்பித்தோம். அதன் மூலம், அந்த நாளின் பெருமை உயர்ந்ததோ, இல்லையோ, நமக்குத் தெரியாது. ஆனால், அதன் விளைவாக, நம்மை நாமே உயர்த்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது என்பது மட்டும் உறுதி.

அக்டோபர் இரண்டாம் தேதியுடன் 'கிராம நலம்' இதழுக்கு, மற்றோர் ஆண்டு பூர்த்தியாகிறது. கடந்த சில மாதங்களாக, புதிய பஞ்சாயத்து ஆட்சி அமைப்புக்குப் பொருத்தமான வகையில், நம்முடைய சிந்தனைக்கும், நடைமுறை வேலைத் திட்டத்திற்கும் ஏற்ற முறையிலே, தேவையான எல்லா மாறுதல்களையும், இந்தத் துறையில் செய்ய முயன்று வருகிறோம். இந்த மாறுதல்களுக்கு ஒப்பவே 'கிராம நல'மும் மாறுதல் அடைந்து வருவதை, நம் வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அரசாங்கத்தின் பல்வேறு சாதனைகளை மட்டும் வெளியிட்டு வந்த இந்தப் பத்திரிகை, இன்றைய தினம், புதிய பஞ்சாயத்து ஆட்சியைப்பற்றிய எல்லா முக்கிய விஷயங்களையும், பொது மக்களுக்கு விளக்கிக் கூறும் கல்விச்சாதனமாக, பணிபுரிய முயன்று வருகிறது.

கடந்த காலத்தில், நிறைவேற்றியுள்ள வேலைகளைப்பற்றி, நாம் பெருமைப்பட நியாயமுண்டு. அதே சமயத்தில், எதிர்காலத்தைப் பற்றி, நம்பிக்கையோடு எண்ணிப்பார்த்து, ஆவன செய்வது, நம் கடமை. எனவே, வருங்காலத்தில், இன்னும் கடினமான வேலையை நாம் செய்து முடித்தாக வேண்டும். "மந்திரத்தால், மாங்காய் விழுந்துவிடாது." நம் இலட்சியத்தை அடைவதற்கு, நம்மிடையே சலியாத உழைப்பு வேண்டும்.

நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, 'நாட்டின் நல்வாழ்வு' என்ற மாபெரும் இலட்சியத்தை நோக்கி புனித யாத்திரை செய்கிறோம். இந்தக் கூட்டு முயற்சியில், தோளோடு தோள்நின்று, ஒத்துழைத்துப் பணிபுரியுமாறு, எல்லோரையும் வேண்டுகிறோம்.

கடந்த காலத்தில் இருந்ததைவிட, கிராம மக்களின் வாழ்வுச் சுமை, கணிசமான அளவு, குறைய வேண்டும். அவர்களுடைய வாழ்வில், வளம் பெருகி, இன்பம் தழைக்க வேண்டும். இதற்கான சேவையில், நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதே, நம் தேசப்பிதாவுக்கு, நாம் செலுத்தும் உண்மையான காணிக்கை; இதயபூர்வமான அஞ்சலி.

"திறமை மிக்க நல்லாட்சியாக பஞ்சாயத்து ஆட்சி விளங்க வேண்டும்"

முதல் அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

காந்தி ஜெயந்தி விழாவை, பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாகும் நன்னாளாக, நாம் கொண்டாடி வருகிறோம். இன்றைய தினம், தமிழ்நாட்டிலே, புதிதாக 169 பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமாகின்றன. சென்ற வருஷம், காந்தி ஜெயந்தி விழாவின் போது, முதன்முதலாக 75 பஞ்சாயத்து யூனியன்கள், எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பமாயின. அதை அடுத்து, தமிழ் வருஷப்பிறப்பின் போது, மேலும் 129 பஞ்சாயத்து யூனியன்கள் தோன்றின. மூன்றாவது தொகுதியாக, இன்று ஆரம்பமாகும் பஞ்சாயத்து யூனியன்களுடன், தமிழ்நாடு முழுவதிலும், 373 பஞ்சாயத்து யூனியன்களும், சுமார் 12,000 பஞ்சாயத்துக்களும் வேலை செய்து வருகின்றன. இவ்வாறு சென்ற ஒரு வருஷ காலமாக புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை, படிப்படியே மூன்று கட்டங்களில், நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

பஞ்சாயத்து யூனியன்கள், காந்தி ஜெயந்தி விழாவின்போது ஆரம்பமாவதிலே, ஒரு விசேஷ பொருத்தம் இருக்கிறது. அதாவது காந்தி மகான் பிறந்த நாள், ஆக்க சக்திகளுக்கெல்லாம் ஊக்க மூட்டும் மங்களகரமான தினம். நமது நாட்டின், சமீபகால சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், மகாத்மா காந்தியின் அபார சாதனை நன்கு விளங்கும். அடிமை வாழ்வில் மூழ்கிக் கிடந்த நமது நாட்டு மக்களுக்கு, ஒரு புதிய சக்தியை மகாத்மா காந்தி உண்டாக்கினார். ஒற்றுமை, கட்டுப்பாடு, உறுதி, சமுதாய சேவை முதலிய நல்ல குணங்களை, தமது அரசியல் வாழ்வின்மூலம் வளர்த்ததன் பயனாக, பாமர மக்களின் வாழ்விலே, மறுமலர்ச்சி ஏற்பட்டது; புதிய நம்பிக்கை பிறந்தது; தேசிய விழிப்பு ஏற்பட்டது. பொது ஜனங்களிடம், பொறுப்புணர்ச்சி வளர்ந்தது. ஜாதி, மொழி, நிறம், மாகாணம் முதலிய வேற்றுமைகளை மறந்து, "பாரதநாடு முழுவதும் ஒரே குடும்பம்" என்ற தேசிய உணர்ச்சி வேரூன்றியது. பொது நல வாழ்க்கையில், ஒழுக்கம், சத்தியம், உண்மை, தைரியம், உழைப்பு முதலிய உயர்ந்த பண்புகள் மிகவும் அவசியம் என்பதை மகாத்மா காந்தி எடுத்துரைத்தார்; அப்படியே வாழ்ந்தும் காட்டினார்.

'அவர் வாழ்வே நமக்கு வழிகாட்டி'

அவருடைய வாழ்க்கை, நமக்கெல்லாம் வழிகாட்டும் துருவ நட்சத்திரம். உயர்ந்த லட்சியத்திற்கு, ஒரு சிறந்த உதாரணம். எனவே, அவர் பிறந்த நாளை, ஆக்க சக்திகள் எல்லாம் புத்துயிர் பெறும் பொன்னாளாக நாம் கருதுகிறோம். அதையொட்டியே, காந்தி ஜெயந்தியை பல்லாண்டுகளாகக் கொண்டாடி வருகிறோம். அந்த விழா, தேசிய ஒற்றுமைக்கு வித்திட்டு, கிராம நிர்மாணத் திட்டங்களுக்கெல்லாம், உரமூட்டி வருகிறது. மகாத்மா காந்திஜி வாழ்ந்துவந்த காலத்திலேயே, "காந்தி ஜெயந்தி"யைப் பாரதநாட்டு மக்கள் உற்சாகத்தோடு கொண்டாடினர். அப்போதுகூட, மகாத்மா காந்திஜி" என் பெயரில் வேண்டாம்; "சர்க்கா ஜெயந்தி" என்று கொண்டாடலாம்" என்று அடக்கத்தோடு நமக்கு அறிவுரை சொன்னார். கிராமப் பண்பாட்டுக்குப் புதுவாழ்வு அளிக்கும் கொள்கையின் சின்னமாக, சர்க்கா விளங்குகிறது. கதர் வளர்ச்சியை மையமாகக் கொண்டு, கிராமத் தொழில்கள் செழிப்பதற்கான திட்டங்களை அவர் வகுத்துக் கொடுத்தார்.

இன்றைய தினம், அந்த மகானின் பூத உடல், நம்முடன் இல்லை. ஆனால் அவர் கற்றுக்கொடுத்த உயர்ந்த கொள்கை, நம்மிடையே வாழ்கிறது. மகாத்மாவின் அனுபவ சித்தாந்தம், பாரத சமுதாயத்தை, முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்கிறது. அவர் கண்ட கனவுகள், படிப்படியாக நனவாகி வருகின்றன. "நமது நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும் வளமான நல்வாழ்வு பெற்று, ஒவ்வொன்றும் ஒரு தனிக் குடியரசாக விளங்கவேண்டும்" என்பது அவர் கோரிக்கை. மகாத்மாவின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் சாதனமே, புதிய பஞ்சாயத்து ஆட்சி.

கிடைத்த சுதந்திரம் பெருமக்களுக்குப் பயன்பட . . .

சுயராஜ்யத்தின் பலன், எல்லா கிராமங்களுக்கும் செல்லவேண்டும். அப்போதுதான், ஜனநாயக முறையில் உண்மையான சுயராஜ்யமாக இருக்கமுடியும். "கடையனுக்கும் கதிமோட்சம்" கிடைக்கச் செய்வதே, காந்தியடிகள் சொன்ன சுயராஜ்யத்தின் லட்சியம். தமது கடைசிக் காலத்தில், "சர்வோதயம்" என்ற பெயரில் இந்தக் கொள்கையை அவர் வற்புறுத்தி வந்தார்.

காந்தியடிகள் வகுத்த ஜனநாயகக் கொள்கையை நிறைவேற்ற, நாம் முயன்று வருகிறோம். புதிய பஞ்சாயத்து ஆட்சி, தமிழ்நாட்டில் வேரூன்றி வருகிறது. கிராம நல வேலைகளை, பஞ்சாயத்துக்களே ஏற்று நடத்தும் நல்ல சந்தர்ப்பம், இப்போது ஏற்பட்டிருக்கிறது. விவசாயம், கைத்தொழில், கல்வி, குடிதண்ணீர் வசதி, ரஸ்தா வசதி, மாதர் நலம், குழந்தைகள் பராமரிப்பு, வைத்திய வசதி, சுகாதாரம் முதலிய பல்வேறு பொறுப்புக்களை, கிராமப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொண்டு உள்ளன.

முக்கியமாக, உணவுப் பெருக்கத்துக்கான திட்டங்களை, உருவாக்கி நடத்தும் பொறுப்பை பஞ்சாயத்து ஆட்சி இப்போது புதிதாக ஏற்றுக்கொண்டுள்ளது. சென்ற ஆகஸ்டு மாதத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஒரு சிலரும், அரசாங்க அதிகாரிகளும், இதைப்பற்றி விரிவாக ஆலோசித்து அனுபவ சாத்தியமான திட்டம் ஒன்றை, தயாரித்திருக்கிறார்கள். கிராம உணவு உற்பத்தியைப்பற்றி சரியான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கவும், தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து நிர்வாகம், இந்தப் புதிய கடமைகளை, தக்க வகையில், திறமையாக நிறைவேற்றும், என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கிராமங்களிலே, நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதற்கு, குடிமராமத்து வேலைகளில் பொது ஜனங்கள் உற்சாகத்தோடு ஈடுபட்டு வருகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாபநாசம், கீவளூர் ஆகிய பஞ்சாயத்து யூனியன்கள், இத்துறையில் சிறந்த முறையில் வழிகாட்டியிருக்கின்றன. பொதுஜன ஒத்துழைப்பால் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய சாதனையை அறிந்து, ஆனந்தம் அடைகிறேன். இதில் பங்குகொண்ட எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும், நான் பாராட்டுகிறேன். தஞ்சை மாவட்டத்தில், மேலும் 14 பஞ்சாயத்து யூனியன்கள் குடிமராமத்து வேலையில் ஈடுபடத்தயாராய் உள்ளன. மற்றும், பல்வேறு மாவட்டங்களிலும், குடிமராமத்து வேலையில் ஈடுபட, அநேக பஞ்சாயத்து யூனியன்கள், முன் வந்து உள்ளன. இவையெல்லாம், பஞ்சாயத்து ஆட்சியின், நற்பலன்களாகும்.

கிராமங்களில் கல்வி வசதி பெருக, பஞ்சாயத்து ஆட்சி விசேஷப் பொறுப்புடன் செயலாற்றி வருகிறது. கடந்த, சுமார் ஒரு வருஷ காலத்தில், ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகம் செம்மையான முறையில் நடைபெற்று வருவதை பலர் நேரில் கண்டிருக்கலாம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும், தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள பள்ளிக் கூடங்கள், மற்ற பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வேலைகளில் அக்கறைக்கொண்டு தக்கமுறையில் சிரத்தை எடுத்துக்கொண்டால், மேலும் நல்ல பலன்களைக் காணலாம்.

நமது சமுதாயத்தில், தாய்மார்களின் பொறுப்பு மிகவும் அதிகம். வீட்டு நலனுக்காக, அவர்கள் ஓயாது உழைப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அதேபோல், நாட்டு நலனிலும் அவர்கள் தமக்

தள்ள பொறுப்பை அறிந்து, கடமையைச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். மகாத்மா காந்திக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்த நம் அன்னை, கஸ்தூரிபாயின் சேவையை, நம் நாட்டு மாதர் நன்கு அறிந்து போற்றவேண்டும்.

இவ்வாண்டு, காந்தி ஜெயந்தியை மாதர் நல விழாவாகக் கொண்டாடுமாறு, மாநில சமூக நல போர்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் மாதர் நல இலாகாவையும், பழைய சமூக நல போர்டையும், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் கீழ், இப்போது ஒன்றாக இணைத்திருக்கிறோம். மாதர் நலனுக்கும், குழந்தைகள் நலனுக்கும் வேண்டிய திட்டங்கள் இனிமேல், மேலும் அதிக உற்சாகத்தோடு செயல்பட்டுவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழகத்தின் தலைநகரில் மாநில பஞ்சாயத்து மகாநாடு

சென்ற வருஷம், பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமானபோது, மாவட்டத் தலைநகர் ஒவ்வொன்றிலும், பஞ்சாயத்துத் தலைவர்களின் மகாநாடுகள் வெகு விமரிசையாக நடைபெற்றன. இவ்வாண்டு தமிழ்நாடு முழுவதிலும், பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படத் தொடங்கிவிட்டதால், மாநிலப் பஞ்சாயத்து மகாநாடு ஒன்றை மாநிலத் தலைநகரான சென்னையில் நடத்த ஏற்பாடாகிவருகிறது. நமது பிரதமர் நேருஜி இம் மகாநாட்டைத் திறந்துவைக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

அக்டோபர் 8, 9 தேதிகளில், மாநில பஞ்சாயத்து மகாநாடு நடைபெறும். இதில் சுமார் 12,000 பஞ்சாயத்துத் தலைவர்களும், கிராம சமுதாயத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வார்கள். காந்தியடிகள் காட்டிய நல்வழியில், பஞ்சாயத்து ஆட்சியை சரியான முறையில், திறமையுடன் நடத்திச் செல்வதற்கு இம்மகாநாடு பெரிதும் உதவி புரியும் என்று நம்புகிறேன்.

கிராமக் குடியாட்சி-மக்களாட்சியின் பிரதிபலிப்பு

ஜனநாயக ஆட்சியின் சிறந்த சின்னங்களாக கிராமப் பஞ்சாயத்துக்கள் விளங்கவேண்டும். பொறுப்போடும், திறமையோடும், உண்மையோடும், ஒற்றுமையோடும், புதிய பஞ்சாயத்து ஆட்சி நடைபெறுவதற்கான வழிமுறைகள் இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஜனநாயக ஆட்சிக்கு அவசியமானது, அதிகாரப் பரவல்முறை. அதிகாரம் முழுவதும், ஒரே இடத்தில் குவிந்திருக்கக்கூடாது. பொறுப்பும், அதிகாரமும், பல்வேறு இடங்களில் பரவும் வகையில், ஆட்சி அமைப்பதே, மகாத்மா சொன்ன கிராம ராஜ்யம். புதிய பஞ்சாயத்து ஆட்சி, இத்தகைய கிராம ராஜ்யத்தை—பொறுப்பான கிராமப் பிரதிநிதிகளின் நிர்வாகத்தை, உருவாக்க முயல்கிறது. நம் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவெங்கும், பஞ்சாயத்து ஆட்சி, அந்தந்த பிரதேசத்திற்குத் தகுந்த முறையில் உருவாகி வருகிறது.

பொறுப்பை நன்கு உணர்ந்தவர்களே, தமக்குள்ள அதிகாரங்களையும், உரிமைகளையும், சரியான வகையில் புரிந்துகொண்டு, கடமையைச் செய்யமுடியும். எனவே, பொறுப்புணர்ந்த மக்கள் நடத்துகின்ற திறமைமிக்க நல்லாட்சியாக, பஞ்சாயத்து ஆட்சி விளங்கவேண்டும். காந்தியடிகள் நமக்குக் கற்றுத் தந்த அனுபவ சித்தாந்தத்தை உறுதியாக நம்பி, அதன்படி நடந்துகொண்டால், வெற்றி பெறுவது நிச்சயம். சுயநல மில்லாமல், ஒற்றுமையுணர்ச்சியோடு, மக்களுக்குச் சேவை செய்ய முன்வருபவர்கள் நடத்துகின்ற ஆட்சி, சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த அசைக்க முடியாத உறுதியோடு, பஞ்சாயத்து ஆட்சி, மேன்மேலும் வளரவேண்டும் என்று, மகாத்மா காந்தியின் பெயரால், வாழ்த்துகிறேன்.

காமராஜ்

[2—10—61-ல் சென்னை வானொலியில் முதல் அமைச்சர் நிகழ்த்திய சொற்பொழிவு]

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் பங்கு

1961 அக்டோபர் 2-ம் தேதியன்று ஏற்படப்போகும் மாற்றம்

1. தமிழ் நாட்டின் தல ஆட்சித் துறை வளர்ச்சியில், 1961-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி, முக்கியமான ஒரு மாறுதலை உண்டாக்கும். இந்த மாநிலத்தின் எல்லாப் பகுதிகளும் [நகராட்சிகள், சிறு நகர்கள், பாளையங்கள் (கன்டோன்மென்டுகள்) என்ற வகையில் ஏற்பட்ட, ஏற்படப் போகிற பகுதிகள் நீங்கலாக] 12,540 பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கப் பெற்று விட்டன. 1961 அக்டோபர் 2-ம் தேதியன்று, இப் பஞ்சாயத்துக்கள் அனைத்தும், 373 பஞ்சாயத்து யூனியன்களுள் அடக்கப் பெறும். இந்த மாநிலத்தின் கிராமப் பகுதிகள் அனைத்திலும் புது மாதிரியான தல ஆட்சி முறை அமுலுக்கு வந்து விடும். 11 மாவட்டக் கழகங்களும் 1961 அக்டோபர் 2-ம் தேதியன்று மறைந்து விடும். சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம் (1958) தல ஆட்சி முறையில், எத்தகைய சீர்திருத்தங்களை எதிர் நோக்கியுள்ளதோ, அச் சீர்திருத்தங்கள் அனைத்தும், இத் தேதியிலிருந்து அமுலாகிவிடும்.

பழைய முறையில் அமைந்த பஞ்சாயத்துக்கள் தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கும், சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி (1958) அமைகிற பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

2. சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம் (1958) சட்டமாக ஆகின்றவரை, நிலை பெற்றிருந்த மாவட்டக் கழகங்கள், முன்னுள் தாலுகா கழகங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகிய தல ஸ்தாபனங்களும், பஞ்சாயத்துக்களும் நகராட்சிப் பொறுப்புக்களை மட்டுமே நிறைவேற்றி வந்தன. ஒரு குறிப்பிட்ட அளவு வரை துப்புரவையும், போக்குவரத்தையும், தெரு விளக்குப் பணியையும், சாக்கடைப் பணியையும், கூடுமானவரை தொடக்கக் கல்வியையும் இவை கவனித்து வந்தன. சாதாரணமான சுகாதார வசதிகளையும் உண்டாக்கித் தந்தன. இந்தத் தல ஸ்தாபனங்களின் நிதி ஆதாரம் மிகவும் சிறிய அளவில் இருந்தது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும், தனித்த முறையிலும் இவை இயங்கி வந்தன. கிராமப் பஞ்சாயத்துக்கும் மாவட்டக் கழகத்துக்கும் இயற்கையான தொடர்பு ஒன்றும் இருக்கவில்லை. வரப் போகும் புதிய முறையில், மாவட்டக் கழகத்தின் வாரிசாக ஏற்படப் போகும் பஞ்சாயத்து யூனியன், கிராமப் பஞ்சாயத்துக்களின் கூட்டுறவு யூனியனாக விளங்கும் கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் கூடி அமைக்கப் போகும் பஞ்சாயத்து யூனியன் மன்றம் தான் பஞ்சாயத்து யூனியனின் ஆட்சிக் குழுவாக அமையப் போகிறது. அமைப்பு முறையில் ஏற்படப் போகும் இந்த மாற்றங்கூட முக்கியமானதுதான் என்றாலும், நிறைவேற்றப் போகும் கடமையிலும், நிதி ஆதாரத்திலும் ஆழ்ந்ததும், அடிப்படையானதுமான மிக முக்கியமான மாற்றங்கள் நிகழ உள்ளன. நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சியில், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் சுய ஆட்சி நிறுவனங்கள் என்ற உரிமையுடன், பங்குகொள்ளுமாறு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டம் (1958) வழி செய்கிறது. 12,540 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தத்தமக்கு உரிய பங்கை அறிந்து, அவற்றை நிறைவேற்றவும் இச் சீர்திருத்தம் வழி செய்கிறது. இந்த மாநிலத்தில் நிலவி வரும் தல ஆட்சி முறையில் ஏற்படப் போகும் பெரும் மாற்றத்தைப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் உட்கொண்டு இருக்கிறது. அத்துடன் இல்லாமல், மாநிலத்தில் இப் பொழுது அமுலில் இருந்துவரும் அபிவிருத்தி நிர்வாகத் துறையில் ஏற்படப் போகும் பெரிய மாறுதலையும் இது குறிக்கிறது. பொதுவாக, சென்ற 10 ஆண்டுகளில் முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதில் ஏற்பட்ட சாதனை, அனுபவம் என்பவற்றுடன், சிறப்பாக, தேசிய வளர்ச்சிப் பணியாக மேற்கொள்ளப்பெற்ற சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றியதில் ஏற்பட்ட சாதனையும், அனுபவமும் சேர்ந்து, இப் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வழி வகுத்தன.

திட்டத்தை அமுலாக்குவதில் குறிப்பிட்ட பொறுப்புக்களை ஒதுக்குதல்

3. தேசம் முழுவதும் முழு மூச்சாக முயற்சி செய்ய வேண்டும் என்பதே, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். செய்து முடிக்க வேண்டிய பல்வேறு பணிகளே, திட்டத்தில் அடங்கியுள்ளன. இப் பணிகள், இயல்பாலும், தேவைப்படும் நிதி ஆதாரம், தொழில் நுட்பம் ஆகியவற்றாலும், நடைபெற வேண்டிய இடம், கொண்டு செலுத்தக் கூடிய நிறுவனம், செய்து முடிக்கும் முறை ஆகியவற்றாலும் தம்முள் மாறுபடுகின்றன. எஃகு யந்திரசாலைகள், இரயில் பாதைகள் ஆகியவற்றை நிறுவுதல் முதலாக கிராமப் பகுதிகளில் விவசாய உற்பத்தியைப் பெருக்குதல், பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தல், ஒவ்வொரு குடும்பமும் தன் அளவைக் கட்டுப்பாடு செய்தல் ஆகிய வரை பல

திறப்பட்ட பணிகளாக உள்ளன இவை. இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும், இன்னும் சிறந்த வாழ்வை அளிக்க வேண்டும் என்பதற்காகவே, இத் திட்டம் தீட்டப் பெற்றுள்ளது; இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரையும் இத் திட்டம் பாதிக்கத்தான் செய்யும்.

4. பல திறப்பட்ட இந்த மாபெருந் திட்டம் நிறைவேற வேண்டுமானால், மத்திய, மாநில அரசுகளும், நாட்டிலுள்ள பல்வேறு தல ஆட்சி ஸ்தாபனங்களும், வரையறுத்துப் பிரிவினை செய்யப் பெற்றுள்ள பொறுப்புக்களில், குறிப்பிட்ட பணிகளை மேற்கொண்டுதானாக வேண்டும். மத்திய, மாநில அரசுகளைப் பொறுத்த மட்டில், பொறுப்புக்கள் பிரிவினை, அரசியல் அமைப்பிலேயே விளக்கமாகக் கண்டுள்ளது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் என்பவற்றைப் பொறுத்த மட்டில், பொறுப்புக்கள் பிரிவினைப் பற்றிப் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் பொதுவான முறையில் கண்டுள்ளது. சட்டத்தில் பொதுவாகக் குறிக்கப் பெற்றுள்ளவற்றை, அந்தச் சட்டத்தின் 66-வது பிரிவின் படி செய்யப் பெறும் அரசாங்க ஆணைகள் விரிவான முறையில் விளக்குகின்றன.

5. திட்டத்தில் கண்டுள்ள பெரிய பணிகளை, பெரிய நிறுவனங்கள் எடுத்து நிறைவேற்றுவதுதானே நியாயமாகும். நிறைவேற்ற வேண்டிய பணியின் அளவு, இயல்பு ஆகியவற்றின் அடிப்படையில், அதன் பல்வேறு பொறுப்புக்களை யார் யார் ஏற்றுக் கொள்வது என்பது பற்றிப் படிப்படியாக வரையறை செய்யப் பெற்றுள்ளது. எஃகு ஆலைகள் அமைத்தல், பெரிய தொழிற்சாலைகள் நிறுவுதல், இரயில் பாதைகள் அமைத்தல் போன்ற பணிகளை யூனியன் அரசாங்கம் மேற்கொள்கிறது. பெரிய பாசனத் திட்டங்கள் அமைத்தல், மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல், மின்செலுத்து சாதனங்களை நிறுவுதல், மாநில நெடுஞ்சாலைகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றை அமைத்தல், நடுத்தரத் தொழில்களையும், கல்லூரிகளையும், பள்ளிக்கூடங்களையும் நிறுவுதல் போன்றவற்றை மாநில அரசாங்கம் மேற்கொள்ளுகிறது பஞ்சாயத்து நிர்வாகங்கள் (ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு பஞ்சாயத்து யூனியனும் அதற்குட்பட்ட பஞ்சாயத்துக்களும் கொண்டது) உற்பத்தித் துறையில் சில பணிகளை (உணவு உற்பத்தியைப் பெருக்கல், கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தை அமுலாக்கல் போன்றவை) மேற்கொள்ளுகின்றன. மேலும், இந்த நிர்வாகங்கள் இயல்பான நல்வாழ்வுப் பணிகள், தொடக்கக் கல்வியை அனைவரும் பெறுமாறு செய்தல், விரிவான முறையில் தாய்நல உதவி, சேய்நல உதவி ஆகியவற்றை வளர்த்தல், பாதுகாக்கப் பெற்ற குடிநீர் வழங்கல், கிராமச் சாலைகளை அபிவிருத்தி செய்தல் என்பன போன்ற பண்பாட்டு, நலத்துறைகளிலும் பங்கு கொள்கின்றன.

6. இப் பணிகள், தனிப்பட்ட விவசாயிகள், தனிப்பட்ட தொழிலாளிகள், தனிப்பட்ட குடும்பங்கள், ஆகியவர்களைப் பற்றியுள்ளன என்பதை அறியலாம். ஆதலால், இவற்றைக் கொண்டு செலுத்தும் தல நிறுவனம், உள்ளூர் மக்களின் பக்கத்திலேயே இருந்து கொண்டு, அவர்கள் சார்பாகப் பொறுப்பை ஏற்று, திட்டமும் வகுக்க வேண்டும். மேலும் இந்த நிறுவனங்கள் தனிப்பட்ட ஒவ்வொருவரையும் தூண்டுதல் செய்து பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பெற வேண்டும். ஆகவேதான், வட்டார, கிராம நிலைமையில் திட்டமிட்டு, நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் நிர்வாக உறுப்புக்களாக, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப் பெற்றுள்ளன.

7. மேலே கூறியுள்ள கருத்துக்களின் அடிப்படையில் தான் சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத் (1958) தின் 66-வது பகுதி கீழ்க் கண்டவாறு பேசுகிறது. "இச் சட்டத்தின்படி, ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திற்கு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தை நியமித்தவுடன், அரசாங்கம் வரையறுக்கும் நிபந்தனைகட்கு உட்பட்டு, சமுதாய அபிவிருத்தித் திட்ட தேசிய நல வளர்ச்சிப் பணியை, குறிப்பாக, தனிப்பட்ட முறையிலும் கூட்டுறவு முறையிலும் நிறுவப்படும் விவசாய வளர்ச்சிக்குத் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளையும், கிராமத் தொழில், கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றையும், கொண்டுசெலுத்தும் பொறுப்பை, அந்த மன்றத்திடம் அரசாங்கம் ஒப்படைத்து விடும்." வட்டாரங்களின் நிலையில் நிர்வகிக்கப்படக் கூடிய எல்லாத் திட்டப் பணிகளையும் யூனியன்களே நிறைவேற்றுமாறு ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களிடம், எந்தக் குறிப்பிட்ட பணிகளை, யூனியன்கள் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதையும் இந்த ஒப்படை ஆணையிலேயே கண்டுள்ளது. இந்த ஒப்படையில் உள்ள பொதுவான நிபந்தனை என்னவென்றால், பஞ்சாயத்து யூனியன் (பஞ்சாயத்துக்களைக் கலந்து கொண்டு) அந்த வட்டாரத்துக்குரிய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியனும், தனித்தனியே பொறுப்பேற்கக் கூடிய பணிகள் அனைத்தும் அத் திட்டத்தில் இடம் பெற வேண்டும். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் (தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தில் காணப்படுவதுபோல) குறிப்பிட்டத் திட்டங்கள், நடைமுறை இலக்குகள், நிதித் தேவை அளவுகள் என்பவை, முழு வடிவத்துடன் எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் காட்ட வேண்டும். முதல், இரண்டாவது தொகுதி வட்டாரங்களில் உள்ள 204 பஞ்சாயத்து யூனியன்களிலும் இத்தகைய திட்டத் தயாரிப்பு ஏற்கனவே தொடங்கப் பெற்று விட்டது. மூன்றாவது தொகுதியில் வரப் போகும் 169 யூனியன்களிலும் 1—1—1962-க்குள் இவ்வேலை நடைபெற்று விடும்.

வட்டார ஐந்தாண்டுத் திட்ட நிதி வடிவ அமைப்பு.

பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்

8. மாநிலம் முழுவதிலும் உள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றிற்குக் கிடைக்கக் கூடிய நிதி ஆதாரங்களை பெரும் போக்காகத் தெரிவிக்கும் முறையில், மாநில அரசாங்கம், பஞ்சாயத்து அபி விருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இரண்டாம் திட்டம் தயா ராவதற்குள் "கிராமத் திட்டம்", "பிராந்தியத் திட்டம்" என்பவற்றைத் தயாரித்த அனுபவத்திலிருந்து ஒன்று வெளிப்பட்டது. மாநில அரசாங்கத்திடமிருந்து கிடைக்கக் கூடிய நிதி ஆதாரம் எவ்வளவு என்று உறுதியாகத் தெரியாத பொழுது, இவ்வாறு உள்ளூர்த் திட்டங்கள் வகுப்பது, நடைமுறைக்கு உதவாமல் போவதுடன், உள்ளூர்வாசிகளின் தேவைகள் எவை எவை என்று ஒரு பட்டியல் தொகுப்பதாகவே முடிந்தது. பல் வேறுபட்ட பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை களின் இடையே, கிடக்கக் கூடிய நிதி ஆதாரத்தைக் கொண்டு, நிறைவேற்றக்கூடிய முக்கியமான பணிகள் எவை என்பதை ஆய்ந்து, குறிப்பிட்ட பயனை அவற்றின் மூலம் அடையக்கூடிய முறையில் அப்பணிகளைத் தராதரப்படுத்தித் தொகுப்பதுதான் திட்டம் தயாரித்தல் எனப்படும். ஒரே இடத்தில், பலவான அரசியல் துறைகள் தத்தமக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியை வைத்துக்கொண்டு, ஒரே மாதிரியான பணிகளை ஒருவருக் கொருவர் தொடர்பில்லாமல் செய்து வந்தது தெரிந்தது. திட்டத்தின் எந்த எந்தப் பணிகட்கு எந்த எந்த நிதி ஒதுக்கம் செய்யப் பெற்றுள்ளது என்பதைப் பஞ்சா யத்து யூனியன் நிலைமையில் அறிய வேண்டுவதும், இப் பணிகள் பலவற்றையும் உள்ளடக்கிய விரிவான திட்டத்தை வரைவதும் யூனியனின் கடமையாகும். அந்த நிலையில் நிதி ஆதாரங்கள் மாநில, மத்திய அரசுகளின் எந்தத் துறை அல்லது அமைச்சிலிருந்து வருகின்றன என்று அறிய வேண்டிய தேவையே இல்லை. எனவே, வட்டார அளவில் திட்டமிடவும், அபிவிருத்தி செய்யவும், பஞ்சாயத்து யூனியன் ஒரு யூனிட்டாக இருந்து தொழிற்பட வேண்டுமானால், மேலும், அமுலாக்கப்பட வேண்டிய பணிகளின் திட்டத்தை அந்த யூனியனே தயாரிக்க வேண்டுமானால், யூனியன் நிறை வேற்றவேண்டிய பல்வேறு பணிகளுக்கென்று ஒதுக்கப் பெற்றுள்ள நிதிகளை ஒன்று சேர்க்க வேண்டியது அவசியமாகப் பட்டது. இவ்வாறு ஒன்று சேர்த்த நிதியை, மறுபடியும் பணிவாரியாக ஒதுக்கம் செய்து, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், மாநில அரசாங்கத் திடமிருந்து, மூன்றுவது திட்டத்தின் பல்வேறு பணி களுக்கும் பெறக்கூடிய நிதி எவ்வளவு என்பதை அறியுமாறு செய்ய வேண்டும். ஒரே மாதிரிப் பணி களுக்கு மத்திய, மாநில அரசுகளில் பல்வேறு துறை களும், பல்வேறு அமைச்சுகளும் தனித்தனியே அளித்து வந்ததால் ஏற்பட்ட வேறுபாடுகளுடன் கூடிய பல்வேறு அளவான நிதி உதவிகளையும் ஒரு வழிப்படுத்தி, தேசிய பணிவாரித் தராதர முக்கியத்துவங்களை இந்த நிதி உதவித் திட்டத்திலேயே அமையுமாறு செயயப பெற்றுள்ளது. மிகவும் முக்கியம் வாய்ந்த பணிகள், மாநில அரசாங்கத்திலிருந்து அதிகப்படியான உதவி யைப் பெறுமாறு ஏற்பாடு செய்யப் பெற்றது.

பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்

9. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் இரண்டு அடிப்படைகளில் தோன்றியது. முதலாவது அடிப்படை, சமுதாய அபிவிருத்தியின் வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். அடுத்து, தல ஆட்சி பற்றிய சட்ட மன்ற சர்வ கட்சிக் குழுவினரின் தல நிதித் துணைக் குழு, பஞ்சாயத்து ஆட்சி முறைக்குத் தேவைப் படும் வரவு செலவுத் திட்டம் என்ற தலைப்பில் சிபாரிசு செய்ததும் ஆகும். அடுத்த ஐந்து ஆண்டுகட்கு 373 பஞ்சாயத்து யூனியன்கட்கும், 12,540 பஞ்சாயத்து கட்கும் ஆகச் சேர்த்துத் தயாரிக்கப்பெற்ற பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் கீழே தரப் பெற்றுள்ளது.

பஞ்சாயத்து யூனியன் நிதிகள்

வருமானம் பற்றிய தலைப்புகள்-முக்கியத் தலைப்புகளும் சிறு தலைப்புகளும்.	கிராமப் பஞ்சாயத்து நிதிகள்.	பொது.	கல்வி.	உற்பத்தி.	(3) முதல் (4) வரையுள்ள பத்திகளின் மொத்தம்.	கிராமப் பஞ்சாயத்து நிதி பஞ்சாயத்து யூனியன் நிதி, இவற்றின் மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் லக்ஷத்தில்)			
I. பிரதேச வருமானங்கள் (சாதாரணமானவை)						
1. பிரதேச செஸ்	250	375	500	..	875	11,25
2. பிரதேச செஸ் சர்சார்ஜ்	..	500	..	..	500	500
3. ஸ்டாம்பு வரி, சர்சார்ஜ்	500	..	..	..	..	500
4. கிராம வீட்டு வரி	400	..	..	..	..	400
5. பிரதேச சிறிய வரிகள்	160	240	..	..	240	400
மொத்தம் ..	1,310	1,115	500	..	1,615	2,925

வருமானம் பற்றிய தலைப்புகள் முக்கியத் தலைப்புகளும் சிறு தலைப்புகளும்.	கிராமப் பஞ்சாயத்து நிதிகள்.	பொது.	கல்வி.	உற்பத்தி.	3 முதல் 4 வரையுள்ள பத்திகளின் மொத்தம்.	கிராமப் பஞ்சாயத்து நிதி, பஞ்சாயத்து யூனியன் நிதி இவற்றின் மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் லக்ஷத்தில்)			
II. அரசாங்க மானியங்கள் (சட்டபூர்வமானவை)—						
6. நிலவரி ஒப்படைப்பு (சட்டபூர்வமானது) ..	..	..	1,500	..	1,500	1,500
7. பிரதேசக் கல்வி மானியம்	..	..	1,800	..	1,800	1,800
8. பிரதேச ரெஸ் சர்சார்ஜ் (ஈட்டுமானியம்) ..	..	500	..	..	500	500
9. பிரதேச சாலை மானியம்	..	600	..	..	600	600
10. கிராம வீட்டு வரி (ஈட்டுமானியம்) ..	400	..	..	..	..	400
மொத்தம்	400	1,100	3,300	..	4,400	4,800
III. அரசாங்க மானியங்கள் (சட்டத்தில் சொல்லாதவை)—						
11. துணைக் கல்வி மானியம் (சட்டத்தில் சொல்லாதது).	..	..	1,200	..	1,200	1,200
12. பள்ளி உணவு மானியம்	..	..	600	..	600	600
13. சமூகக் கல்வி மானியம்	..	..	150	..	150	150
14. தாய் சேய் நல மானியம்	..	100	..	..	100	100
15. கிராம வேலைகள் மானியம்	1,500	..	200	..	200	1,700
16. பிரதேச பாசன மானியம்	..	..	..	200	200	200
17. விவசாய மானியம்	..	..	..	750	750	750
மொத்தம் ..	1,500	100	2,150	950	3,200	4,700
IV. பிரதேச (சிறப்பு) வருமானங்கள்—						
18. குடி மராமத்து வசூல் .. .. 19. கிராம அபிவிருத்தி வரி .. .. 20. கிராம அபிவிருத்தி நன்கொடை ..	500	..	600	200	800	1,300
பெரு மொத்தம், I முதல் IV வரை ..	3,710	2,315	6,550	1,150	10,015	13,725

		[ரூபாய் கோடிக் கணக்கில்.]
பஞ்சாயத்து யூனியன்கள்	..	100
பஞ்சாயத்துக்கள்	..	37
நகரப் பஞ்சாயத்துக்கள்	..	5
		142

10. மாநிலத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பெற்றுள்ள ரூ. 142 கோடியில், ரூ. 72 கோடி, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தம் நிர்வாகத்திற்கும், 1960–61 வாக்கில் தாம் புரிந்து வரும் நல் வாழ்வுப் பணிகளுக்கும் செய்து தீர வேண்டிய செலவினமாகும், எஞ்சியுள்ள ரூ. 70 கோடியில் திட்ட உதவியாக ரூ. 50 கோடியை மாநில அரசாங்கம் வழங்கும். இத் திட்ட உதவிக்கு இணையாகப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ரூ. 20 கோடியை வரி விதிப்பின் மூலமாகவும், நன்கொடை மூலமாகவும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்துக்குள் திரட்ட வேண்டும். ஒவ்வொரு வட்டாரமும், யூனியன் மூலமாகவும், பஞ்சாயத்துக்கள் மூலமாகவும், ஐந்தாண்டுகளில், சராசரி ரூ. 38 லட்சம் செலவு செய்யும்.

பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாததும் தொடர்புடையதுமான பிற பணிகள்

11. மேலே காட்டப்பெற்றுள்ள நிதி நிலையில், தேசிய வளர்ச்சிப் பணியின்கீழ் மாநில அரசாங்கத்தாரால் இலவசமாகக் கொடுக்கப் பெற்றுள்ள பணியாளர்பற்றி ஏற்படும் செலவு அடங்கவில்லை. இந்தப் பணியாளர் காரணமாக மூன்றுவது திட்டத்தில் ரூ. 12 கோடி செலவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில ஏஜன்சிகள் மூலம் வழங்கப்படும் கடன்கட்கு, யூனியன் மன்றங்கள் சட்ட பூர்வமான பொறுப்பு ஏற்றுக்கொள்ளாவிடினும், அவைபற்றி யோசனைகள் வழங்கும் திட்டக் காலத்தில் இவ்வாறு வழங்கப்படும் கடன் சுமார் ரூ. 15 கோடியாகும். மாநிலக் கதர், கிராமத் தொழில் போர்டின் வேலைகளையும், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப் பெற்றுள்ளது. இத்திட்டங்கட்கு ஆகும் செலவு சுமார் ரூ. 7 கோடியாகும். அனுபவம் கிடைக்கக் கிடைக்க, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத இனங்களையும், அதில் சேர்க்க நேரிடும்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்

12. பஞ்சாயத்து வளர்ச்சிக்காக, மாநிலத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த பிறகு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும் மாநிலத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் தன்னுடைய பங்கின் அளவை வரையறுக்குமாறு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கட்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் எடுக்கவேண்டிய மிக முக்கியமான முடிவு என்னவென்றால், பிரதேச வருமானங்களின் அளவை நிர்ணயிப்பதேயாகும். இந்த வருமானங்களின் அளவைக் கொண்டே, அந்த வட்டாரத்தின் திட்ட அளவு நிர்ணயிக்கப்படும். இந்த முறையில், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் முடிவுகளை வைத்துக்கொண்டு, வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும். நிதித்துறையில் கிடைக்கக்கூடிய ஆதாரங்களை யெல்லாம் திரட்டும் முறைகளை வகுப்பதுதான் வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். வளர்ச்சித் திட்டங்களை, நிறைவேற்றக்கூடிய முறையில் அமைப்பதற்கு, இது அடிப்படைத் தேவையாகும். இதனை முற்றிலும் செய்து முடித்த பிறகுதான், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு, தங்களுடைய நிதி முதலீடு எவ்வாறு இருக்குமென்பதையும், ஒப்படைக்கப்பட்ட நிதிகள் மூலம் எவ்வளவு வருவாய் வரும் என்பதையும், வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசாங்க மானியங்களாக எவ்வளவு தொகை கிடைக்கும் என்பதையும், திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மொத்தம் எவ்வளவு நிதி ஆதாரத்தைத் தாங்களாகச் சேகரிக்க வேண்டும் என்பதையும், ஒவ்வொரு வட்டாரமும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தேசியத் திட்டத்தின் வழி முறைகளைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்பதும், திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய பிரதேச ஆதாரங்களைச் சேகரிக்க வேண்டிய பொறுப்பை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதுமே இதனைச் செய்வதன் அடிப்படையான நோக்கமாகும்.

13. பிராந்திய வேறுபாடு காரணமாக நல்ல வளர்ச்சியடையாமல் பின் தங்கியுள்ள பகுதிகளும், மிக விரைவாக வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதே பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். மேலும் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி பிரதேச நிதி ஆதாரங்களைச் சேகரிப்பதில்கூட ஒரு வட்டாரத்திற்கும் மற்றொரு வட்டாரத்திற்கும் வேறுபாடு இருக்கின்றது என்பதையும், ஒரு சில வட்டாரங்களுக்கு ஏனைய வட்டாரங்களைவிட அதிகமான அளவில் மாநில அரசாங்க நிதி உதவி தேவைப்படுகின்றது என்பதையும், இந்த வரவு செலவுத் திட்டக் கொள்கை ஒப்புக்கொள்கிறது. வட்டாரங்களில் இடையேயுள்ள இந்த வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் முறையில், வட்டாரங்களை நான்கு தரங்களாகப் பிரித்து, உதவி வழங்க ஏற்பாடாகி இருக்கிறது. இந்த முறை முழுவதும், சட்ட மன்ற சர்வ கட்சிக் குழுவினரால் தோற்றுவிக்கப்பட்ட, ஒப்புக்கொள்ளவும்பட்ட புதிய நிதிநிலை முறையின் ஒரு பகுதி என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

14. ஒவ்வொரு யூனியனும் தனக்கேற்ற வரித் திட்டத்தை முடிவு செய்யவும், அதனை நிறைவேற்றப் படிப்படியான வழிகளைக் கையாளவும், திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் வகுத்தல் வசதி செய்து தருகிறது. யூனியன் மன்ற உறுப்பினர்கள், எந்த ஒரு குறிப்பிட்ட வேலைக்காக இந்த அதிகப்படியான வரி விதிக்கப்படுகிறது என்பதையும், குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு வளர்ச்சித் துறையில் உடனடியாக என்ன பயன் கிடைக்கும் என்பதையும், எடுத்து விளக்கவும் இது வழி செய்கிறது.

ஒவ்வொரு யூனியனும் திட்டத்திற்குட்பட்டுச் செய்ய வேண்டிய பணிகளை நிர்ணயித்தல்

15. யூனியன், நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு அதிலிருந்துதான் பணிகளை திட்டமிட வேண்டும். அத் திட்டத்தில் விவசாய உற்பத்திக்கு மிக முக்கியமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் உற்பத்தி அளவைப் பெருக்குவதில் தல முயற்சிகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதனை நிறைவேற்று வதற்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 2.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூ. 1 லட்சம் மாநில அரசாங்கத்திடமிருந்து இணைப்பு வேண்டாத மானியமாகக் கிடைக்கிறது. இதனை யடுத்து உள்ளூரில் சேகரிக்கப்படும் ரூ. 50 ஆயிரத்துடன் இணை மானியமாக மாநில அரசாங்கம் மற்றொரு லட்சம் தருகிறது. இந்தப் பணத்தை யூனியன் எந்தப் பணிகளுக்குச் செலவிட வேண்டுமென்பது பற்றிய பட்டியல் தரப்பெற்றுள்ளது. இணை வேண்டாத பணிகள், இணை உடைய பணிகள் என்ற இந்தத் தொகுப்புகளுக்குட்பட்டு, தலத் தேவைகளையும் சூழ்நிலைகளையும் பொறுத்து, வேண்டுமான முறையில் ஒரு திட்டத்தை அமைக்க யூனியனுக்கு முழு உரிமையுண்டு.

16. ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் அதற்கேற்ற விவசாய உற்பத்தித் திட்டத்தைத் தயாரிக்குமாறு ஆணை வழங்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு யூனியனும், அதற்குட் பட்ட கிராமங்களின் விவசாய உற்பத்தித் திட்டங்களின் தேவைகளை வட்டாரத் திட்டத்தோடு இணைக்க வேண்டும். மேலும், கதர், கிராமத் தொழில்கள் பற்றிய திட்டங் களையும் இதே முறையில் அமைப்பதற்கு வழி காட்டும் ஆணைகள் தயாராகி வருகின்றன.

17. கிராமப் பணிகள், அனைவருக்கும் தொடக்கக் கல்வியை வழங்கல், குடும்பக் கட்டுப்பாடு ஆகியவை பற்றியும், பணி முறை வழிகாட்டிக் கருத்துரைகள் வழங்கப்பெற்றுள்ளன. தேசிய அபிவிருத்தி மன்றத்தின் முடிவுக்கேற்ப, கிராமப் பணிகள் என்பவை கிராமத் தண்ணீர் வழங்கல், இணைப்புச் சாலைகள், கிராமத் தொடக்கப் பள்ளிக்கூடங்கள் என்ற மூன்றுடன் நிறுத்தப் பெற்று, அவற்றுள்ளும் இந்த வரிசையிலேயே முக்கியத் துவம் வழங்கப் பெற்றுள்ளன. மூன்றாவது திட்டத்தின் முடிவிற்குள் ஒவ்வொரு கிராமத்திலும் இந்த அடிப்படை யான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று நம்பப் படுகிறது. மூன்றாவது திட்டக் காலத்தில், ஒவ்வொரு யூனியனும் இந்தப் பணிகளை நிறைவேற்ற அரசாங்கத் திடமிருந்து 4 லட்சம் ரூபாயை மானியமாகப் பெறும். தொடக்கப் பள்ளிகளில் அதிகப்படியான பிள்ளைகளைச் சேர்க்கும் படிப்படியான திட்டத்தை மேற்கொண்டு, மூன்றும் திட்ட முடிவில், அனைவரும் தொடக்கக் கல்வி பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை யூனியன்கள் ஏற்படுத்த வேண்டும்.

திட்டத்தை நிறைவேற்றுவதில் பஞ்சாயத்துக்களின் பங்கு

18. யூனியனின் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை முடிவு செய்துவிட்ட பிறகு, இப்பணிகளை நிறைவேற்றுவதில் பஞ்சாயத்துக்கள் முக்கியமான பொறுப்பை ஏற்க வேண்டும்.

உணவு உற்பத்தித் துறையில், கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை மேற்கொண்டு, உள்ளூர் ஆதாரங்களைச் சேகரித்தல், யூனியன் மூலம் கிடைக்கின்ற மானியங்களைப் பயன்படுத்தல், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு உள்ள வசதிகளை முறைப்படி அனைவருக்கும் கிடைக்கும் படி செய்தல் ஆகியவற்றைப் பஞ்சாயத்துக்கள் நிறை வேற்ற வேண்டும்.

19. திட்ட முறையில், கிராமத்திற்குரிய வளர்ச்சிப் பணிகள், யூனியனால் ஒப்புக்கொள்ளப்பெற்ற பிறகு, அந்தப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு பஞ்சா யத்தைச் சேர்ந்ததாகும்.

20. பள்ளிக்கூடம் போகக்கூடிய வயது வந்த பிள்ளைகள் அனைவரையும், பள்ளிக்கூடத்தில் சேர்த்து, அங்கேயே அவர்கள் தொடர்ந்து படிக்குமாறு செய்யும் பொறுப்பை, பஞ்சாயத்து சமுதாயக் கல்விக் குழு ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், ஒவ்வொரு வீட்டினரும், தனிப் பட்டோர் திட்டப் பணிகளை அறிந்து கொள்ளுமாறு செய்வதும், கிராமம் முழுவதும் இதை நிறைவேற்றுவதற் குரிய உற்சாகத்தைப் பெறுமாறு செய்வதும் இக்குழுவின் கடமையாகும்.

தேசத்தின் திட்டமிட்ட வளர்ச்சியில், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் தலையாய பங்கு

21. மேலே கூறியவற்றைக் கண்டால், தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தின் மிக முக்கியமான சில பகுதிகள், பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன் களிடமும் ஒப்படைக்கப் பெற்றுள்ளன என்பது நன்கு விளங்கும். ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பெற்ற தல சுய ஆட்சி நிறுவனங்களின் மூலம் திட்டமிட்ட வளர்ச்சியைப் பெறுகின்ற இம்முறையையோ, அன்றி இதில் பங்கெடுத்துக்கொள்வோரின் எண்ணிக்கையையோ, இந்தியாவை அல்லாத, உலகத்தின் பிற நாடுகளில் இதுவரைக் கண்டதில்லை. இந்தியாவிற்கும் இந்த மாநிலத் திற்குங்கூட இம்முறை புதிதுதான். புதிய பஞ்சாயத்துத் தலைவர்கள் காட்டப்போகும் ஆக்க முயற்சியின் தன்மை யைப் பொறுத்துத்தான் இம் முயற்சியின் வெற்றி அமைந் துள்ளது. இத்தகைய தலைமைத் தன்மை ஏற்கனவே தோன்றிவிட்டது என்பதற்குரிய அறிகுறிகள் காணப் பெறுகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இது இன்னும் வளர்ந்து பயன் தருவதாகுக.

சி. சுப்பிரமணியம்
நிதி அமைச்சர்.

—0—

பஞ்சாயத்து ஆட்சியின் வேலைத் திட்டம்

(குடும்பக் கட்டுப்பாடு)

1. நோக்கம்—

. *(1)* புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 373 பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செய்யவேண்டிய முக்கிய தேசியப் பணிகள், இரண்டு உள்ளன. அவற்றுள், ஒன்று, ஆண்டுதோறும் மக்கள் எண்ணிக்கை பெருகுவதற்கு ஏற்ப, உணவு உற்பத்தியைத் தொடர்ந்து பெருக்குவது. மற்றொன்று, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது.

(2) மரணங்களை விட பிறப்புக்கள் அதிகமாக இருப்பதினால், மக்கள் எண்ணிக்கை பெருகுகிறது. மரணங்களின் எண்ணிக்கைக் குறைந்து கொண்டே போகிறது; நம்முடைய சுகாதார, சமூக நலத்திட்டங்கள் மூலம், மேலும் அவைகளைக் குறைக்க நாம் முயலுகிறோம். மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமெனில், பிறப்புக்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும். அவை, மரணங்களின் எண்ணிக்கை குறையும் வேகத்தை விட, குறையவேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு ஆண்டும், எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன? மக்கள் எண்ணிக்கைப் பெருக்கம், ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டுமென்றால், பிறக்கும் குழந்தைகள் எத்தனையாக இருக்கவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகளே, நம்முடைய நோக்கத்தை விளக்கிக் கூறுவனவாக அமையும்.

(3) ஒவ்வொரு கிராமத்திலும், உண்டாகின்ற ஒவ்வொரு பிறப்பும், மரணமும், மணியக்காரருக்கு அறிவிக்க வேண்டும் என்பது சட்டம். அவர் இந்த விவரங்களைப் பதிவு செய்துகொண்டு, ஒவ்வொரு மாதமும், ஒரு மாதாந்தர அறிக்கை அனுப்புகிறார். துரதிருஷ்ட வசமாக, ஒவ்வொரு பிறப்பு பற்றியும், அவருக்கு அறிவிக்கப்படுகிறது என்ற உறுதியில்லை. ஆகவே, அவர் அனுப்பி வைக்கின்ற புள்ளி விவரங்கள், பூர்த்தியானவையாக இல்லை. ஆகவே, இந்த அறிக்கையிலிருந்து தொகுத்துச் சேகரிக்கப்படும் செய்திகள், விவரக்குறைவு உள்ளனவாகவும், உபயோகமற்றவையாகவும் ஆகிவிடுகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்த நிலை; இன்னும் இந்தியாவிலுள்ள மற்ற எந்த மாநிலத்திலும் இதே நிலைதான் உள்ளது.

மக்கள் எண்ணிக்கை, ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டுமாயின், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு மாதத்திற்கும், இது பற்றிய சரியான முழு விவரங்களும் கிடைக்கப்பெறுவது, மிகவும் அவசியமாகிறது. இந்த வகையில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் மாதாந்தர அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு முன்னால், பதிவு செய்யப்பட்ட விவரங்களை மாதத்தோறும் பரிசீலனை செய்ய முன்வந்தால், எல்லா புள்ளி விவரங்களையும், சுலபமாகப் பெறமுடியும். [பஞ்சாயத்து ஆட்சியில் குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக செய்யப்படவேண்டிய வேலைகளில், இந்த வேலையும் ஒன்றாகும் என்பது, இங்கே குறிப்பிடத்தக்க செய்தியாகும்.]

(4) இந்த எளிய காரியத்தைப் பஞ்சாயத்து யூனியன், சீர்திருத்தி, அந்த வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலிருந்தும், சரியான தகவல்களைச் சேகரிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். (1961-ம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்கின்படி) அந்த வட்டாரத்தின் ஜனத்தொகை 80,000 என்று வைத்துக்கொண்டால், அந்த வட்டாரத்தில் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் சுமார் 3,000 குழந்தைகள் பிறக்கின்றன என்றாகும்.

ஒரு பிரதேசத்தின் 'பிறப்பு விகிதம்' (Birth-rate) என்பது சாதாரணமாக, ஆயிரம் பேர் கொண்ட மக்கள் தொகைக்கு, ஆண்டொன்றுக்கு உண்டாகின்ற பிறப்புக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடும். இந்த மாநிலத்தில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும், பிறப்பு விகிதமானது 35-க்கு குறையாமல், 40-க்கு மேற்படாமல் இருக்கலாம்.

(5) இதே மாதிரி, இதே அளவு மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட இதே அளவுள்ள பிரதேசத்தில், இங்கிலாந்து நாட்டிலோ, அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ, ஒரு கணக்கு எடுப்பதாக வைத்துக்கொள்வோம்.

அப்படி எடுத்தால், ஒவ்வொரு வட்டாரத்திலும், பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை 1,200-ஆக இருக்குமே தவிர, 3,000-ஆக இருக்காது.

பிறப்பு விகிதம் 35-லிருந்து 40-க்குள் இருக்கின்ற நிலையில்லாமல், அது பதினைந்தோ அதற்கும் சற்று குறைவாகவோ அல்லது அதிகமாகவோ தான் இருக்கும்.

(6) மணியக்காரர் ஒரு குழந்தை பிறந்ததைப் பதிவு செய்யும்போது, பல விவரங்களைப் பதிவு செய்கிறார். அதில் ஒன்று, 'எத்தனையாவது குழந்தை' என்பது பற்றிய விவரமாகும். அதாவது, பிறந்த குழந்தை தாய்க்கு முதல் குழந்தையா, நான்காவது குழந்தையா, அல்லது பத்தாவது குழந்தையா என்பது பற்றிய விவரமானது பதிவு செய்யப்படுகிறது. எல்லாக் குழந்தைகளின் பிறப்புக்களும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். முதல் குழந்தை, இரண்டாவது குழந்தை, மூன்றாவது குழந்தை ஆகியவை ஒரு பகுதியாகும். இந்தப் பகுதியை <u>சாதாரண பிறப்புக்கள்</u> என்று அழைக்கலாம். நான்காவது குழந்தை, ஐந்தாவது, அதற்கு அப்பாற்பட்டவை எல்லாம் இரண்டாவது பகுதி. இதை <u>அதிகப்படியான பிறப்புக்கள்</u> என அழைக்கலாம்.

வட்டாரத்தில் ஓராண்டில் ஏற்படுகின்ற 3,000 பிறப்புக்களை, பஞ்சாயத்து யூனியன் இந்த இருவகைப் பிரிவுகளாகப் பிரித்தால், அதில் 1,800 சாதாரணமானதாகவும், 1,200 அதிகப்படியானதாகவும் இருப்பது தெரியவரும்.

(7) இங்கிலாந்து அல்லது மற்ற சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இதே மாதிரி, பிரதேச அளவில், இப்படிப்பட்ட ஒரு கணக்கு எடுத்தால், கிடைக்கின்ற எண்ணிக்கை வேறுபட்டதாகவும், சுவாரசியமானதாகவும் இருக்கும்.

சாதாரண பிறப்புக்கள் 1,800-ஆக இருக்காது; அது 1,000-மாக இருக்கும். அதேபோல், அதிகப்படியான பிறப்புக்களின் எண்ணிக்கை 200-ஆக இருக்குமே தவிர, 1,200-ஆக இருக்காது.

இப்படிப்பட்ட வித்தியாசங்கள் எப்படி ஏற்படுகின்றன? இதற்கான முதல் காரணம், திருமணத்திற்கும், முதல் குழந்தை பிறப்பதற்கும் இடையேயுள்ள கால வெளி நம்மைவிட அவர்களிடையே அதிகமாக இருப்பதேயாகும். மேலும் ஒரு குழந்தை பிறந்து, அடுத்த குழந்தை பிறப்பதற்கு இடையே உள்ள காலவெளி, நம்மைவிட அவர்களிடையே அதிகமாக உள்ளது. அங்கே அநேகமாக எல்லோரும், இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறந்ததுமே, அதற்குப் பிறகு குழந்தை பெறுவதை நிறுத்திக்கொண்டு விடுகிறார்கள். ஆனால் நம்மிடையோ, தாய் கருதரிக்கக்கூடிய காலம் முழுவதிலும் குழந்தைப் பிறப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

(8) இந்த மூன்று வித்தியாசங்களில் கடைசியாகச் சொல்லப்பட்ட வித்தியாசம், அதாவது பூர்த்தியான குடும்பத்தின் அளவில் காணப்படும் வித்தியாசம் மிகவும் முக்கியமானதாகும். குழந்தை பெறுகின்ற கால அளவினைக் கடந்து விட்ட 100 தாய்மார்களை, ஒரு பஞ்சாயத்து யூனியன், குறிப்பிட்ட விதிமுறைக்கு உட்படாமல் தேர்ந்தெடுத்து (Selects at random), ஆராய்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒரு வட்டாரத்தில் இந்த 100 தாய்மார்களுக்கும் பிறந்த அத்தனை குழந்தைகளில் (இறந்துபோன குழந்தைகளையும் சேர்த்து) எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது 600-க்கு குறையாமல் இருப்பதைக் காணலாம். இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கையைத் தள்ளிவிட்டு, உயிரோடு இருக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப்பார்த்தால், அது 400-க்கு மேல் இருக்கும். இதே மாதிரி ஒரு கணக்கை, இங்கிலாந்திலோ மற்ற மேற்கத்திய நாடுகளிலோ எடுத்துப்பார்த்தால், 100 தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 240-க்கு மேற்படாது. இந்த நாடுகளில், நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்து பூர்த்தியான குடும்பங்களின் எண்ணிக்கை விதி விலக்காகவும், மிகவும் அபூர்வமாகவும் இருக்கும். ஆனால் நம்முடைய மாநிலத்திலோ (இந்தியாவில் மற்ற எல்லா மாநிலங்களிலும் கூட) நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்காமல் பூர்த்தியான குடும்பங்களின் எண்ணிக்கை தான் அபூர்வமாகவும், விதிவிலக்காகவும் உள்ளதைப் பார்க்க முடியும்.

(9) தேசிய ஐந்தாண்டுத் திட்டமானது குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துவதற்கான காரணத்தை மிகவும் சுலபமாகச் சொல்லிவிடலாம். இங்கிலாந்து மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போல் <u>சிறு எண்ணிக்கையுள்ள குடும்பங்கள்</u> நம் நாட்டிலும், பெருவாரியாக இருக்கவேண்டும் என நாம் விரும்புகிறோம். இந்த விருப்பத்திற்கான காரணத்தையும் சுலபமாக விளக்கிவிடலாம். ஐந்து, ஆறு என்றில்லாமல், நமது மாநிலத்தில் ஒவ்வொரு ஏழ்மையான குடும்பத்திலும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் என்றிருந்தால், பெற்றோர்கள், உணவு, உடை, கல்வி ஆகிய விஷயங்களில் அந்தக் குழந்தைகளுக்கு இரு மடங்கு வசதிகள் அளித்து, அவைகளை நல்லமுறையில் வளர்க்க முடியும். குழந்தைகளை வளர்த்து உருவாக்குவதில், பெற்றோர்களால் மிகவும் மேம்பாடான முறையில், தங்களுடைய தனிப்பட்ட கவனத்தையும், அக்கறையையு

யும் காட்டி அவர்களை வளர்க்க இயலும். பெற்றோர் களுக்குக் கிடைக்காமல் போய்விட்ட, வாழ்வில் நல்ல தொரு ஊக்கத்தைத் தரக்கூடிய ஆரம்பத்தை, புதிய பரம்பரையில் வருகின்ற குழந்தைகள், இதனால் பெறமுடியும். அவர்கள் பெரியவர்களாகின்ற நிலையில், அவர்களுடைய பெற்றோர்கள் இன்று இருக்கின்ற நிலையை விட, அதிகமான கல்வி வசதிகள் பெற்று, அதனால் மேலும் அதிகமான ஊதியங்களைப் பெறுகின்ற வேலைகளில் அமரவும் முடியும்.

(10) பெற்றோர்களுக்கு எது பொருத்தமோ, அதே நிலைதான் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், அரசாங்கம் ஆகியவற்றுக்கும் பொருந்தும். ஏனென்றால், ஒரு சமூக நல ஆட்சியில், குழந்தைகளுக்குத் தேவை யான வசதிகளை, இந்த அமைப்புக்களால், அவர்களுக்கு பொது வசதிகலாக அளிக்கப்படவேண்டும். தாய் சேய் நல விடுதிகள், ஆரம்ப, மற்றும் பல்வேறுவகைப்பட்ட பள்ளிக்கூட வசதிகள் எல்லாம் செய்து தரப்படவேண்டும். ஐந்தாண்டுக் காலத்திற்குமட்டும் எல்லாக் குழந்தை களுக்கும் ஆரம்பக்கல்வி வசதிகள் செய்து தருதல், நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு பள்ளிச்சிறுவர் களுக்கு அளித்தல் என்ற இரண்டு வேலைகளையும் எடுத்துக் கொண்டு செய்யவேண்டும் என்று வரும் போதே, அதனால் ஏற்படும் சிரமங்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்பதை இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னும் உணரத் தொடங்கியுள்ளது. வேண்டிய பள்ளிக்கூட கட்டட வசதிகள், தேவைப்படுகிற ஆசிரியர்களை நிய மித்தல் ஆகிய வேலைகளைச் செய்ய போதிய பணவசதி இல்லை.

ஆனால், மேற்கத்திய நாடுகள் போல், ஒவ்வொரு வட்டாரத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் பிறக்கின்ற குழந்தைகள் எண்ணிக்கை 3,000-லிருந்து 1,200-ஆக குறைக்கப்பட்டால், இந்தச் சிரமங்கள் எல்லாம் அகன்று விடும். இன்று ஆரம்பப்பள்ளி வைக்க இடவசதி போதாத நிலையில் உள்ள கிராமப் பள்ளிக்கூடத்தில் உயர்தர ஆரம்பப்பள்ளி வைக்கும் அளவுக்கு இட வசதி இருப்பதை அப்பொழுது நாம் பார்க்கமுடியும். ஏனென்றால், எல்லாக் குழந்தைகளுமே சேர்க்கப்பட்டா லும்கூட, அப்பொழுது, இப்பொழுதுள்ளதைவிட ஒவ் வொரு வகுப்பிலும் பாதியளவுக்குக் குறைந்த அளவுள்ள எண்ணிக்கையுள்ள குழந்தைகள்தான் இருப்பார்கள். கல்விக்காக இப்பொழுது செலவிடப்படுகிற அதே அள வுள்ள பணத்தைக்கொண்டு, கிராமங்களில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இன்னும் அதிகப்படியான, உயர்ந்த கல்வி வசதியை அளிக்கமுடியும்.

(11) இதனால், தொடர்ந்து நிறைவேற்றப்படுகிற ஐந்தாண்டுத் திட்டங்களினால் உருவாக்கப்படுகிற நல்ல வாய்ப்புக்களையும், நல்ல ஊதியம் அளிக்கிற வேலை வசதி களையும், குழந்தைகள் பெறுவதற்கு இயலும். அத்துடன் மட்டுமல்லாமல், சிறு குடும்பமாக வாழும் வழக் கத்தை மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும்பொழுது, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும். அப்படிப்பட்ட ஒரு நிலையில், மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை மட்டும் உத்தே சித்து, அதற்கேற்ப, உணவு உற்பத்தியைப் பெருக்கு வதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற வசதிகள், உழைப்பு அத்தனையும், விவசாயம் சம்பந்தமில்லாத வருமானத் தையும், வேலை வசதிகளையும் பெருக்குகின்ற வேறு திசை களில் செலுத்தப்பட முடியும். மக்களின் வாழ்க்கைத் தர அளவில் ஓர் உயர்நிலை ஏற்படுத்த முடியும்.

(12) குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும், அதற்கான நடவடிக்கைகளையும், பஞ்சாயத்து யூனியன் கள் மேற்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், இதன் நோக்கம் என்ன என்பதை எல்லோரும் உடனே புரிந்து கொள்கின்ற முறையில், தெளிவாகவும், திட்டவட்ட மாகவும் விளக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஆகவே அளவுள்ள குடும்பம், குடும்பக்கட்டுப்பாடு, என்று இப்படிப் பேசுவது மட்டும் போதாது. இந்தக் கட்டுப் பாட்டின் அளவு என்ன? எவ்வளவு குறைந்த அளவுள்ள குடும்பம் இருந்தால் போதும்? சிறிய குடும்பத்திற்கும், பெரிய குடும்பத்திற்கும் உள்ள வித்தியாசம் மூன்றுக்கும் அதிகமாயுள்ள குழந்தைகளே என்பதைக் குறிப்பாக வற்புறுத்தவேண்டிய அவசியம் உள்ளது. சாதாரண பிறப்புக்களுக்கும், அதிகப்படியான பிறப்புக்களுக்கும் உள்ள வித்தியாசம் 3-க்கு அதிகமான குழந்தைகளே.

தேசிய ஐந்தாண்டுத் திட்டமானது, நாட்டிலிருந்து ஏழ்மையை ஒழிக்கவும், ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சி யாகவும், நலமாகவும் வாழ்வதற்காக வேண்டியும் இடையறாமல் தொடர்ந்து பணிபுரிவதை லட்சியமாகக் கொண்டுள்ளது என்பதை மக்களுக்கு விளக்கியாக வேண்டும். இந்தப் பணியானது பயனளிக்க வேண்டு மென்றால், இந்த வேலையில் ஒவ்வொரு குடும்பமும் பங்கேற்றுக்கொண்டு, தன்னுடைய பங்கினைச் செய்தாக வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் நிறைவேற்றக்கூடிய பணி ஒன்றுள்ளது. அதிகப்படியான பிறப்புக்களை நிறுத்துவதே இந்தப் பணியாகும்.

அதிகப்படியான பிறப்புக்களை நிறுத்த ஒவ்வொரு குடும்பத்தைத் தூண்டுவதும், அதற்கான உதவிகளைச் செய்வதும், ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும். பஞ்சாயத்துக்கள் இந்த வேலையைச் செய்வதில், உற்சா கத்தையும், தூண்டுதலையும் ஊட்டி, வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனின் கடமையாகும்.

2. செய்யப்படவேண்டிய வேலைகள்—

(13) இந்தத் துறையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஒரு திட்டவட்டமான வேலைத் திட்டத்தை வகுத்துக்கொண்டு செயலில் இறங்கும் என்று உத்தேசித்தால், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்யப் படவேண்டிய வேலைகள் என்னென்ன? பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியன என்ன? தம்முடைய அதிகாரத்திலுள்ள வட்டாரச் சிப்பந்திகளையும் சேர்த்துக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் என்ன செய்யவேண்டும்? அரசாங்கத்தின் இலாகாக்கள் சம்பந்தப்பட்ட துறைகள் என்ன செய்யவேண்டும்?

முதல் வேலையாக, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன்னுடைய பொறுப்பில் உள்ள பிரதேசத்தில் உண்டாகின்ற பிறப்புக்களைப் பதிவு செய்வது தவறில்லாமலும், விட்டுப் போகாமலும் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இது உடனடியாகவும் மிகவும் அவசியமாகவும் செய்யப்படவேண்டிய ஒரு வேலையாகும். ஒவ்வொரு குழந்தை பிறந்ததும், அது உடனே அறிவிக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டம் உள்ளது என்றாலும், அநேக குழந்தைகள் பிறப்பதை அறிவிக்காமலேயே விட்டுவிடப்படுகிறது என்று முன்பே குறிப்பிடப் பட்டுள்ளது. பூர்த்தியடையாத அரைகுறையான பதிவு விவரங்களிலிருந்து சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள் உபயோகமற்றவையாகப் போய்விடுகின்றன. இப்பொழுது பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு வேலைத் திட்டத்தை வைத்துக் கொண்டிருப்பதில் அவைகளுடைய சொந்த உபயோகத்திற்கு ஒவ்வொரு குழந்தையின் பிறப்பு பற்றிய, தவறில்லாத, சரியான, முழு விவரமும் தேவைப்படும்.

(14) இதற்காக, ஒவ்வொரு குழந்தையின் பிறப்பையும், பதிவு செய்து, அந்தப்பதிவு விவரங்களின் பேரில் மாதாந்தர அறிக்கையைத் தயார் செய்கின்ற மணியக்காரர், அந்தப் பதிவேட்டையும், மாதாந்தரக் கணக்கையும், பஞ்சாயத்து மாதாந்தரக் கூட்டத்தில், பஞ்சாயத்தின் முன்னுல் வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். ஒவ்வொரு மாதத்திற்கும் பதிவு செய்கின்ற விவரங்கள் குறைவாகத்தான் இருக்கும். பதிவேட்டில் பதியாமல் விட்டுப்போய் குழந்தை-பிறப்பு ஏதாவது இருக்கிறதா என்பதை, பஞ்சாயத்து உறுப்பினர்கள் கிராமத்தைப் பற்றி தங்களுக்கு தெரிந்துள்ள விவரங்களிலிருந்து கண்டு பிடிக்க முடியும். குறிப்பாக பஞ்சாயத்தில் சேர்க்கப் பட்டுள்ள பெண் அங்கத்தினர் இந்த விஷயத்தில் போதிய விவரங்களைச் சேகரிக்கக்கூடும். அப்படி அவர்கள் சேகரிப்பதினல், இதற்கான பதிவேட்டை தவறில்லாமலும், அரை குறையாக, விட்டுப்போகாமலும் வைத்துக்கொள்ள அவரால் உதவி புரிய முடியும்.

இந்த வழியில், திட்டவட்டமாக ஒரு நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படை விவரங்கள் கிடைத்துவிடும். மாதாமாதம், வருடா வருடம் இந்த விவரங்கள் தப்பில்லாமல், சரியாக சேரிக்கப்பட்டு வைக்கப்பட்டால், திட்டத்தைச் செயல்படுத்தப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவும், இவற்றை அடைவதில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதைக் கவனிக்கவும் சாத்தியமாகும்.

(15) மேற்கொள்ளவேண்டிய வேலைகள் மூன்று பிரிவுகளாக உள்ளன. அவையாவன, முறையே (அ) அறிவுறுத்தல் (Instruction); (ஆ) இணங்கச் செய்தல் (Persuasion); (இ) அறுவை சிகிச்சை செய்தல் (Sterilisation) அறிவுறுத்தலுக்கான வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு (தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டுள்ள சிப்பந்திகளையும் சேர்த்து) பஞ்சாயத்து யூனியனுடையதாகும். மக்களிடையே, இணங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்தினுடையது. அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கான வசதிகளை அளித்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

(16) அறிவுறுத்தல் இருவகையின் பாற்படும். ஒரு சாதாரண செய்தித்தாளைப் படித்து, புரிந்து கொள்கின்ற அளவுக்கு உள்ள மக்களுக்கு இது பற்றிய விவரங்களைச் சொல்லுதல். இந்த விஷயத்தில் தனக்குத்தானே நேரடியாகத் தெரிந்துகொள்ளுதல் சாத்தியமானது; போதுமானதுங்கூட. அரசாங்கத்தினுல் வெளியிடப்பட்டுள்ள குடும்பக்கட்டுப்பாடு புத்தகத்தை அவர்கள் வாங்கிப் படிக்கும் வகையில் பஞ்சாயத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். 1961 ஜனவரி 30-ம் தேதி வரையில் இந்தப் புத்தகத்தில் சுமார் 4 லட்சம் பிரதிகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்தப்புத்தகத்தின் விலையை மிகவும் குறைவாக, 12 நயே பைசாவாக அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவையான பிரதிகளை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது. அவர்கள் அந்தப் பிரதிகளைப் பெற்று பஞ்சாயத்துக்களுக்கு வழங்கலாம். பஞ்சாயத்துக்கள் அதை எழுதப்படிக்கத் தெரிந்த மக்களுக்கு வழங்கலாம்.

கடந்த சில ஆண்டுகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை அதிகமாயிருந்தாலும், பத்திரிகைகளைப் படித்து புரிந்து கொள்கின்ற மக்களின் எண்ணிக்கை, அப்படி முடியாதவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் குறைவாகத்தான் உள்ளது. ஆகவே, குடும்பக்கட்டுப்பாடு புத்தகத்தில் சொல்லியுள்ளவற்றை, வாய்மொழி மூலமாகத்தான் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். இதற்காக, தாய்மார்களுக்குத் தனியே விளக்

கங்கள் செய்யவும், அதேபோல் தந்தைகளுக்குத் தனியே விளக்கங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகிறது. இந்த வேலைகளைச் செய்வது பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் சேர்க்கப்படும். இதைச் செய்ய இலாயக்குள்ளவர்களாக யூனியனில் அதிகார வரம்பிற்குட்பட்ட பல்வேறுவகை சிப்பந்திகளில் ஒன்றுக்கு மேற்பட்ட வகையினராவது கண்டிப்பாக இருப்பார்கள். இதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறை ஏற்பாடுகள் மாநிலத்தில் எல்லா வட்டாரங்களிலும் ஒரே மாதிரி இருக்கவேண்டும் என்பதல்ல. அந்தந்த பிரதேச நிலைமைகளுக்கேற்ப அவை கையாளப் படலாம்.

(17) அறிவுறுத்தல் பணியை பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வைப்பதில், அவைகளுக்கு அரசாங்கத்தினிடமிருந்து இரண்டு வகையான உதவிகள் தேவைப் படலாம்.

முதலில், பஞ்சாயத்து யூனியன் இந்த வேலைக்காக தேர்ந்தெடுக்கிற பிரதேச சிப்பந்திகளுக்குப் போதிய பயிற்சியளிக்க அரசாங்க இலாகா, துறைகள் திட்டமிட வேண்டும். அரசாங்கம் முன்பே இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இந்த வசதிகளை மேலும் மேலும் விரிவாக்கிக்கொள்ளலாம். மாதர் பகுதி சம்பந்தப்பட்ட வரையில், தாய்-சேய் நல சம்பந்தமாகப் பணியாற்றும் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களை ஒருமுகப்படுத்தி இயக்குவிக்கவேண்டி, சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சமூக நல போர்டின் வசம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தாய்-சேய் நலத் திட்டங்களிலெல்லாம் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் மிகவும் முக்கியமான ஒரு பங்கினைப் பெறும்.

இரண்டாவதாக, அறிவுறுத்தல் பணிக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆகின்ற எல்லாச் செலவுத் தொகையும், மாநில அரசாங்கத்தினால், பின்னால் அதற்குத் திருப்பித்தரப்படும். இதற்காக வேண்டிய நிதி வசதிகள் மாநிலத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன.

(18) இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதில், எந்தக் கட்டத்திலும், எந்தவிதமான கட்டாயத்திற்கும் இடமில்லை என்பதைத் தெளிவாகக்கொள்ளவேண்டும். விளக்கங்கள் பெறுதலில்கூட கட்டாயத்திற்கு இடமில்லை. ஆகவே, மூன்று வகையான ஏற்பாடுகளில் ஒரு முக்கிய அம்சமான 'இணங்கச் செய்தலுக்கு' தனி முக்கியத்துவம் உண்டு. இதைப் பற்றிய விளக்கங்கள் சொல்லுகின்ற கூட்டங்களில் தாய்மார்களும், தந்தைமார்களும் வந்து உடனே கலந்து கொள்ளும்படியான நிலையில், தன் பொறுப்பில் உள்ள மக்களிடையே ஒரு நல்ல பொது எண்ணத்தை உருவாக்கவும், அதற்குப் பழுதுவராமல் பார்த்துக்கொள்ளவும், அதற்கான சாத்தியக்கூறான நடவடிக்கைகளை எடுப்பதுவும் பஞ்சாயத்தின் கடமையாகும். தாய்மார்களுக்கு விளக்கம் கூறுவது பற்றி ஓர் குறைந்தபட்ச வேலைத் திட்டத்தைப் பஞ்சாயத்தின் பெண் அங்கத்தினர் உருவாக்கவேண்டும். குழந்தை பிறந்ததற்கு மூன்று மாதத்திற்கு முன்போ அல்லது பின்போ இந்தக் காலவரையறைக்குள், குழந்தை பெற்ற ஒவ்வொரு தாய்மாரும், குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளக்கங்களைத் தெரிந்து சொல்லும் முறையில், இந்தக் குறைந்த பட்சத் திட்டமானது இருக்க வேண்டும். பிரசவ காலத்திற்கு முன்னும், அதன் பின்னும் கொடுக்கப்படும் யோசனைகளில் ஒரு பகுதியாக குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளக்கங்களையும், முறைகளையும் பற்றிச் சொல்லவேண்டும்.

(19) குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக மக்களை இணங்கச்செய்வதும், அதற்கான விளக்கங்களை அவர்கள் பெறும்படிச் செய்தலும் முதல் கட்டத்தில் செய்கின்ற வேலைகள்தாம். அடுத்த படியாகச் செய்யவேண்டியது, இப்படிச் சிபாரிசு செய்யப்பட்ட முறைகளைக் கையாளும்படி மக்களை இணங்கச்செய்தலே. இது முன்னையதைவிட மிகவும் சிரமமான வேலை. இப்படி இணங்கச் செய்தலும் ஒரு வரையறைக்குட்பட்டுதான் செய்ய முடியும். அப்படி இருந்தபோதிலும், அப்படி மக்களை இணங்கச் செய்யும்போது, குடும்பக்கட்டுப்பாடு முறையில் மிக முக்கியமான அம்சமான அறுவை சிகிச்சை செய்து கொள்ளுகின்ற ஆர்வத்தை மக்களிடையே தூண்டி, அதை அவர்கள் செய்து கொள்கின்ற வகையில், திட்டமிட்ட முறையில் இந்த வேலையானது செய்யப்படவேண்டும்.

இந்தக் காரியத்தில், மக்களை இணங்கச்செய்து வெற்றிகரமாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஒவ்வொரு பஞ்சாயத்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம்.

(20) முதலில், குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வதற்குரிய சிறந்த வழி, வேண்டிய குழந்தைகள் பிறந்த பிறகு, அறுவை சிகிச்சை செய்து கொள்வதுதான் என்பதை ஒவ்வொரு குடும்பமும், உறுதியாக அறிந்து கொள்கின்ற முறையில் அறிவுறுத்த, பஞ்சாயத்து ஏற்பாடுகள் செய்யவேண்டும். கடந்த இருபதாண்டுகளில் இந்த மாநிலத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் வழக்கம், அதுவும் குறிப்பாக தந்தைமார்கள் செய்து கொள்வது, மெல்லமெல்ல அதிகமாகிக்கொண்டே வந்திருக்கிறது என்பது இப்போது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்தக் கால எல்லையில், நாடு பூராவிற்கும், பல்லாயிரக்கணக்கான மக்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். இந்த முறையில் ஒருவித

அபாயமும் கிடையாது. பல ஆண்டுகளுக்கு, தொடர்ந்து கையாளப்படவேண்டிய வேறு முறைகளைப் போலல்லாமல் இந்த முறையினால் ஒரே தடவையிலேயே காரியம் சித்தியாகிவிடுகிறது. இந்த முறை எந்தவித ஆபத்துமில்லாதது என்பதும், மிகவும் சுலபமானது என்பதும் கடந்த இரண்டாண்டுகளாகத்தான் பெருவாரியான மக்களால் உணரப்பட்டு வருகின்றன.

(21) அப்படிப்பட்ட அனுபவத்தின் பேரில் சொல்லப்படுபவை சரியாகத்தானிருக்கும் என்று ஒப்புக் கொள்வது ஒரு விஷயம். ஆனால், அந்த அடிப்படையை வைத்து நாமே அப்படி செய்து கொள்வது என்பது வேறு விஷயம். தனிப்பட்ட முறையில் மக்கள் ஒரு முடிவுக்கு வந்து, காரியத்தில் இறங்குகின்ற அளவுக்கு ஜனங்களிடையே ஓர் உறுதிப்பாட்டினை உண்டாக்குகின்ற அளவுக்குக் கொண்டு வருவதற்குச் சிறந்த வழி என்னவென்றால், ஒவ்வொரு கிராமத்திலும், தங்கள் நண்பர்களுக்கு, சுற்றத்தார்களுக்கு, அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரிந்த இரண்டு, மூன்று பேர்கள் அறுவை சிகிச்சை செய்துகொண்டு, அவர்கள் அனுபவத்தில் எல்லா வகைகளிலும் பூரண மகிழ்ச்சியுடன் உள்ளனர் என்ற நிலையை ஒவ்வொரு கிராமத்திலும் உண்டாக்குவதுதான்.

அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன் வருபவர்களுக்கு எல்லாவகைகளிலும் போதிய வசதிகளைச் செய்து தந்து, ஊக்குவிக்கின்ற முறையில் உள்ள ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளதற்கு இதுவே காரணமாகும். இந்தத் திட்டத்தின் நோக்கம், மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் இப்படி அறுவை சிகிச்சை ஆரம்பமாக செய்து கொண்டவர்கள் 250 பேராவது இருக்கின்ற நிலை ஏற்படவேண்டும் என்பதே. இவர்களில் ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்தவர் சில பேராவது கண்டிப்பாக இருப்பார்கள். சமீப காலமாக கிடைக்கின்ற விவரங்களிலிருந்து இந்தத் திட்டத்திற்கு நல்ல ஆதரவு இருக்கிறது; நல்ல முன்னேற்றத்தை அடைந்து வருகிறது என்று தெரியவருகிறது. தன்னுடைய பொறுப்பில் உள்ள வட்டாரத்தில் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது, அடைந்துள்ள முன்னேற்றம் என்ன என்பதைப் பற்றி இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கவனித்துப்பார்க்க வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள 250 என்ற எண்ணிக்கையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு தனி விகிதாச்சாரம் ஒதுக்கப்படும். அப்படி ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள பேர் முன் வந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ளவும், மற்ற மக்களுக்கும் இந்த வழியை வெகுவிரைவில் பின்பற்றும் வகையிலும் இணைந்து செயலாற்ற பஞ்சாயத்து எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(22) இப்படிப்பட்ட முன்னோடியாக விளங்கும் இந்த அறுவை சிகிச்சைத் திட்டம் ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நிறைவேற்றி வைக்கப்பட்டால், ஓராண்டுக்குள்ளாக அல்லது அதற்குச் சற்று கழித்தோ, அதனால் ஏற்படுகின்ற பயன் தெளிவாகத் தெரியும். ஆரம்பத்தில் இருந்தமாதிரி இந்த இணங்கச் செய்தல் வேலை அவ்வளவு சிரமமாக இல்லாமல் மிகவும் லேசான ஒன்றாக மாறிவிடுவதைப் பஞ்சாயத்து தெரிந்து கொள்ளும். அதிகப்படியான மக்கள், குறைந்தபட்ச முயற்சியின்பேரில் அதிகமாக இந்தத் திட்டத்தில் கலந்து கொள்வதைப் பார்க்கமுடியும். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதெல்லாம், ஜனங்களுக்கு இதைப்பற்றி முறையாக நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் வேலைதான். இதைச் செய்வதற்கு சிறந்த வழி, முன்பே சொன்னமாதிரி இந்த இணங்கச் செய்தல் முயற்சியை மாதந்தோறும் பிறப்புக்களைப் பற்றிய மாதாந்திர பரிசிலனை வேலையோடு சேர்த்து, அதைப் பஞ்சாயத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் செய்யப்படவேண்டிய வழக்கமான வேலைகளில் ஒன்றாகச் செய்துவிடுவதுதான். அதிகப்படியான அளவில் பிறப்புக்கள் இருக்கின்ற ஒவ்வொரு விஷயத்திலும், சம்பந்தப்பட்ட தந்தையைத் தனிப்பட்ட முறையில் அணுகி, அவரை வேண்டிக்கொள்ளும்படியான வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும், மற்றபடி தானே முன்வந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ள வரும் சந்தர்ப்பங்களிலும், வட்டார சிப்பந்திகள் அறுவை சிகிச்சை, அவர்கள் செய்து கொள்வதற்கு வேண்டிய எல்லா வகையான ஏற்பாடுகளையும் வட்டாரத்தில் இணைக்கப்பட்டுள்ள மருத்துவமனையுடன் கலந்து செய்து அறுவை சிகிச்சை செய்து முடிக்கப்படுகின்ற வகையில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். வருடந்தோறும் ஒருநாள் (இந்தத் தினம் மத்திய அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும்) 'குடும்ப நல தினம்' ஆக கொண்டாடப்படவேண்டும். அந்தத் தினத்தன்று, இந்தத் திட்டமானது மக்களுக்கு விளக்கிச் சொல்லப்படவேண்டும். கடந்த ஆண்டில் அடைந்துள்ள சாதனையைப் பற்றி பொதுமக்கள் முன்னிலையில் மதிப்பிட வேண்டும். வருகின்ற ஆண்டில், திட்டத்தை மேன்மேலும் வெற்றிகரமாக நடத்தி வைக்கும் வகையில் மக்களுடைய ஒத்துழைப்பானது பெறப்பட வேண்டும். மூன்றாவது திட்டக் காலம் பூராவும் இந்த முறையில் இந்த முயற்சியானது குன்றாமல் பாதுகாக்கப்படவேண்டும்.

(23) அதிகப்படியான வளருகின்ற தேவைக்கேற்ப, அறுவை சிகிச்சை வசதிகளை கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் அதிகப்படுத்திக்கொண்டே வந்திருக்கின்றது. மாநிலத்தில் ஒவ்வொரு தாலூகாவிலும், இந்த வசதிகள் முன்பே (அப்படியில்லாத இடங்களில் வெகு விரைவில்)

கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளன. பயிற்சித் திட்டம் விஸ்தரிக்கப்படும்பொழுது, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், தந்தையர்களுக்கு அறுவை சிகிச்சை செய்கின்ற வசதிகள் செய்ய இயலும். அறுவை சிகிச்சை வசதிகள் பற்றிய தேவைகளை கிராம மக்கள் எவ்வளவு உற்சாகத்துடன் வளர்த்துக் கொள்கிறார்களோ, அந்த அளவுக்குப் போதிய தேவைகளை அரசாங்கம் கண்டிப்பாகப் பூர்த்தி செய்யும் என்ற முழு நம்பிக்கையை கிராம மக்கள் பெறலாம் என்ற அடிப் படையைச் சொல்லி மக்களை இணங்கச் செய்கின்ற பணியை மேலும் அதிகமாகப் பஞ்சாயத்து செய்யலாம்.

(24) இந்தத் திட்டமானது முழு வேகத்துடன் வேலை செய்யும் பொழுது, ஓராண்டுக்கு ஆயிரத்திற்கு 5 பேர் என்ற விகிதத்தில் அறுவை சிகிச்சை நடைபெற வேண்டியது அவசியம் என்ற நிலை உண்டாகிவிடும். அதாவது, சராசரியாக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஓராண்டுக்கு 10 பேர்களும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஓராண்டுக்கு 400 பேர்களும் என்ற நிலையிருக்கும்.

மூன்றுவது ஐந்தாண்டுக் கால முடிவிற்குள் அடைய வேண்டிய எண்ணிக்கை என்று தனக்கென்று ஒரு இலக்கை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கைக் கொள்வது மிகவும் நலமாக இருக்கும்.

இந்த வேலை கடுமையான வேலைதான். ஆனால், சிறிது காலத்திற்குத்தான் இந்த வேலை கடுமையாகத் தோன்றும். அதன் பிறகு இதற்காக விசேஷ உற்சாகமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசிய மிருக்காது. அறுவை சிகிச்சை செய்து கொள்பவர் களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி ஆயிரம் பேர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 5 பேர்கள் என்ற விகிதத்தை அடைந்துவிட்டால் இந்த வேலை சம்பந்தப் பட்ட வகையில் பஞ்சாயத்தின் வேலை முடிவடைந்து விட்டது என்று கருதலாம். அதற்கு; அதிகப்படியான பிறப்புக்கள் இருக்கின்ற நிலையானது முடிந்து, ஏற்படு கின்ற பெரிய நிம்மதியானது, தனிப்பட்ட அனுபவத்தின் பேரில் கிடைக்கின்ற ஒரு விஷயமாகிவிடும். வேண்டாத அளவில் குழந்தைகளைப் பெறுதலிருந்து பெண்கள் விடுதலை பெறுவார்கள். இதன் விளைவாக, ஒரு புதிய சுதந்தர உரிமையை அவர்கள் உணர்கின்ற நிலைமை ஏற்படும். சிறு அளவுள்ள குடும்பங்கள் சமுதாயத்தில் சகஜமாகி வேரூன்றிவிட்டிருக்கும். தங்களுடைய குடும்ப வாழ்வில், சிறிய அளவிலுள்ள குடும்பமானது ஏற்பட்ட பிறகு தாமாகவே அருகிலுள்ள மருத்துவ மனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்து கொள்தல் என்பதை வாழ்க்கையில் ஏதோ சம்பிர தாயமான சம்பவமாகவும், ஒரு சாதாரண விஷயமாகவும் மக்கள் கருதத் தொடங்கிவிடுவார்கள். மாநிலத்தின் பொது சுகாதார வேலைத்திட்டம் போலவே, அம்மைக் குத்துதல், நோய்களைத் தடுக்க ஊசி குத்துதல் போன்று அறுவை சிகிச்சை முறையையும் ஏதோ ஒரு சாதாரண, அன்றாட சிகிச்சையாகக் கொள்ளப்படுகின்ற நிலைமை வந்துவிடும்.

(25) 12,540 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் செயலாற்ற வேண்டிய திட்டம் இதுதான். வரலாற்றிலே இப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு முன் மாதிரியே இல்லை. இதை வெற்றிகரமாக நடத்துவைப் பதின் மூலம், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் முதன் முதலில் பதவியேற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்கள் ஒரு புதிய வரலாற்றையே உருவாக்கு வார்கள். அவர்களைத் தங்களுடைய தலைவர்களாகத் தேர்ந்தெடுத்த மக்களின் வாழ்க்கையிலே ஒரு புரட்சி ஏற்படுவதை, அவர்கள் கண்ணுறுவார்கள். உருவா கின்ற புதிய பரம்பரையைச் சேர்ந்த எண்ணில்லா இளஞ்சிறுர்களுக்கும், இளஞ்சிறுமியர்களுக்கும், அவர் களைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கும், எல்லோருக்கும், மகிழ்ச்சியையும், செழிப்பையும் அளிக்கின்ற மகத்தான தொரு பயன் விளைவிக்கின்ற புரட்சி அது.

எம். ஏ. மாணிக்கவேலு,
சுகாதார அமைச்சர்.

பஞ்சாயத்துக்களும் விவசாய அபிவிருத்தியும்

பகுதி I—முகவுரை

(1) தற்போதைய அளவில், தமிழ் நாட்டின் நிலப் பரப்பளவு 320 லட்சம் ஏக்கர்களாகும். பார்ப்பதற்கு, இது ஒரு பெரிய நிலப்பரப்பாகத் தோன்றுகிறது. ஆனால், இந்த மாநிலத்தில் 337 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த மக்கள் தொகையானது, ஆண்டொன்றுக்கு 4 லட்சம் என்ற விகிதத்தில் அதிகமாகிக்கொண்டே போகிறது. நமது மாநிலத்தில் நபர் ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கும் குறைந்த—அதாவது 95 செண்டு—அள வுள்ள நிலப்பரப்புதான், வாழுகின்ற இட அளவினதாக அமைந்துள்ளது. மேலும், மக்கள் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, தனிநபர் வசிப்பதற்குள்ள இடமானது, ஒவ்வொரு ஆண்டும் குறைந்த அளவு ஒரு செண்டு என்ற அளவில் குறைந்துகொண்டு வருகிறது.

(2) மொத்தம் 320 லட்சம் ஏக்கர் உள்ள நிலப்பரப்பில், 31 லட்சம் ஏக்கர் நில அளவு, கிராம அமைப்புக்கள், நகர அமைப்புக்கள், சாலைகள், ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள் முதலியவைகளாகப் பயன் படுகின்றன. மற்ற 60 லட்சம் ஏக்கர்களை, காடுகள், புதர்கள், மேய்ச்சல் இடங்கள் ஆட்கொண்டு விடுகின்றன. இவை தவிர, 25 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு விவசாயத்திற்குப் பயன் படாத கற்பாறைகளாக உள்ளன. இதுவெல்லாம் போக, 204 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புத்தான் விவசாயம் செய்யக் கூடிய நிலங்களின் அளவாகும். முன்பே விவசாயம் செய்யப்படுகின்ற இடங்கள், விவசாயம் செய்யக்கூடிய இடங்கள் என்ற இரண்டும் இந்த 204 லட்சம் ஏக்கரில் அடங்கும். இதன்படி பார்த்தால், மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு 61 செண்டு நிலப்பரப்புத்தான் விவசாயத் திற்கென்று கிடைக்கிறது.

(3) உலகத்தின் மொத்த நிலப்பரப்பு, உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும், தலைக்கு 12 ஏக்கர் என்ற அளவில் கிடைக்கச் செய்யும்படியான அவ்வளவு பெரிதாகும். உலகத்தை மொத்தமாகக் கொண்டு கணக்கிட்டால் கிடைக்கின்ற சராசரி அளவாகும் இது. ரஷ்யாவில் தலைக்கு 30 ஏக்கர்களுக்கும் குறையாத நிலப்பரப்பு என்ற அதிகபட்ச நிலை அமைந்துள்ளது. ஆனால், இந்தியா விலோ தலைக்கு 2 ஏக்கருக்கும் குறைந்த அளவுதான் கிடைக்கக்கூடிய குறைந்தபட்ச நிலை உள்ளது. இந்திய நாட்டில், முன்பே குறிப்பிட்டமாதிரி, தலைக்கு ஒரு ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பு உள்ள மிகவும் நெருக்க மான ஜனப்பகுதி உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. அதிர்ஷ்டவசமாக, நிலப்பரப்பிலே வினியோகத் திலே நிலவுகின்ற மிகப் பெரிய பொருத்தமற்ற இந்தத் தன்மையானது, இயற்கையில் உள்ள மாறுபாடுகள், நிலத் தின் தரம், விவசாயத்திற்கு நிலம் பயன்படுகின்ற தன்மை, ஆகியவைகளால் ஓரளவிற்குக் குறைக்கப்படுகிறது. விவசாயம் செய்கின்ற நிலப்பரப்பு என்ற வகையில்மட்டும் ஒப்பிட்டுப்பார்த்தால், வினியோகத்தில் உள்ள பொருத்த மற்ற தன்மை மிகவும் குறைந்துதான் தென்படுகிறது. ஆனாலும், அது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, தமிழ் நாட்டில், தலைக்கு, விவசாயம் செய்வதற்கு லாயக்கான நிலம் 61 செண்டுதான் உள்ளது. இந்தியா பூராவிற்கும் இது தலைக்கு 80 செண்டாகும். உலகம் முழுமைக்கும், இது ஒன்றே கால் ஏக்கராக உள்ளது. அமெரிக்கா விலும், ரஷ்யாவிலும், இரண்டரை ஏக்கருக்குமேல் உள்ளது. ஆண்டுதோறும் மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக, நபர் ஒன்றுக்கு இருக்கின்ற விவசாயத் திற்கு லாயக்கான நிலப்பரப்பின் அளவும் குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலை உலகம் பூராவுக்குமே கவலைத்தரத்தக்க ஒன்றாகும். ஏன், இந்தியாவுக்கும், நமது மாநிலத்திற்கும் விசேஷமாகக் கவலைத்தரத்தக்க நிலையாகும்.

(4) இந்த மாநிலத்தில் உள்ள மொத்தம் 204 லட்சம் ஏக்கர் விவசாயத்திற்கு லாயக்கான நிலப் பரப்பில், 143 லட்சம் ஏக்கர்கள் பயிர் விதைத்து பயிராக்கப்படுகின்ற நிலங்கள்; 25 லட்சம் ஏக்கர்கள் சாதாரணமாக பயிர்களை விட்டு விட்டு மாற்றி விளைக்க வேண்டியிருப்பதினால், தரி சாக விடப்பட்டுள்ள நிலப்பரப்பு. மிச்சமிருக்கின்ற 36 லட்சம் ஏக்கர்களில், 15 லட்சம் 'சக்தியிழந்து விட்ட தரிசு நிலங்கள்', 21 லட்சம் "விவசாயக் கழிவு" நிலங்கள். சில இடங்கள் தவிர, அநேகமாக எல்லா இடங்களிலும், மண்வளம் கொஞ்சம்கூட இல்லாமலும், போதிய மழை பெய்யாததினாலும், இனிமேல் விவசாயம் செய்ய இயலாத எல்லையில், அங்குமிங்கும் சிதறிக்கிடக்கிற துண்டு துண்டு நிலங்களாக இவை உள்ளன. நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தந்தால் ஒழிய, இனிமேல் விவசாயம் செய்தால், அவைகளிடமிருந்து பயன் கிடைக்கும் என்று எதிர்பார்ப் பதற்கில்லை. இந்த மாநிலத்தில் விவசாயம் செய்வதற் கான நிலத்தை மிகவும் அதிகப்படியாகவே உபயோகப் படுத்தியாகிவிட்டது.

(5) விதைகள் விதைக்கப்படுகின்ற 143 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், 28 லட்சம் ஏக்கரில் ஒரு தடவைக்கு மேற் பட்ட பல தடவைகளில் விதைத்து பயிரிட்டாகி விட்டது. ஆகவே, இப்பொழுது 171 லட்சம் ஏக்கர் பரப்புள்ள

மொத்த அளவு நிலப்பரப்பு பயிர்கள் விளைகின்ற நிலங்களாக உள்ளன. இதில் 120 லட்சம் ஏக்கர்கள் உணவு தானியப் பயிர்கள் விளைவது ; 51 லட்சம் ஏக்கர்கள் உணவு தானியமல்லாத மற்றப் பயிர்கள் விளைவது. உணவு தானியப் பயிர்களில், மிகவும் அதிகமாக பயிரிடப்படுகின்ற ஒரே பயிர் நெல்தான். 56 லட்சம் ஏக்கர்களில் நெல் மட்டும் பயிரிடப்படுகிறது.

மறுபடியும் விளக்கிக்கூற வேண்டுமானல், நபர் ஒன்றுக்கு கிடைக்கின்ற நிலப்பரப்பு என்ற கணக்கில், தமிழ் நாட்டில் உணவு உற்பத்தியானது ஒவ்வொன்றும் 42 செண்டு அளவுள்ள 337 லட்சம் சிறு துண்டாக உள்ள நிலங்களில் செய்யப்படுகிறது என்று சொல்லலாம். இந்த 42 செண்டுகளில், 8 செண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பயிருக்குமேல் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே, மாநிலத்தில் உள்ள ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவருக்கும் பயிர் விவசாயம் செய்யப்படுகின்ற நிலம் 50 செண்டு என்ற அளவு வருகிறது. இந்த 50 செண்டுகளில், 17 செண்டுகளில் நெல் உற்பத்தி செய்யப் படுகிறது. இன்னும் 18 செண்டுகளில், சோளம், ராகி, கம்பு, வரகு போன்ற நிலையான உணவுத் தானியங்களும், மற்றும் பல வகை பருப்பு, தானிய வகைகளும் பயிராக்கப் படுகின்றன. மிச்சமிருக்கிற 15 செண்டுகளில், காய்கறிகள், பழச் செடிகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, மற்றும் பல பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மனிதனின் உணவுக்காகவோ, கால்நடைத் தீவனங்களுக்கோ தேவைப் படுகின்றவைதான் இவை எல்லாம். இந்த 15 செண்டுகளிலேயே, ஒரு சிறு அளவில், பருத்தி பயிரிடப்படுகிறது.

(6) நிலம் போதிய அளவுக்கு இல்லாமல் இருந்து, மக்கள் தொகைப் பெருக்கத்தினுல் ஏற்படுகின்ற அவதியை, நாடு சுதந்திரம் பெற்ற சிலவருடங்களில் உண்டான உணவுப் பற்றுக் குறையினுல் ஏற்பட்ட மிகவும் நெருக்கடியான நிலையிலிருந்து தெளிவாக அறிய முடிந்தது. அதே அளவுள்ள நிலப்பரப்பில், மேலும் மேலும் அதிகமாக உணவினை உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளைக் கடைப்பிடிக்கவேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது. இதைச் சமாளிக்க, உணவு உற்பத்திக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முன்பாகவே எடுக்கப்பட்ட முயற்சிகள், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும், கவனத்துடனும் நிலையாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததுடன், அதைத் துரிதப்படுத்துவதற்கான வகைகளும் கடைப்பிடிக்கப் பட்டன. மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சிகளினுல் தான், பத்தாண்டுகளுக்கு முன் உணவு விஷயத்தில் நிலவிய நெருக்கடியான நிலைமை, குறிப்பிடத்தக்க அளவில் நீங்கி, பெருவாரியான அளவில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. உணவுத் தானியங்களும் கடைகளில் தாராளமாக கிடைக்கின்றன. ஆனுல், மக்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. மேலும், மக்களும் சத்துள்ள உணவையும், உணவு வகைகளில் தரமான வகைகளைக் கையாளத் தொடங்கிவிட்டார்கள். அதிக உணவு மட்டுமல்ல ; தரமான உணவு, பல்வேறுபட்ட வகையான உணவு வேண்டியுள்ளது. மற்ற உணவுத் தானியங்களைவிட அரிசியின் தேவை மிகவும் வேகமாக அதிகமாகிக் கொண்டே போகிறது. பழங்கள், காய்கறிகள், எண்ணெய், சர்க்கரை, பால் போன்றவைகளின் தேவைகளும் இன்னும் அதிக வேகத்தில் பெருகிக்கொண்டே போகின்றன. எல்லா உணவுப் பயிர்கள், மற்றும் எல்லாத் தீவனத்திற்கான பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. அதுமட்டுமல்ல ; பருத்தி விளைவிப்பதை விலக்கி விட்டு, அந்த இடத்தில் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதைத் தீவிரப்படுத்தவும் முடியாது. ஏன் என்ருல், இன்னும் அதிகமான பருத்தியும் தேவையாக இருக்கிறது.

(7) இதனுல் தான், மாநிலத்தின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டமானது, மற்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இருந்ததைவிட, மேலும் மேலும் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறது. பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் இப்பொழுது உள்ளன. விவசாயம் செய்யப்படுகின்ற அதே அளவுள்ள நிலங்களிலேயே, மேலும் மேலும் அதிகப்படியான உணவு உற்பத்தியைப் பெறுவதற்கான முயற்சியை வெற்றியுடன் நிறைவேற்ற, இந்த வேலைத் திட்டங்களில் ஒவ்வொன்றும் தன்னுடைய பங்கினைச் செய்திருக்கிறது. இந்த எல்லாத் திட்டங்களின் மொத்த விளைவாக (எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி போன்ற) மற்ற முக்கியமான பயிர்களுடன், ஆண்டொன்றின் நிலையான உணவுத் தானியங்களின் உற்பத்தியை 33 சதவிகித அளவுக்கு பெருக்குவது என்ற இலக்கினை அடைய எண்ணம் கொண்டுள்ளோம்.

(8) நிலங்களைப் பயிரிடுதல் அரசாங்கச் சிப்பந்திகளால் நடைபெறுவதில்லை. தாமே சிறு சிறு அளவில் விவசாயம் புரிகின்ற லட்சோப லட்சக்கணக்கான விவசாயிகள் இந்தப் பணியினைச் செய்கிருர்கள். திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள வேலைத்திட்டங்களின் நோக்கம் நிறைவேறுவது என்பது, அரசாங்கம் இரண்டு விஷயங்களில் வெற்றியை அடைவதைத்தான் குறிப்பிடுகிறது. முதலில், தனக்குத் தானே வசதி செய்து கொள்ள முடியாத ஒவ்வொரு சிறு விவசாயிக்கும் வேண்டிய அதிகப்படியான வசதிகளை அவன் அடையும்படிச் செய்தல். இரண்டாவது, பரம்பரை பரம்பரையாக கையாண்டு வருகின்ற பழைய முறைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல், கிடைக்கின்ற எல்லாப்

புதிய வசதிகளையும், முறைகளையும் முழுமையும் பயன்படுத்துகின்ற வகையில் விவசாயிகளை இணங்கச் செய்தலும், ஒவ்வொரு விவசாயியும் திட்டத்தில் பங்கு கொள்கின்ற நிலையை உண்டாக்குவதுமே. மாநிலம் பூராவுக்குமாக, அதிகப்படியான உணவு உற்பத்தி என்ற இலட்சியமானது நிறை வேற்றப்பட, ஒவ்வொரு விவசாயியும் இன்னும் அதிகப்படியான முயற்சிகளை செய்கின்ற நிலையை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களை அதற்கு இணங்கச் செய்யவேண்டும்.

(9) இது வரையில், முதல் இரண்டுத் திட்டக்காலத்தில், இந்த வேலைகள் நேரடியாக அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசாங்கத் துறைச் சிப்பந்திகளினால் செய்யப்பட்டு வந்தது. மூன்றாவது திட்டக்காலத்தில், இதற்கான முயற்சிகள் மிகவும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளபொழுது, அரசாங்கமே தனியாக, உதவியின்றி செய்ய இயலாத அளவுக்கு, இந்த வேலைகள் அவ்வளவு அதிகமாகப் பெருகியுள்ளன. ஆகவே தான், புதிதாக உள்ளாட்சிப் பொறுப்புக்களை ஏற்றுள்ள பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இந்தப் பொறுப்பில் ஒரு பங்கினை ஏற்றுக் கொண்டு, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு உள்ள சுமையினைக் குறைக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மேற் சொன்ன இரண்டு வேலைகளில் ஒன்றான, அதாவது, தேவைப்படுகின்ற அதிக அளவு முயற்சியினை செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை கூறி, அவர்களை இணங்கச் செய்கின்ற வேலை முழுவதும், பஞ்சாயத்துக்களாலும், பஞ்சாயத்து யூனியன்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும். விவசாயிகளுக்கு அதிகப்படியான வசதிகள் அளித்தல் என்ற இன்னொரு வேலை சம்பந்தப்பட்ட மட்டில், இந்த வேலை பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளது; அரசாங்கம் சில வசதிகளை அளிக்கின்ற வேலையைத் தொடர்ந்து செய்யும். உள்ளாட்சி அதிகாரம் பெற்ற புதிய அமைப்புக்கள் மற்ற வசதிகளை அளிக்கின்ற வேலையைச் செய்யும்.

(10) இப்படி பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டு எப்படி இவற்றை சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகள் நடை முறையில் அமுலுக்குக் கொண்டுவருவது என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு அரசாங்க ஆணைகள் பல பிறப்பிக்கப்பட்டுள்ளன. தங்களுடைய புதிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் புதிய உள்ளாட்சி அதிகாரம் பெற்றுள்ள ஸ்தாபனங்களுக்கு உதவி புரியவேண்டி, தேவைப்படுகிற சிப்பந்திகளின் சேவை, அவைகளுக்கு ஒதுக்கப்பட்டு, அளிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத் திட்டத்தில் இதற்கான போதிய நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்களாகவும் இயங்குகின்ற எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இந்தப் புதிய பொறுப்புக்களை எந்த அளவுக்கு தெளிவாகப் புரிந்து கொள்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான், இந்த நடவடிக்கைகள் எல்லாம் பயன் அளிக்கும். அப்படி அவர்கள் அவற்றைப் புரிந்து கொள்ள உதவி புரிவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

பகுதி II—நீர்ப்பாசன வசதிகள்

(11) உணவு உற்பத்திக்கு தேவைப்படுகிற வசதிகள் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது நீர்ப்பாசன வசதிகளேயாகும். இந்த மாநிலத்தில் பயிர்கள் விளைவிக்கப்படுகின்ற 143 லட்சம் ஏக்கர் நிலங்களில், 53 லட்சம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ளன. இந்த 53 லட்சம் ஏக்கர்களில், 40 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு, நீர்ப்பாசன வசதிகள் அரசாங்கத்தினரால் பராமரிக்கப்படுகிற வாய்க்கால்கள், குளங்களிலிருந்து கிடைக்கின்றன. மற்ற 13 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு, விவசாயிகளுக்கே சொந்தமாக உள்ளதும் அவர்களாலேயே பராமரிக்கப்பட்டு வருவதுமான கிணறுகளிலிருந்து அநேகமாக நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. முன்பே குறிப்பிட்ட மாதிரி, ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு பயிருக்கு மேல் பயிரிடப்படுகின்ற நிலம் 28 லட்சம் ஏக்கர்களாகும். இந்த 28 லட்சத்தில், 20 லட்சம் ஏக்கர் நிலங்களில் நீர்ப்பாசன வசதிகள் கிடைப்பதனால்தான், ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களைப் பயிரிட முடிகிறது.

(12) நீர்ப்பாசன வசதிகளை அதிகப்படுத்த, அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அரசாங்க இலாக்காக்கள் செய்கின்ற பொது வேலைகள் ஒரு பகுதியாகவும், விவசாயிகளே அமைத்துக்கொள்கின்ற தனியாக உள்ள வேலைகள் ஒரு பகுதியாகவும், அரசாங்கத்தின் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. தனிப்பட்டவர்களுக்கு இதற்காக கடன்களும், பண உதவித் தொகைகளும் அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளில், இந்தத் துறையில், ஒரு நிலையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் செய்யப்படும். எல்லாப் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆகியவற்றின் பயனாய் கண்டுள்ள அதிகமான உணவு உற்பத்தியின் அளவு, முதல் திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் 3 லட்சம் டன் என்றும் இரண்டாவது திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் 2-1/4 லட்சம் டன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக்காலத்தில் இந்த அதிகப்படியுள்ள அளவானது, ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டன்னாக இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்ருவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள 33 சதவிகித மொத்த உணவு அதிகரிப்பு அளவில் இந்த வேலைத் திட்டங்கள் 8 சதவிகித அளவினுக்கு வழிசெய்யும்.

இந்த வேலைத் திட்டங்களை செயல்படுத்த, அரசாங்கமே தொடர்ந்து நேரடிப் பொறுப்பேற்றுக்கொண்டு, அரசாங்கத் துறையின் சிப்பந்திகளினுல் இந்தப் பணியானது நிறைவேற்றப்படும்.

(13) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் பங்கு பின் வருமாறு இருக்கும் :—

முதலில்.—அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகிற நீர்ப்பாசன பொதுவேலைகளில், 200 ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த நில அளவுக்கு செய்யப்படுகிற நீர்ப்பாசன வேலைகள், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. விட்டுப்போகாமல், தொடர்ந்து திறமையுடன் இந்த நீர்ப்பாசன வேலைகளைப் பராமரித்துவருதல் பஞ்சாயத்து யூனியன்களின் கடமையாகும்.

இரண்டாவதாக.—அரசாங்க இலாக்காக்களினுல் பாதுகாக்கப்படாமலும், தனிப்பட்ட முறையில் சொந்தமாக இல்லாமலும் இருக்கின்ற நிலையில் ஏராளமான நீர்ப்பாசன வேலைகள் உள்ளன. அவை சாதாரணமாக நீரினைக்கொண்டுவந்து வழங்குகின்ற கால்வாய்களும், ஓடைகளுமாகும். தண்ணீர் ஓட்டத்தை தேக்கி விடும்படி தூர் பிடிக்காமல் அவைகள் நல்ல நிலையில் இருக்க, வருடா வருடம் சுத்தப்படுத்தப்பட்டு சீரிய முறையில் அவை பராமரிக்கப்படவேண்டும். பழங்காலத்தில் இந்த வேலை விவசாயிகளின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியாக இருந்து வந்தது. இதைத்தான் இந்த மாநிலத்தில் 'குடி மராமத்து' என்ற பெயரால் அழைக்கிருேம். சமீப காலமாக, இந்த கூட்டு முயற்சி வேலையில் அக்கறையும், ஆர்வமும் குறைந்து கொண்டே வந்து விட்டது. அதன் விளைவாக, இந்த வேலை புறக்கணிக்கப்பட்டு, பின்தங்கி விட்டது. குடி மராமத்துக் கால்வாய்களை பழைய நிலைமைக்கு கொண்டு வந்து, மறுபடியும் ஆண்டு தோறும் தூர் இல்லாமல் சுத்தப்படுத்தும் வேலையைத் தொடங்கி செய்வது, இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனின் தலையாய கடமையாகும். இப்பொழுதே பல மாவட்டங்களில் இந்தத் துறையில் காரிய ரீதியான வேலைகள் தொடங்கிவிட்டன. இதில் குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தைச் சொல்லலாம். இந்த வேலை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு, நிரந்தரமாக தொடர்ந்து செய்யப்படவேண்டும்.

மூன்ருவதாக.—திட்டங்களில் செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசன வசதிகளில் தங்களுடைய பங்கினை, தங்களுடைய பொறுப்பினில் உள்ள பிரதேசங்கள் அடையும்படியான வகையில் நடவடிக்கை எடுக்க, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், இயற்கையாகவே அக்கறை கொண்டிருக்கும். இந்தத்திட்டங்கள் சம்பந்தமாக கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க, அவைபற்றி ஆலோசனைகளும் அறிவுரைகளும் சொல்ல, இந்த ஸ்தாபனங்களுக்கு முழு உரிமை உண்டு.

நான்காவதாக.—மற்ற சில மாநிலங்களில் இருப்பது போல், நீர்ப்பாசன வசதிகளின் அவசியத்தை உணராமல், விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் இருக்கின்ற ஒரு நிலை, நம் மாநிலத்தில் கிடையாது. வழங்கப்படுகிற நீர் சேதமில்லாமலும், திறமையுடன் உடனுக்குடன் பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படும் என்ற முழு நம்பிக்கையுடன், நீர்ப்பாசனத்திற்காக தண்ணீர் விடப்பெறலாம். அத்துடன், எதிலும் சேராமல் தனித்து நிற்கிற நிலைகள் சில இருக்கலாம். பிரதேசங்களில் உள்ள சில சிக்கல்களினுல், இந்த வசதிகளை உபயோகப்படுத்துவதில் கொஞ்சம் காலதாமதம் எங்கோ ஓரிடத்தில் ஏற்படலாம். கிடைக்கின்ற நீரை மிகவும் சிக்கனமாகவும், கண்காணிப்புடனும் உபயோகப்படுத்தி, அதனுல் அதிக உற்பத்தியைக் காண்பதற்கான வசதிகளும் சில இடங்களில் இருக்கலாம். இப்படிப்பட்ட அம்சங்களையெல்லாம் கூர்ந்து கவனித்து, பிரதேசங்களில் நிலவுகிற சிக்கல்களைக் களையப்பட்டு, பாசனத்திற்கு கிடைக்கின்ற நீரை துளி கூட வீணுக்காமல் உபயோகப் படுத்தி, எவ்வளவு அதிகமாகப் பயனை பெற முடியுமோ, அந்த அளவு பயன் பெறுகின்ற வகையில் செயலாற்ற வேண்டியது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

பகுதி III—ரசாயன உரங்கள்

14. விவசாய முறைகளில் நவீனமான அம்சங்களைப் புகுத்துவது என்ற ஒரு துறையிலாவது, இந்த மாநிலத்தில், தவருமல் ஒரு வேகமான மாற்றம் ஏற்பட்டுக் கொண்டுவருகிறது. ரசாயன உரங்களை உபயோகித்தல் என்ற வழக்கம் வெகு வேகமாக பரவிக்கொண்டு வருகிறது. இருபது வருடங்களுக்கு முன்னுல், ரசாயன உரம் என்ருல், அநேகமாக விவசாயிகளுக்கு அது என்னவென்றே தெரியாது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னுல், ரசாயன உரங்களை உபயோகிக்கின்ற முறையினை விவசாயிகள் கவனத்திற்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தது. இதற்காக எவ்வளவோ சிரமப்படவேண்டிவந்தது. பொறுமையாகவும், நிதானமாகவும் விவசாயிகளுக்கு இந்த முறையைப்பற்றி சொல்லி அவர்களை அதற்கிணங்கவைக்க வேண்டியிருந்தது. அத்துடன், அரை விலையில் இந்த ரசாயன உரங்களை அளித்து, பணவிஷயத்தில் அவர்களிடையே ஓர் உருப்படியான முறையில் ஊக்கத்தை ஊட்ட வேண்டியிருந்தது. இந்த முறையில் அம்மோனியம் சல்பேட்டை உபயோகிக்கின்ற வழக்கத்தை, முதல் திட்டம் தொடங்குவதற்கு முன்பு, ஆண்டொன்றுக்கு

30,000 டன் அளவு உபயோகப்படுத்தப்படுகிறது என்ற அளவினை எட்டுகின்ற வரையில், பரப்பவும், போற்றிக் கண்காணிக்கவும் வேண்டியிருந்தது.

15. முதல் ஐந்தாண்டுத்திட்டகாலத்தில், மாநிலத்தில் அநேகமாக எல்லாவட்டாரங்களிலும் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்த விவசாயிகள் இந்த விஷயத்தில் போதிய அனுபவம் பெற்று, அம்மோனியம் சல்பேட்டினை உபயோகப்படுத்துவது நல்லதும், லாபகரமானதும் கூட என்பதைத் தெரிந்து, அப்படி உபயோகப்படுத்தி நெல் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்கின்ற நிலை வந்து விட்டது. மாநிலத்தில் உபயோகிக்கப்பட்டு வந்த அம் மோனியம் சல்பேட்டின் அளவு வருடா வருடம் வெகு வேகமாக அதிகரித்துக்கொண்டே வந்தது. இரண்டாவது திட்டத்தின் முதல் ஆண்டில், மாநிலத்தில் உபயோகப் படுத்தப்பட்ட அம்மோனியம் சல்பேட்டின் அளவு 120 ஆயிரம் டன்களுக்கு மேற்பட்டதாகும். அதாவது, முதல் திட்டகாலத்திற்கு ஆரம்பத்திற்கு முற்பட்ட ஆண்டில் உபயோகப்படுத்தப்பட்ட அளவைவிட இது நான்கு மடங்கு அதிகமாகும்.

16. இப்படி ஊக்குவிக்கப்பட்ட முன்னேற்றத்தின் வேகத்தினை இரண்டாவது திட்டத்தின் அடுத்து வந்த ஆண்டுகளில் அதே வேகத்தில் வைத்துப்பாதுகாக்க முடியாமல் போய்விட்டது துர்பாக்கியமானதாகும். இது விவசாயிகளின் குற்றமல்ல. அவர்கள் இன்னும் அதிகமாக ரசாயன உரம் வேண்டும் என்று உரத்தக் குரலினை தொடர்ந்து எழுப்பிக்கொண்டேதானிருந் தார்கள். ஆனால், இதை ஒதுக்கி வழங்குகின்ற மத்திய அரசாங்கத்தினால் அப்படிச்செய்ய இயலாமல் போய் விட்டது. சென்னைமாநிலத்தில் அம்மோனியம் சல்பேட் டின் உபயோகம் அதிகமாகப் பெருகிய கதையைப்போல், மற்ற மாநிலமெங்கணும் அதேமாதிரி ஒரு நிலை ஏற்பட்டி ருக்கவேண்டும். முதல் திட்டக்காலத்தில் தமிழ்நாட்டில் அடைந்துள்ள முன்னேற்றத்தை இரண்டாவது திட்ட காலத்தில் அடைந்துவிடவேண்டும் என்ற நோக்கத்தில் மற்ற மாநிலங்களும் இந்த முறையைப்பிடித்துக் கொண்டு, அதன்படி செயலாற்றத் தொடங்கிவிட்டன. நாட்டின் மொத்த உபயோகம், நாடு பூராவிற்குமாக இரண் டாவது திட்டக்காலத்தில் மூன்று மடங்காகப் பெருகிய போதிலும், கிடைக்கின்ற அளவில், தமிழ் நாட்டிற்கு நேர்மையான பங்கு அதிகரிக்கப்படவில்லை. உண்மையில் இது அதிகப்படாதது மட்டுமல்ல; ஒரு சந்தர்ப்பத்தில், இருந்ததற்கும் சற்று குறைந்தே கூட இருந்தது. அம் மோனியம் சல்பேட்டுடன் முதலில் மற்ற மற்ற அவ்வளவு வழக்கத்தில் இல்லாத நைட்ரஜன் சத்துள்ள உர (Nitrogenous Fertilizers) வகைகளை வழக்கத்தில் கொண்டு வரவேண்டியதும் அவசியமாயிற்று.

17. இதனால் ஏற்பட்ட அநுபவத்தின் விளைவினால், இந்திய அரசாங்கம், மூன்றாவது திட்டக்காலத்தில் நைட்ரஜன்சத்துள்ள உரத்தினை உற்பத்தி செய்வதில் வேகமான முன்னேற்றத்திற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயல் படுத்த முடிவு செய்தது. இதற்கான தொழிற் சாலைகள் அமைக்க, திட்டமிடப்பட்டுள்ளது. தேசியத் திட்டத்தில் கண்டுள்ள இலக்கின் அளவு அடையப் பெற்றால், மூன்றாவது திட்ட இறுதியில் ஆண்டுக்கு உப யோகப்படுத்தும் அளவு நைட்ரஜன் சத்துள்ள உரங்களைப் பொறுத்தவரையில், முதல் திட்ட ஆரம்பக்காலத்தி லிருந்ததைவிட, ஐந்தரை மடங்கு அதிகமாக இருக்கும். பாஸ்பேட் உரங்களைப் பொறுத்த வரையில், இது மேலும் அதிகமாக இருக்கும். மூன்றாவது திட்டக்கால முடிவி லாவது, இந்திய அரசாங்கம் இந்த மாநிலத்தின் விவ சாயிகளின் தேவைக்கும், அவர்கள் உபயோகிக்க லாயக் குள்ளவைகளை இந்த மாநிலத்திற்கு வழங்கக்கூடிய நிலையில் இருக்கும் என்ற நம்பிக்கையின் பேரில், தமிழ் நாடு அரசாங்கமும் தன்னுடைய மூன்றாவது திட்டத்தில் ஒரு பெரிய இலக்களவினை வரையறுத்துள்ளது. எல்லாம் நினைப்பதுபோல் நடந்து, செயற்கை உரங்களை வழங்குதல் காலாகாலத்தில் துரிதப்படுத்தப்பட்டால், சென்னைமா நிலம், இந்த வகைகளினால் மட்டும், 12½ சத விகித அளவுக்கு, மேலும் கூடுதலான உணவு உற்பத்தியை பெருக்குகின்ற ஒரு நிலையை அடைந்து விடும்.

18. ரசாயன உரங்கள் வழங்குகின்ற வேலை, பஞ்சாயத் துக்களின், பஞ்சாயத்து யூனியன்களின் கையில் இல்லை. மாநில அரசாங்கத்தின் கையில்கூட இந்த அதிகாரம் இல்லை. இந்தியா பூராவுக்கும், மத்திய அரசாங்கம்தான் இந்த ரசாயன உரங்களை துரிதப்படுத்தி, தமிழ் நாட்டிற்கு நியாயமான பங்குகளை ஒதுக்கவேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கிடைக்கின்ற உரத்தை, நேர்மையானஅளவின் அடிப்படையில் பிரித்து விநி யோகம் செய்வதும், இந்த உரத்தை உபயோகிக்க யார் தயாராகவும் உடன்பாடாகவும் இருக்கிறார்களோ, அந்த விவசாயிகளுக்கு நியாயமான அளவில் இப்படி வழங்கப் பட்ட உரமானது மேலும் பகிர்ந்தளிக்கப்படும்படி பார்த்துக்கொள்வதும், மாநில அரசாங்கத்தின் கடமை யாகும்.

19. திட்டமிட்ட முறையில் விநியோகம் செய்கின்ற வேலையின் பகுதியாக, யாருக்கு கடனில் வாங்குகின்ற நிலை உள்ளதோ, அந்த விவசாயிகள் இவற்றை கடனில் பெற்றுக்கொள்கின்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதும் அவசியமாகிறது. இவைகளை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்கின்ற வேலைகளையும், கடன்கள் அளிக்கின்ற வேலையினையும் ஏற்று நடத்துகின்ற அமைப்புக்களாக கூட்டுறவு ஸ்தாபனங்களை உபயோகப் படுத்திக்கொள்கின்ற முறைக்கு சமீப ஆண்டு களில் அரசாங்கம் தன் போக்கினை மாற்றிக்கொண் டுள்ளது. தேவைக்கேற்ப இல்லாமல் உரம் வழங்குதல் மிகவும் அதிகமாகக்குறைந்தும், உரம் வந்து சேருவது

ஒரு நிச்சயமற்ற நிலையில் இருக்கும்பொழுது, விநியோக முறையில் அனேக கடுமையான பிரச்சினைகளும், சிரமங் களும் ஏற்படுகின்றன. அதனுல் பல குற்றச்சாட்டுகள் ஏற்படவும் காரணமாகின்றன. பெறுகின்ற சிறிதளவு அநுபவத்தை வைத்துக்கொண்டு, விநியோகமுறையில் அவ்வப்போது விடாமல் சீரமைப்பு முறைகள் அநுஷ்டிக் கப்பட்டு வருகின்றன. மூன்ருவது திட்டக்காலத்தில் வழங்கும் நிலையில் நல்ல சீரான நிலை ஏற்படும்பொழுது, வினியோக முறை ஒழுங்குபடுத்தப்பட்டு, இந்த வேலை சுமுகமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. இந்தப் பொறுப்பை அரசாங்கம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்தாலும், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இந்தத் துறையில், கீழ்க் கண்ட முறையில், உபயோகமான சில கடமைகளைப் புரிய வேண்டும் :—

(i) விநியோக முறையில் ஒரு சீரான நிலையை ஏற்படுத்துதல் அந்த வேலையின் ஒரு பகுதியாக, பஞ்சாயத்து யூனியன்களும் இந்த வேலையில் அக்கறை எடுத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டு, அவைகளின் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட உர அளவின் பங்கு எவ்வளவு என்பது அவைகளுக்குத் தெரியப்படுத்தப் படும். உரம் சரியாக வந்து சேறுகிறதா என்று அவை கண்காணிக்கும். வருகின்ற உரங்கள் எங்கெங்கு எடுத்துச்செல்லப்படுகின்றன, என்ன செய்யப்படுகின்றன என்பதையும் கண்காணிக்கலாம். இப்படிச் செய்வதின் மூலம், ஒதுக்கப்பட்ட அளவு உரமானது வட்டாரத்தின் உற்பத்தியின் அபிவிருத்திக்காக உண்மையாக உபயோகப் படுத்தப்படுகிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

(ii) விவசாயத் துறையில், விவசாயி அநேக விஷயங் களைத் தெரிந்து கொண்டிருப்பார். விவசாயத்தைப் பற்றிய அறிவானது மிகவும் அதிகமாகவே பரவி உள்ளது. இருந்தாலும், அறிவுரைகளுக்கும், சொல்லி இணங்க வைத்தலுக்கும் இன்னும் அவசியம் இருக்கிறது. அதுவும் குறிப்பாக, புதிய மாதிரி நைட்ரஜன் சத்துள்ள உரங் களையும், பாஸ்பேட் உரங்களையும் உபயோகப்படுத்துவதில், விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட அறிவுரை கூறி விளக்கி அதற்கு அவர்களை இணங்கச் செய்வதற்கும் அவசியம் இருக்கிறது. இந்த அறிவு பரப்பும் வேலை பஞ்சாயத்து யூனியனின் ஒரு முக்கியமான கடமையாகும். இந்த வேலை, வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக செய்யப்படலாம்.

(iii) தன்னுடைய பிரதேசத்திற்குள்ளாகவே, இந்த வேலைகளைச் செய்வதில், பஞ்சாயத்து யூனியனுக்கும், வளர்ச்சி அலுவலர்களுக்கும் உதவி புரிய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும்.

பகுதி IV—உள்ளூர் எருக்கள்

(21) மூன்ருவது திட்ட முடிவில் அடைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ள அதிகப்படியான உணவு உற்பத்தி யானது 33 சதவிகிதமாகும். இதில் எட்டு சதவிகித அளவினை நீர்ப்பாசன வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்தலின் மூலம் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது என்று முன்பே சொல்லப்பட்டுள்ளது. 12½ சத விகித அளவினை ரசாயன உரங்களை உபயோகித்தலை மேலும் அபிவிருத்தி செய்தலின் மூலம் பெறத் திட்டமிடப் பட்டுள்ளது. இன்னும் மிச்சமிருக்கிற 12½ சத விகித அதிக அளவு உணவு உற்பத்தியை பெருக்க வழி செய்யவேண்டும். இதை மற்ற எல்லா வகையான 'முறைகளைக்' கையாளுவதின் விளைவாகப் பெறலாம். இவை அத்தனை வகைகளையும் சேர்த்து ஒழுங்கிணைப் பாக உயர்தரச் சாகுபடி (Better Farming) முறைகள் என்று குறிப்பிடலாம். இந்த முறைகளை கிராம வட்டார அளவுகளில் திட்டமிட்ட முறையில் செயல்படுத்த வேண்டியது பஞ்சாயத்துக்கள், பஞ்சா யத்து யூனியன்கள் ஆகியவற்றின் தலையாய கடமை யாகும். இந்தத் துறையில்தான் இதுவரை அரசாங் கத்தினுல் ஏற்று நடத்திவந்த பொறுப்புக்கள் வலிவான முறையில் மாற்றுகின்ற வேலை இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது.

(22) உயர்தரச் சாகுபடி முறைகளில் மிகவும் முக்கிய மானது, உள்ளூர் எருக்களை உபயோகித்தலும், அதை வழங்குவதை மிகவும் அதிகப்படியான முறையில் பெருக்குவதுமாகும். இந்த விஷயத்தைப்பற்றி கிராமத் தலைவர்கள் தங்களுக்குத் தாங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன், மாநில அளவில் கருத் தரங்குகள், வட்டார அளவில் ஆராய்ச்சிக் குழுக்களின் மூலமாக இதைப்பற்றிய விஷயங்களை பரப்புகின்ற முயற்சியானது கடந்த ஆண்டில் துவக்கப்பட்ட பொழுது உள்ளூர் எருக்கள் சம்பந்தப்பட்ட வரையில் தங்களால் என்னென்ன செய்ய முடியுமோ, அவ்வளவை யும் விவசாயிகள் செய்வதாகவும், ஆனுல் அதிகப்படி யான நீர்ப்பாசன வசதிகளும், அதிகப்படியான செயற்கை உரங்களும் இல்லாமல், உற்பத்தியில் குறிப் பிடத்தக்க அபிவிருத்தியைக் காண இயலவில்லை என்றும் அடிக்கடி கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், இதைப்பற்றி முழுமையாக விவாதித்த பின்னர், இப்படிப் பட்ட ஒரு கருத்தானது ஒரு கற்பனையான சூழலில் எழுந்ததே என்ற உண்மையானது தெரியவந்தது. தோட்ட எரு (Farm yard Manure) எல்லா வட்டாரங்களிலும் ரொம்பவும் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய ஒன்ருகும். ஆனுல் அதே சமயத்தில் இது எங்கும் போதிய அளவுக்குக் கிடைக்காமலும் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பெறக்கூடிய தூரத்தி

லிருந்து கிடைக்கக்கூடிய போதிய அளவு பசுந்தழை உரத்தைப்பற்றிய வரையில், ஒரு வட்டாரத்திற்கும் இன்னொரு வட்டாரத்திற்கு மிடையே மிகப் பெரிய வித்தியாசங்கள் உள்ளன. சில வட்டாரங்கள் பசுந்தழை உர விஷயத்தில் நல்ல சாதகமான நிலையைப் பெற்றுள்ளன என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், அப்படிப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. அனேகமாக, அதிக வட்டாரகளில் பயிர்த் தொழில் பெருகிக்கொண்டே போகிறது. மரங்களின் பெருக்கமும் செடி, கொடிகளின் பெருக்கமும் அழிந்துக்கொண்டே வருகிறது. இதனால் கரிம எரு (Organic Manure) கிடைப்பதில் மிகவும் கடுமையான ஒரு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறை எவ்வளவு தூரம் உள்ளது என்பதை ஒரு ஊகத்தின் பேரில்தான் சொல்ல முடியும். ஒரு வட்டாரத்தில், சராசரியாக விளைகின்ற பயிர்களில் மூன்றில் ஒருபாக அளவுக்குத்தான், முழுமையாக உரம் கிடைக்கிறது. இன்னும் ஒரு பகுதி அரை குறையாகவும், மற்றும் ஒரு பங்குக்கு, சுத்தமாக உரமே கிடைக்காத நிலையும்தான் உள்ளது என்பது பொதுவாக உள்ள ஒரு கருத்தாகும்.

(23) மனிதர்களுக்கு வேண்டிய உணவின் தேவை எவ்வளவு என்று கணக்கெடுத்து நிர்ணயிப்பது போலவே, தன்னுடைய பிரதேசத்தில் உரம் சம்பந்தப்பட்ட வரையில் உண்மையாக உள்ள நிலை என்ன, கிராமத்தில் பயிர் செய்யப்படும் நில அளவுக்கு தேவைப்படுகின்ற உரத்தின் அளவு என்ன என்பதுபற்றி கணக்கெடுத்து நிர்ணயிப்பதில் கவனத்தைச் செலுத்துதல், பஞ்சாயத்தின் முதல் கடமையாகும். அதன் பிறகு, பஞ்சாயத்தானது, தற்சமயம் கரிம உரத்தைப் பெறுவதில் அவைகளுக்குள்ள பல்வேறு முறைகள் என்ன என்று பட்டியல் தயாரிக்க வேண்டும். அதன் பிறகு அதிகப்படியாக தேவைப்படுகிற உரத்தைப்பற்றி, ஒரு மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.

(24) எவ்வளவு உரம் பற்றாக்குறையில் இருக்கிறது என்று ஒரு முடிவுக்கு வந்தபிறகு, அந்தப் பற்றாக்குறையை எந்த வகையான உள்ளூர் எருவை உபயோகப் படுத்துவதன் மூலம் சரிகட்டலாம் என்பதுபற்றி ஆராய வேண்டும். எந்த அளவுக்கு பசுந்தழை உர உபயோகத்தை அதிகப்படுத்தலாம்? அதற்காக எவ்வளவு பசுந்தாள் விதைகள் தேவைப்படும்? வருடா வருடம் அந்த அளவு பசுந்தாள் விதைகளைப் பெற என்ன ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்? பசுந்தழை உரம் தயாரிக்க நிலத்தை நேரடியாகப் பயன்படுத்துவதை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியும்? அதற்காக, என்ன மாதிரி மரங்களும், செடி கொடிகளும் பயிரிடப்பட வேண்டும்? எப்படிப்பட்ட நிலங்களில் அவைகளைப் பயிரிடலாம்? எவ்வளவு கலவை எருக்குழிகள், தோண்டப்பட வேண்டும்? எந்த நிலங்களில் அவற்றைத் தோண்டுவது? யார் இவற்றைத் தோண்டுவது? இந்தக் குழிகளில் நிரப்ப தேவைப்படுகின்ற அதிகப்படியாக கரிமப் பொருள்களை எப்படி உற்பத்தி செய்வது? வேலிப் புதர்கள் அல்லது விவசாயிகளின் நிலங்களின் வரப்புகளில் பயிரிடுதல் என்ற முறையில், எந்த அளவுக்கு அவைகளை உற்பத்தி செய்ய முடியும்? புறம்போக்கு நிலங்களிலும், தரிசு நிலங்களிலும் எந்த அளவுக்கு அவைகளை உற்பத்தி செய்ய முடியும்? இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட வேண்டும். இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகளின் பாணி, நிலத்தை உபயோகப்படுத்துவதில் தற்சமயம் உள்ள முறைக்குத் தகுந்தமாதிரி குறிப்பிடத்தக்க அளவில் மாறி மாறி இருக்கும். அதாவது தற்சமயம் உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களில் பயிரிடுதல், தோட்டம் பயிரிடுதல் முறை இவைகளை பொறுத்தும், புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்களில், கிடைக்கின்ற அளவுக்கும், கரிம எருப் பொருள்கள் கிடைப்பதில் பிரதேசங்களில் உள்ள வசதிகளைப் பொறுத்தும், இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகள் அமையும்.

(25) மோசமான பற்றாக்குறை நிலையை புஞ்சை நிலங்களில்தான் சாதாரணமாக காண முடியும். ஒரு ஏக்கருக்கு ஒரே ஸ்டாண்டர்ட் அளவுள்ள குழி ஒன்று என்ற விகிதத்தில் நிலங்களிலேயே கலவை எருக் குழிகளைத் தோண்டுவதுதான் சாதகமான ஒரு முறையாகும். கிளிரிசிடியா, புங்கம், இபோமியா, ஆடாதொடா, காட்டாமணி போன்ற மரங்களையும் செடி கொடிகளையும் வளர்ப்பதின் மூலம், அப்படிப்பட்ட குழிகளுக்கு வேண்டிய உரப்பொருள்களை அடையலாம். அப்படிப்பட்ட மரங்களையும் செடிப் புதர்களையும் வேலிப் புதர்களாகவும், கரையோரங்களிலும் வைத்துப் பயிரிடுதலில், அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றவும், அவைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டியிருப்பதால், முதல் ஆண்டில் இது விவசாயிகளுக்கு ஒரு சிறு பிரச்சினையாகத்தான் இருக்கும். இந்தப் பிரச்சினையை நடைமுறையில் சமாளிப்பது எப்படி என்பதைத் தெரிந்துகொண்டுள்ள விவசாயிகள், மற்ற விவசாயிகளுக்கும் இதை எடுத்துச்சொல்லி, அவர்களும் அந்த முறைகளை குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளும்படிச் செய்வது பஞ்சாயத்தின் கடமையாகும். அவைகளைப் பாதுகாப்பாக பார்த்துக்கொள்ள போதிய கண்காணிப்பாளர்களை பஞ்சாயத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

(26) தனிப்பட்ட முறையில் விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான இடங்களில் இப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்ளச் செய்வதுடன், தன்னுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு தரிசு நிலங்களில் இப்படிப்பட்ட மரங்களையும், செடி கொடிகளையும் வைத்துப் பயிர் செய்ய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தும் தவறாமல் செய்ய வேண்டிய கடமையாகும்.

அவைகளைப் பயிர் செய்வதன் முதல் நோக்கம், போதிய அளவு எரு கிடைக்கின்ற நிலையை நிலையாக உண்டாக்கிக் கொள்வதுதான். ஆனால், அப்படிப் பயிரிடும் முயற்சி, இதற்காக மட்டுமல்ல. கிராம மக்களுக்கு உபயோகத்திற்குத் தேவையான விறகு, தீவனம் போன்றவைகளையும் அவைகளைப் பயிரிட்டு வளர்த்தல் மூலம் பெற முடியும். விறகு அதிகமாகக் கிடைத்தால், எருமட்டையை அடுப்பெரிக்க உபயோகிப்பது குறையும். அதே சமயத்தில், தோட்ட எருவும் அதிகமாகக் கிடைக்கும்.

பகுதி V—விதைகள்

(27) நீண்ட நெடுங்காலமாகவே, மாநிலத்தின் விவசாயத்துறை, விதைகளைப்பற்றிய வகையில் நிறைய வேலை செய்து வந்திருக்கிறது. விதைகளைத் துருவித் துருவி பொறுக்கி எடுத்தும், அவைகளை நல்ல முறையில் வைத்துக் காப்பாற்றியும் வந்ததினால், பலவகையான நெல், தினை விதை வகைகளை உபயோகத்தில் பயன்படுத்தும்படியான ஒரு நல்ல நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள பல்வேறு வகையான பயிரிடுதல் முறைக்குத் தகுந்த மாதிரி, இந்த பலவகைப்பட்ட விதை வகைகள் பொருத்தமாக உள்ளன. விவசாயிகள் கையாளுகின்ற வழக்கங்களுக்கேற்ப, பல்வகையான காலங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இந்த விதை வகைகள் உபயோகிக்கப்பட்டு, விளைவுகள் கவனத்துடன் ஆராயப்படுகின்றன. இதனால் ஏற்படுகின்ற விளைவின் அளவு, அதனுடைய தரம் எல்லாம் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட்டு பின்புதான் இந்த விதை வகைகள் பலமடங்காக பெருக்கப்பட்டு பெருவாரியாக உபயோகப்பட உபயோகம் செய்யப்படுகின்றன. இந்த தரமான விதை வகைகளைப் பெருக்குதலும், சுத்தமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தலும், ஆகிய இந்த வேலையானது, விவசாயத்துறை இயங்க ஆரம்பித்த காலத்திலிருந்தே, அதனுடைய மிக முக்கியமான வேலைகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

(28) விவசாயத்துறையினரால் தயாரிக்கப்பட்ட, இந்த விதைகளினால் கிடைக்கும் பயன்கள், மாநிலத்தில் எல்லா வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகளால் வெகுவாகப் பாராட்டப்படுகிறது. நெல் பயிரிடுதலைப் பொறுத்த வரையில், மாநிலத்தில் மொத்தம் நெல் பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பில் பத்தில் ஒன்பது பாக அளவு நிலங்களுக்கு மேல் பொருத்தமான தரமான விதை மணிகள் முன்பே கிடைக்கப் பெறுகின்ற நிலை உள்ளது. இரண்டாவது திட்ட முடிவுக் காலத்தில், 80 சதவிகித நிலங்களுக்கு மேல், இந்த விதை மணிகளை உண்மையாக உபயோகப் படுத்தியிருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தினை வகைகளைப் பொறுத்தவரையில், அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை. இருந்தாலும் குறிப்பிடத் தக்க அளவில் நிலங்களில் இவை உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன; இதில், ஒரு நிலையான, உறுதியான முன்னேற்றம் அடையப்பட்டு வருகிறது.

(29) புதியவகை விதைகளை ஆரம்பத்தில் உபயோகிப்பதையும், அதைப்பற்றிச் சொல்லி பிரபலப்படுத்துகின்ற வேலை முடிந்த பிறகு, இப்பொழுது புதிய விதைகளை உபயோகிப்பதுமட்டும் போதாது என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். தரமான விதை எந்தக் காலத்திலும் தரமான விதையாகவே இருந்து விடாது. மூன்று தடவை உபயோகித்த பிறகு, அது அதனுடைய சக்தியை இழந்து விடுகிறது. தரமான விதைகளை உபயோகித்து உயர்ந்த முறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலை நிரந்தரமாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்றால், ஒவ்வொரு நிலத்திலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த விதை மறுபடியும் புதிதாக மாற்றப்படவேண்டும் என்பதை ஒவ்வொரு விவசாயியும் அறியும்படிச் செய்தாக வேண்டும். அப்படி என்றால், அதற்காக திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க என்னென்ன செய்யவேண்டும் என்பதுபற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த வேலைகளாவன :—ஒவ்வொரு ஆண்டும், கிராமத்தில் பயிர் விளைகின்ற நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பாகத்தில் இந்த விதையை தயாரிக்கின்ற வேலையானது நடைபெற வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம விதைப் பண்ணை இருக்க வேண்டும். அந்த விதைப் பண்ணையில், புதிதாக வேண்டியுள்ள விதைகளுக்குத் தேவைப்படுகின்ற, குறிப்பிட்ட வகையில் போதிய விதைகளை உற்பத்திச்செய்து தரக்கூடிய நிலைமையை ஏற்படுத்துகின்ற நிலையில், பொறுக்கு விதைகள் தயாரிக்கப்படும். கிராம விதைப் பண்ணையில் அப்படிப்பட்டதொரு உற்பத்தியைக் காண வழி செய்யும் வகையில், மாநில விதைப் பண்ணையிலிருந்து கிராம விதைப் ப்ண்ணைக்கு முறையான அளவில் வித்துக்குரிய மூல விதைகள் (Primary Seed) கிடைக்கும்படியான, ஒரு நிலையான ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதுமட்டுமல்லாமல், கிராம விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பொறுக்கு விதைகள், நல்ல முறையில் பரிசிலனை செய்யப்பட்டு, நல்ல விதைதான் என்று சான்றளிக்கப்பட்டு, சேகரித்து, ஒரு இடத்தில் வைத்து கண்காணிக்கப்பட்டு, பிறகு அடுத்து வருகின்ற விளைச்சல் காலத்தில் விவசாயிகள் உபயோகப்படுத்த அவர்களுக்கு விற்பனை செய்யும்படியான நிலையான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். கடைசியாக, எந்தெந்த சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட நிலை அவசியமாகிறதோ, அப்பொழுது விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை கடனில் வாங்கக்கூடிய உறுதியான ஒரு நிலையையும் உண்டாக்க வேண்டும்.

(30) அமைப்புமுறை வேலை இரு பகுதிகளாக உள்ளன : ஒன்று, அரசாங்கத்தினால் செய்யப்பட வேண்டியவை; இன்னொன்று, பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியவை. அரசாங்கத்தினால் பெருவாரியான அளவில் அரசாங்க விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு

பராமரிக்கப்படவேண்டும். அவற்றில் கிராமங்களுக்கு வழங்குவதற்கான வித்துக்குரிய மூல விதைகள் தயாரிக்கப்படும். (இந்த மாநிலத்தில் "கிராம சஹாயக் வேலைத்திட்டம்" என்று இப்பொழுது சொல்லப்படுகிற). ஒவ்வொரு ஆண்டும் திட்டமிட்ட முறையில் விதைகளை மாற்றி உபயோகிப்பதற்காக, திட்டமிடப்பட்ட முறையில் பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்தல், பாதுகாத்து வைத்தல், விநியோகம் செய்தல் என்பது பற்றிய ஒரு வேலைத்திட்டம் திட்டமிட்ட முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் கையாளப்படவேண்டும்.

அரசாங்க விதைப் பண்ணைகளை அமைத்து, அதற்காகத் தேவைப்படுகின்ற விதைகளைச் சேகரித்தல் ஒரு புதிய முயற்சியாகவும், ஆரம்பத்தில் அநேக சிரமங்களை அளிப்பதாகவும் இருந்தது. பல இடையூறுகளுக்கும் தவறுகளுக்குப் பிறகு, இந்தச் சிரமங்களும், சிக்கல்களும் பெருவாரியாகத் தீர்க்கப்பட்டு, வேண்டிய அளவுக்கு அமைத்துக்கொள்கின்ற ஒரு நிலையை நாம் இப்பொழுது அடைந்துவிட்டிருக்கிறோம். ஒவ்வொரு அரசாங்க விதைப் பண்ணையின் வேலையானது ஒரு உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில் இயங்கவேண்டும். அரசாங்க விதைப் பண்ணைகளால் விதை வழங்கப்பெறுகின்ற கிராமங்களில் கிராம சஹாயக் வேலைத்திட்ட அடிப்படையிலும், அதனோடு சேர்த்தும், இந்த உற்பத்தித் திட்டமானது அமைய வேண்டும்.

கிராம அளவில் அமைக்கப்படவேண்டிய புதிய அமைப்பு பற்றிய வேலைகள், விவரங்கள் எல்லாம் கடந்த 12 மாதங்களுக்குள்ளான காலத்தில்தான் உருவாக்கப்பட்டு, செயல் புரியப்பட்டு வருகின்றன. இந்தப் பணியினை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய பொறுப்பில் உள்ள பிரதேசத்தில் ஒரு திறமையான கிராம சஹாயக் பணித் திட்டத்தை அமைக்க வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும். பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிகிற வளர்ச்சி அலுவலர்கள் வேண்டிய தொழில் நுணுக்க உதவிகளையும், மேற்பார்வை வேலையையும் செய்வார்கள். தன்னுடைய பிரதேசப் பொறுப்பில், இந்தப் பணிக்காக ஆகும் நிகர செலவுக்காக போதிய நிதிகளை பஞ்சாயத்து யூனியன் அளிக்கவேண்டும்.

பகுதி VI—பயிர்ப் பாதுகாப்பு

(31) நல்ல முறையில் அமைந்துள்ள ஒரு பயிர்ப் பாதுகாப்பு பணித்திட்டம் தமிழ் நாட்டில் உள்ளது. இதனுடைய பணியின் மதிப்பினையும் உயர்வினையும் விவசாயிகள் பாராட்டியுள்ளார்கள். மேலும் பெருகிவருகின்ற தேவைக்கேற்ப, இந்த அமைப்பு முறையும் நல்ல முறையில் விரிவாக்கப்பட்டு வலுவுடன் இயங்கி வருகிறது.

எல்லா வட்டாரங்களில், பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்படுகின்ற நிலையில், இந்த பயிர்ப் பாதுகாப்பு வேலையை ஏற்றுக்கொள்கின்ற வளர்ச்சி அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எல்லா வட்டாரங்களிலும் ஒரே மாதிரி நிலைதான் இருக்கும். அவர்கள் பஞ்சாயத்து யூனியனின் அதிகாரத்திற்குள் பணிபுரிவார்கள். எல்லா வட்டாரங்களிலும் போதிய அளவு இருக்கக்கூடிய வகையில் பிரதேசங்களில் உள்ள ஸ்ப்ரேயர்கள், ட்ஸ்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான நிதி வசதிகள் பஞ்சாயத்து யூனியன் வசம் இருக்கும். வரையறுக்கப்பட்டு ஒரு அளவுக்குட்பட்டு, பூச்சி மருந்துகளை குறைந்த விலையில் விற்பதினால் உண்டாகின்ற செலவையும் பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக்கொள்ளும். அந்த அளவுக்கு மேல், பூச்சிகளினால் பயிர்கள் அதிகமாகத் தாக்கப்பட்டால், அதற்கான செலவு, அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாங்கத்தின் நிதியிலிருந்து சமாளிக்கப்படும்.

பகுதி VII—மரம் நடுதல்

(32) கலவை எரு தயாரிக்க வேண்டிய கரிமப் பொருள்களைப்பற்றியும், பசுந்தழை உரம் பற்றியும் குறிப்பிடும் பொழுது, கிராமங்களில் திட்டமிட்ட முறையில் மரங்களை நட்டுப் பயிராக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. மரம் நடுதல் பல காரியங்களுக்கு பயன்படுகின்ற ஒரு வேலையாகும். கிராம மக்களுக்கு வேண்டிய, விறகு, தீவனம், மூங்கில் மற்றும் வீட்டிற்கும், விவசாயத்திற்கும் வேண்டிய சாதனங்கள், உபகரணங்களுக்கும் அவை பயன்படுகின்றன; பயிரிட முடியாத நிலையில் உள்ள எல்லா நிலங்களும் வீணாகப் போகாமல், அவைகளைச் சிறந்த உபயோகத்தை அளிக்கின்ற முறையில் உபயோகப்படுத்துகின்ற நிலை மரங்களை நட்டுப் பயிராக்குவதின் மூலம் உண்டாகிறது. கிராமத்தின் மூலதனச் செல்வத்தை உருவாக்கவும், பெருக்கவும் இது ஒரு வழியாகும்.

(33) இந்த நோக்கத்தினை இரு வகையான முறையில் அணுக வேண்டும் என்று தமிழகத்தின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினால் கைக்கொள்ளப்படாத எல்லா நிலங்களையும் (பெருவழித்துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள், பொதுப் பணித் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன ஆதாரங்கள், குளங்கள், வனவளத் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒதுக்கப்பட்ட காடுகள் தவிர) ஒவ்வொரு பஞ்சாயத்தின் நேரடி பராமரிப்பு உரிமை முறையில் ஒப்படைத்து, கடந்த சில மாதங்களுக்குள்ளாக, அரசாங்க ஆணைகள் வரிசையாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இப்படி அரசாங்கத்தால் கைக்கொள்ளப்படாத நிலங்களின் பராமரிப்பினை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பதினால் ஏற்படக்கூடிய பயன்களில் மிக முக்கியமானது என்று கருதப்படுவது, குளக்கரையோரங்களில் விறகுக்கு உபயோகிக்கக்கூடிய மரங்களைப் பயிரிட்டு வளர்ப்பதில், உபயோகமாக அமையக்கூடிய மரங்களையும் செடிகொடிகளையும் வைத்து வளர்ப்பதில் பஞ்சாயத்துக்கள் ஒருவிதக் கட்டுப்பாடு இல்லாமல், சுதந்திரமாக செயலாற்றமுடிகின்ற ஒரு நிலை உண்டாவது

தான். அப்படிப்பட்ட பயிர்களை நட்டு அவை பெரிதாக வளருகின்ற நிலை வரையில், அவைகளுக்கு தண்ணீர் பாய்ச்சவும், கண்காணிப்பாக பார்த்துக் கொள்ளவும் ஆகின்ற செலவினைச் சமாளிக்க, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் திட்டமான நிதி வசதிகள் செய்யப் பட்டுள்ளன. பல வட்டாரங்களில் பஞ்சாயத்துக்கள் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டன என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. மூன்றுவது திட்டக் காலத்தில், இந்த விஷயத்தில் உருப் படியான முன்னேற்றம் உண்டாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(34) இதே சமயத்தில், காட்டிலாகாவின் சிப்பந்தி களினல் செய்யப்படவேண்டிய ஒரு பண்ணைக்காடு திட்டத்தை (Farm Forestry Scheme) அரசாங்கம் அனுமதித்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு புதிய வேலை. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இணைப் பான பகுதிகளில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் கலந் தாலோசனை செய்து, இந்த வேலையை அவர்கள் செய்வார்கள். மாநிலத் திட்டத்தில் இதற்காகச் செய்யப் பட்டுள்ள நிதி வசதிகளிலிருந்து, இவைகளை உற்பத்திச் செய்வதற்காக ஆகும் செலவினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். மரம், செடிகள் பெரிதாக வளர்ந்தவுடன், அவைகள் பாதுகாக்கப்படவும், கிராமத்தின் நலனுக்காக உபயோகப்படுத்தப்படவும் வேண்டி, பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்படும். இந்த வேலையைச் செய்ய காட்டு இலாகா அலுவலர்களுக்கு பிரதேசத்தில் என் னென்ன உதவிகள் வேண்டியுள்ளனவோ, அவைகளை அவர் களுக்கு அளிப்பது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

பகுதி VIII—மண்வளப் பாதுகாப்பு

(35) இந்த மாநிலத்தில், முதல் ஆண்டுத் திட்டக் காலத்தில்தான், முதன் முதலாக மண்வளப் பாதுகாப்பு முறைகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது. முதல் திட்டக் காலத்தில், இரண்டு மாவட்டங்களில், சுமார் 17,000 ஏக்கர் நிலப் பரப்பில் இந்த மண்வளப் பாது காப்புத் திட்டம், ஒரு சோதனைப் பயிற்சியாக, ஆரம் பிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் நான்கு மாவட்டங்களுக்கு இது பரவியது. இரண்டு லட்சம் ஏக்கர்களுக்கு கொஞ்சம் குறைந்த அளவு நிலப் பரப்பு அளவுக்கு இந்தத் திட்டம் பரவியது. இதன் விளைவாக, நல்ல அனுபவம் ஏற்பட்டது. அதனுல் இதற்கென்று ஒரு ஸ்தாபன அமைப்பு ஏற்படுத் தப்பட்டது. இந்த ஸ்தாபனமானது மூன்றுவது திட்டக் காலத்தில் மேன்மேலும் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பு வேலைகளை நடத்துகின்ற முறையில் சீராக இயங்கி வரு கிறது. பெரும் அளவில் மண்வளப் பாதுகாப்பு நட வடிக்கைகளை எடுக்க சட்ட பூரவமான ஆதரவு தருகின்ற வகையில், சமீபத்தில் ஒரு சட்டமானது இயற்றப் பட்டுள்ளது.

(36) நீர்ப்பாசன வசதிகள் இல்லாத, அவை அளிக்கப் படமுடியாத நிலையில் உள்ள, புஞ்சை நிலங்களில் உற் பத்தியை அதிகரிக்க, சமநிலைக் கரை கட்டுதல் (Contour Bunding) நல்லதொரு முறையாக அமைகிறது. அப்படிப்பட்ட நிலங்களில், தீவிரச் சாகுபடி முறைகளை மேற்கொள்ள, இதுதான் ஆரம்ப நிலை. முக்கியமான திட்டம் சம்பந்தப்பட்டவரையில், பஞ்சாயத்துக்களைப் பற்றி இன்னும் பேச்சு எழப்படவில்லை. ஆனல், பெரிய அளவில் வேலை செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டு, அதே சமயத்தில் பெருவாரியான வட்டாரங்களில் இந்த வேலை செய்யப்படுகின்ற நிலை வரும்பொழுது, பஞ்சா யத்து ஸ்தாபனங்களையும் இந்த வேலையில் ஈடுபடுத்து கின்ற வேலை மிகவும் அவசியமானதாக ஆகிவிடும். தற் சமயம், இப்பொழுதுள்ள வேலை முறைகளின்கீழ், இந்த மாற்றத்தை எவ்வளவு சரியாக நடத்துவிக்க முடியும் என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பொறுப்புக்கள் எந்த முறையில் அரசாங்கத்திற்கும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்குமிடையே பகிர்ந்து ஒதுக்கப்படவேண்டும்? அதே மாதிரி மண்வளப் பாது காப்புத் துறை அலுவலர்கள், பஞ்சாயத்து யூனியன்களின் வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆகியவர்களிடையே இந்தப் பொறுப்புகளை எந்த முறையில் பகிர்ந்து ஒதுக்கு வது? இவை பற்றியெல்லாம் இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறது. வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடிந்த பிறகு, இந்தத் துறையில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் பங்கு என்ன என்பது பற்றி வரையறுக்கப்படும். மூன்றுவது திட்டக் காலத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் முனைப் பான வெற்றியைத் தேடி தருவதில், பஞ்சாயத்துக்களின் உதவி என்றும் கிட்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

பகுதி IX—தொழில் நுட்ப ஆலோசனைகள்—கலாச்சாரப் பழக்க வழக்கங்களை மேலும் வளர்ச்சி பெறச் செய்யவேண்டிய வசதி களை அளித்தல்—செயல் விளக்கங்களைச் செய்து காட்டுதல்

(37) இவ்வாண்டு அக்டோபர் மாதம் முதல், மாநிலத் தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாய வளர்ச்சித் துறை அலுவலர் பகுதி இயங்கும். அதற்காக அரசாங்கப் பணத்திலிருந்து ஊதியம் அளிக்கப்படும். அந்தப் பகுதியின் வேலைகளை மாவட்ட விவசாய அதிகாரி கண் காணிப்பார். அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்திற்குட்பட்டு பணியாற்றும். பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் மேற்கொண்டுள்ள பொறுப்புக்களின் விளைவாகச் செய்யவேண்டிய எல்லா வேலைத் திட்டங்களையும் செயல்படுத்தி வைப்பதில் இந்த

பணித்துறை பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு உதவியாக இருக்கும். தொழில் நுணுக்க சம்பந்தமான ஆலோசனை களை அளிப்பது, உயர்ந்த கலாச்சார பழக்க வழக்கங்களை செயல் விளக்க முறைகள் மூலமாக செய்து காட்டுகின்ற பணியினை அமைப்பு முறையில் நடத்துவது, ஆகிய இந்த வேலைகள் இந்த விவசாய வளர்ச்சிப் பணித்துறை அலுவலர்களின் முக்கிய பொறுப்புக்களாகும். அவர் களுடைய பணிகளிலிருந்து சிறந்த சேவையை கிரகித்துக்கொள்வதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்பானபடியால், விவசாயிகள் நல்ல முறையில் இதையெல்லாம் வரவேற்கின்ற நல்லதொரு சூழ்நிலையினை ஏற்படுத்தும் வகையில் பஞ்சாயத்து யூனியன்கள் உதவி புரிய வேண்டும்

(38) உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் மேற்கொள் கின்ற முயற்சிகளில், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளை அளிக்கின்ற விஷயத்தில், பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொள்கின்ற எல்லா நடவடிக்கைகளைப் பற்றியும் விளக்கமாக தொகுத்துக் கூறுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பொறுப் புக்களையும் கடமைகளை பகிர்ந்து நடத்துவதற்கான முக்கியமான காரணத்தை, இந்தக் கட்டுரையில் விளக்கிக் கூறுவதற்குக் காரணம், கிராம மக்களின் தலைவர்களாக உள்ளவர்களிடம் ஒரு தூண்டுதலை ஏற்படுத்தி, அவர்களை இந்தப் பணிகளில் ஊக்குவிப்பதும், பிரதேசத் தேவைகள் பிரதேச ஆதாரங்களிலிருந்தே பெருவாரியான அளவுக்கு சமாளிக்கப்படும்படியான ஒரு நிலையை ஏற்படுத்துவதுமேயாகும். இந்த முறைப்படி, பஞ்சா யத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தன்னிச்சை யாகத் தங்களுடைய முடிவுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஒப்ப நடக்க உரிமை பெற்றுள்ளன. அரசாங்கத்தி லிருந்து அவர்கள் எதிர்ப்பார்க்கப்படும் தேவைகள், மாநில அரசாங்கத்தின் சக்திக்குட்பட்ட வகையில் பணம் அளிப்பது, ரசாயன உரங்கள் வழங்குவது ஆகிய இவற் றோடு வரையறுக்கப்பட்டு இருக்கும் வரை, அரசாங்கம் உள்ளாட்சி அதிகாரம் பெற்ற இந்த ஸ்தாபனங்கள், நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவைகளுக்கு உள்ள சுதந்திரத்தில், ஒரு வித கட்டுப்பாட்டையும் விதிக்காது.

பகுதி X—முடிவுரை

(39) ஒவ்வொரு கிராமத்தில் உள்ள ஒவ்வொரு விவ சாயியும், இயற்கையாகவே, தன் உடமையில் உள்ள நிலத்தையும், பயிரையும் மட்டுமே பார்த்துக் கொள்கிறார். பொதுவாக உள்ள நிலங்களைக் கவனிக்கவோ, எவை எவை உபயோகப்படுத்தப்படாமல் உள்ளனவோ, அவற்றை உபயோகப்படுத்திக் கொள்வதற் காக வழிவகைகளைப் பற்றி சிந்தித்து அதில் கவனம் செலுத்துவதற்கோ, தற்சமயம் போதிய அளவுக்கு உபயோகப்படுத்தப்படாமல் உள்ள நிலத்தை வேண்டிய அளவிற்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கான வழி வகைகளைப் பற்றி எண்ணிச் செயலாற்றுவதற்கோ, இது வரையில் கிராமங்களில் ஒருவருமே இல்லாத ஒரு நிலை இருந்து வந்தது. மேலும் கிராமம் முழுவதற்குமாக, உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆதாரங்களையும் வசதி களையும் பற்றி கவனித்துச் செயலாற்றுகின்ற பொறுப் பினை ஏற்றுக்கொள்ளவும், கிராமத்தில் உள்ள ஒவ்வொரு துண்டு நிலமும், அது யாருக்குச் சொந்தமாயிருந்தாலும் யாரால் விவசாயம் செய்யப்பட்டு வந்தாலும் சரி, மக்க ளுக்கு உணவளிப்பதற்காக உச்சமான அளவுக்கு அதில் உணவு உற்பத்தி காணுகின்ற நிலையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கும், கிராமத்தில் ஒரு நபரும் இல்லாம லிருந்தது. மாநிலத்தின் பொருளாதார அமைப்பில் நிலவி வந்த இந்தப் பிளவானது இப்பொழுது அடைக்கப் பட்டு வருகிறது. பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரம் பெற்றவராகவும், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் உறுப்பினராகவும் திகழ்கின்ற ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரும் இந்தப் பொறுப்பானது தன் மீது சுமத்தப் பட்டுள்ளது என்பதை இப்பொழுது தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

(40) ஒரு ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கிச் செயல் முறையில் துல்லியமாக நடத்துவது எப்படி என்பது பற்றிய சுத்தமான கருத்துணர்வு பத்தாண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் இல்லாமலிருந்தது. மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எப்படி இது நடத்தப்படவேண்டும், எப்படி நடக் கிறது என்பது பற்றி இப்பொழுது நமக்குத் தெரியும். திட்டமிட்ட அபிவிருத்திக்கான இந்தச் செயல் முறை யானது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அதனால் ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு வட்டாரமும் இந்தத் திட்டமிட்டு செயலாற்றுகின்ற வேலையில் பங்கு கொள்ளும்படியாக உருவாகக்கப்படவேண்டும் என்ற கருத்து கடந்த பத் தாண்டுகளாகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. ஆனால், இந்த எண்ணத்தை செயல் முறையில் எப்படி நடத்துவது என்பது பற்றி தெளிவான கருத்துணர்வு இல்லாமலிருந்தது. இப்பொழுது இது நமக்குத் தெரிந்து விட்டது என்று நாம் எண்ணுகிறோம். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மாநிலத்தின் விவசாய உற்பத்தி வேலைத்திட்டம் பற்றிய பல்வேறு வேலைகளை 12,540 பஞ்சாயத்துக்கள், 373 பஞ்சாயத்து யூனியன்கள், மாநில அரசாங்கத்துறை செயற்கருவிகள் (agencies) இவர்களிடையே எந்த முறையில் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பது பற்றிய ஏற்பாட்டினை இந்தக் கட்டுரை எடுத்து விளக்குகிறது. அடுத்து வருகின்ற சில ஆண்டுகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் பணிபுரிந்து, இந்தத் திட்டத்தைச் செயல் முறையில் அமுல் நடத்திக் காட்டுவோமாக.

எம். பக்தவத்ஸலம்
விவசாய அமைச்சர்.

பஞ்சாயத்து—அரசிதழ்

பஞ்சாயத்து அபிவிருத்தி—உணவு உற்பத்தி—விவசாய மானியத்தை உபயோகப் படுத்துதல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

[Panchayat Development—Agricultural Production—Utilisation of the Agricultural Grant—Orders issued.]

அரசாங்க ஆணை—

அரசாங்கம் அவ்வப்போது வரையறுக்கின்ற கட்டுப்பாட்டுக்கும் நிபந்தனைக்கும் உட்பட்டு, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை, குறிப்பாக, விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீன் அளம், கிராமக் கைத்தொழில்கள் அபிவிருத்தி ஆகிய வேலைகளை, செயல்படுத்துகின்ற பணிகளை, தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைக்கவேண்டும். முதல் இரண்டு தொகுதி வட்டாரங்களில் அமைக்கப்பெற்றுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் வசம், சமுதாய அபிவிருத்தித்திட்ட வேலைகளை ஒப்படைத்து, அரசாங்கம் ஏற்கனவே உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. 16-11-1960 தேதியிட்ட உணவு-விவசாயத் துறையின் அரசாங்க ஆணை எண் 3792-ல், ஒவ்வொரு பஞ்சாயத்தும், வேளாண்மை அபிவிருத்திக்காக, கிராம உணவு உற்பத்தித் திட்டமொன்றை உருவாக்குவது பற்றி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. மூன்றாவது திட்டக்காலமாகிய ஐந்தாண்டுகளுக்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் என்று 16-8-1960 தேதியிட்ட கிராம அபிவிருத்தி-தலநிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 664-ல் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், பஞ்சாயத்துக்கும் கிடைக்கக்கூடிய நிதி உதவிகள் பற்றிய அமைப்பு முறையும் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக்காலமாகிய ஐந்தாண்டுக் காலத்திற்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், 2 லட்சம் ரூபாய் விவசாய மானியமாக கிடைக்க, இந்த ஆணையில் சொல்லப்பட்டுள்ள பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அவைகளுக்கு செலவில்லாமல் இலவசமாக பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள வளர்ச்சிப்பணி சிப்பந்திகளுக்காகும் செலவானது இந்தத் தொகையில் சேராது. அரசாங்கத்தினாலும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமும் விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய கடன்கள், குறுகிய கால தவணைக் கடன்கள் ஆகியவைகளும் இந்த இரண்டு லட்சத்தில் சேராது. இந்த இரண்டு லட்ச ரூபாயில், ஒரு லட்சம் ரூபாய் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்களிடையே, சில குறிப்பிடப்படுகின்ற காரியங்களுக்காக உபயோகப்படுத்த, ஈட்டு மானியமாக பகிர்ந்தளிக்கப்படும். இன்னொரு லட்சம் ரூபாய், சில குறிப்பிடப்படுகிற காரியங்களுக்காக, பஞ்சாயத்து யூனியன்களிடம், ஈட்டு மானியமல்லாத வகையில் ஒப்படைக்கப்படும்.

3. மூன்றாவது திட்ட ஐந்தாண்டுக் காலத்தில், விவசாய மானியத் தொகையான 2 லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்தும் மேற்கொள்ளவேண்டிய வேலை விவரங்கள், இந்தத் தொகையை செலவு செய்யப் படுவதுபற்றிய முறை, அவை கடைப் பிடிக்கவேண்டிய நிதி, கணக்கு முறை என்பது பற்றிய விவரங்களைப் பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்து பார்த்தது. அரசாங்கம், இதற்காக, விவசாயத்துறை இயக்குநர், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குனர், மீன் அளத்துறை இயக்குனர் ஆகியோரை அவர்களுடைய ஆலோசனைகளை அனுப்பும்படி கேட்டது. அவர்கள் அனுப்பிவைத்த ஆலோசனைகள்பற்றி, சென்னையில் 1961 ஆகஸ்ட் மாதத்தில், அரசாங்கத்தால் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில், பொறுக்கி எடுக்கப்பட்ட சில மாவட்டக் கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், மாவட்ட விவசாய அதிகாரிகள், மாவட்ட கால்நடைப் பராமரிப்பு அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்த மகாநாட்டில் செய்யப்பட்ட முடிவுகளை ஒட்டி, விவசாய மானியத் தொகையில் என்னென்ன வேலைகளை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்பதும், ஒவ்வொரு வேலை சம்பந்தமாகவும் நிதிகளை ஒதுக்குவது பற்றிய மாதிரி முறையும் இந்த உத்தரவுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு ஒன்றில் கண்டுள்ள முறையில் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் இப்பொழுது உத்தரவு பிறப்பிக்கிறது.

4. பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் வசம் சமுதாய அபிவிருத்தித் திட்டவேலைகளை ஒப்படைப்பதின் அடிப்படை நோக்கம், கிராமங்களில் திட்டமிடுதல், பிர உபயோகப்படுத்துதலில் பயன்படவேண்டும் என்பதே. தேசம் சம்பந்தமாக கிராம மக்களின் அறிவு, அனுபவம் அத்தனையும் அரசாங்க மானியத் தொகைகளை அவர்கள் இந்தக் கருத்தை அரசாங்கம் தெளிவுபடுத்தி வலியுறுத்த விரும்புகிறது. இணைப்பு ஒன்றில் சொல்லப்பட்டுள்ள தொகைகள், பஞ்சாயத்து யூனியன்கள் செய்தாக வேண்டிய திட்டவட்டமான ஒதுக்கங்கள் (appropriations)

என்று கருதப்படுமேயானால், இந்த அடிப்படை நோக்கமே தோல்வியுற்றுவிடும். ஆகவே, இந்தத் தொகைகள், மாநிலத்தில் உள்ள எல்லா வட்டாரங்களுக்கும் அநேகமாக சராசரி தேவை எவ்வளவு இருக்கும் என்ற ஒரு உத்தேசத்தில் அரசாங்கம் வகுத்துள்ள ஒரு மதிப்பீடு தான் என்பது இங்கே தெளிவு படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட அம்சங்களில், உபயோகத்திற்கு வேண்டிய நிதிகள் கிடைக்கின்ற அளவில், ஒரு வட்டாரத்திற்கும் இன்னொரு வட்டாரத்திற்கும் இடையே அடிப்படை வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்யும். தன்னுடைய அதிகார வரம்புக்குட்பட்ட வட்டாரத்திற்கு எதிர்பார்க்கப்படுகிற தேவைகள் எவ்வளவு என்ற அடிப்படையில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும், தனக்கென்று ஒரு விவசாய மானிய பங்கீட்டுத் திட்டத்தை தயார் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தயார் செய்யும்பொழுது, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இணைப்பு ஒன்றில் கண்டுள்ள அம்சங்களுக்கு போதிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆனால், தனிப்பட்ட அம்சங்கள் சம்மந்தப்பட்ட மட்டில், பங்கீட்டுத் தொகைகளை பஞ்சாயத்து யூனியன் மாற்றலாம். ஆனால் அப்படிச் செய்யும்பொழுது, கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் :—

(i) (அ) இணைப்பு ஒன்றில் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பகுதிகளில் ஒவ்வொன்றிலும் காட்டப்பட்டுள்ள திட்டங்களுக்காக மொத்த அரசாங்க மானியமானது, ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் போகக்கூடாது.

(i) (ஆ) இணைப்பு ஒன்றில் பகுதி ஒன்றில் குறிக்கப்பட்டுள்ள திட்டங்கள் சம்பந்தமாக, எல்லாப் பஞ்சாயத்துக்களிலிருந்தும் கிடைக்கும் மொத்த நன்கொடைத் தொகை, அந்த எல்லாத் திட்டங்களுக்காகும் மொத்தச் செலவுத் தொகையில், மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையக்கூடாது.

(i) (இ) உபகரணங்கள் அளித்தல், காய்கறி, பழ விதைகளை வினியோகம் செய்தல், பொலிக்காளைகள் வழங்கல் போன்று தனிப்பட்ட நபர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பெறுகின்ற பல்வேறு அம்சங்கள் விஷயத்தில், அதனால் பயன் பெறுபவர்கள், விதிக்கப்படுகின்ற அவைகளுக்கான விலையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு குறையாமல், நன்கொடைத் தொகை அளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிக் குறிப்பிட்டுள்ளதற்கும் குறைந்த சதவிகித அளவில் அப்படிப்பட்ட நன்கொடைகளை பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் வசூல் செய்ய, அவைகளுக்கு அதிகாரம் இல்லை.

(ii) சில அவசியமான திட்டங்களுக்காக, போதிய நிதி வசதிகள் முழுமையாகச் செய்யப்படவேண்டும். இந்த அவசியமான திட்டங்களாவன :—

முதல் இணைப்பின் இரண்டாவது பகுதியில் முதல் அம்சம் :—

16-11-1960-ம் தேதியிட்ட உணவு விவசாயத் துறையின் அரசாங்க ஆணை எண் 3792-ல் விதித்துள்ள அடிப்படையில், ஒவ்வொரு கிராமத்திலும் பொறுக்கு விதைகளை கிராமசகாயர் மூலம் உற்பத்தி செய்து வழங்குதலுக்கான திட்டத்தை நடத்திவைத்தல்.

முதல் இணைப்பின், இரண்டாவது பகுதியில், இரண்டாவது அம்சம் :—

உணவுத் தானியங்களுக்காக, குறைந்த விலையில், பூச்சி மருந்துகள் கிடைக்கும்படிச் செய்தல்.

முதல் இணைப்பில், இரண்டாவது பகுதியின் 13-வது அம்சம் :—

விவசாயச் செயல் விளக்க இடங்களை (Demonstration Plots) அமைத்தல்.

முதல் இணைப்பில் முதல் பிரிவில் முதல் அம்சம் :—

பஞ்சாயத்து தோட்டங்களை அமைத்தல்.

முதல் இணைப்பில் முதல் பகுதியில் இரண்டாவது அம்சம்:—

பஞ்சாயத்துக்கள், சமுதாய உரத்தைத் தயாரித்தல்.

(iii) ஒவ்வொரு வட்டாரத்தின் விவசாய மானிய பங்கீடு திட்டத்தையும், மேற்கண்ட நிபந்தனைகள் அதில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று கவனித்ததின் அடையாளமாக, மாவட்டக் கலெக்டர் அதைச் சரிபார்த்து, அதற்கு தன்னுடைய ஒப்புதலை அளிக்கவேண்டும். அதற்குப் பிறகு திட்டத்தில் செய்கிற மாற்றங்கள் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளால் சரி பார்க்கப்படவேண்டும்.

5. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விவசாய மானிய பங்கீடு திட்டத்தைத் தயாரிக்கும்பொழுது, கீழ்க்கண்ட அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது. அதாவது, திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ஆகும் செலவு அரசாங்க மானியத் தொகையில் திட்டவட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அம்சங்களுக்காக, உத்தேசமாக ரூ. ஒன்றரை லட்சமாக இருக்கும்படியும், ஒதுக்கீடு செய்யாமல் உள்ள அம்சங்களுக்காக வேண்டி இருப்பாக வைத்திருக்க வேண்டிய தொகை அரை லட்சமாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளவேண்டும். 1961-62, 1962-63 ஆண்டுகளில் பல்வேறுபட்ட திட்டங்களுக்காக உண்மையாக செலவிடப்பட்டு, அடைந்துள்ள முன்னேற்றம் எவ்வளவு என்று இருப்பாக வைத்திருக்கின்ற அரை லட்சம் ரூபாயை, அந்தச் சமயத்தில் பங்கீடு செய்து கொள்ளலாம்.

6. இணைப்பு ஒன்றில் சொல்லப்பட்டுள்ள பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களின் அளவு என்ன, அவை நிறைவேற்றப்பட வேண்டிய முறைகள் ஆகியவை பற்றிய விளக்கமான விவரங்கள் இணைப்பு இரண்டில் அடங்கியுள்ளன. விவசாய மானிய பங்கீடு திட்டத்தை தயார் செய்யும்பொழுது, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும், இந்தக் குறிப்புகளையும் ஆலோசனைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசாங்கம் அவைகளுக்கு சொல்ல விரும்புகிறது. இந்த ஆலோசனைகளும், குறிப்புகளும் இந்தத் திட்டத்தை தயார் செய்வதில் அவைகளுக்கு ஒரு வழிகாட்டுகின்ற முறையில் தான் உள்ளனவே அன்றி வேறல்ல; ஒவ்வொரு வட்டாரத்தின் பிரதேச நிலைகளுக்கு ஏற்ப, என்னென்ன மாற்றங்கள் தேவைப்படுகின்றனவோ, அவைகளை சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, பஞ்சாயத்து யூனியன் செய்து கொள்ளலாம்.

7. ஐந்தாண்டுக்கால அளவிற்கு திட்டமிடப்பட்டுள்ள மொத்தச் செலவுத்தொகை, ஐந்தாண்டுகளில் வ்வொரு ஆண்டிலும் எந்த அளவில் பிரித்து செலவிடப்படவேண்டும் என்பது பற்றி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் தெரிந்திருக்கவேண்டும். இதற்காக, கீழ்க்கண்ட விளக்கங்கள் பிறப்பிக்கப்படுகின்றன:—

(i) (அ) 1961-62-க்கு ஒதுக்கின்ற செலவுத்தத்தைக் காப்பாற்றி பராமரிக்கவும், இந்த அளவிற்கு கிடைக்கின்ற தொகையில் சுமார் ஐந்தில் ஒரு பாகமாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

(ஆ) 1962-63 ஆண்டுக்கு ஒதுக்குகின்ற செலவுத் தொகையானது, 1961-62 ஆண்டு முடிவில் மிச்சமிருக்கின்ற தொகையில், சுமார் நான்கில் ஒரு பாகமாக இருக்க வேண்டும்.

(இ) 1963-64 ஆண்டுக்கு ஒதுக்குகின்ற செலவுத் தொகையானது, 1962-63-ன் இறுதியில் மிச்சம் உள்ள தொகையில் சுமார் மூன்றில் ஒருபங்கு அளவுடையதாக இருக்கவேண்டும்.

(ஈ) 1964-65 ஆண்டுக்கு ஒதுக்கப்படுகின்ற செலவுத்தொகையானது, 1963-64 முடிவில் உள்ள மிச்சத் தொகையில் சுமார் ஒரு பாதி அளவினதாக இருக்க வேண்டும்.

(உ) ஆனால், இந்த விதிமுறை அநுசரிக்கப்பட்டுத் தான் ஆகவேண்டும் என்று தீவிரமாக வற்புறுத்தப்பட மாட்டாது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில், தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்காக 'Non recurring expenditure) தேவைப்பட்டாலும், அல்லது, பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொண்டு செயலாற்றுகின்ற வேலைத்திட்டங்களில் ஒருவித குறுக்கீடும் இல்லாத முறையில், முன்னேற்றத்தை காப்பாற்றி பராமரிக்கவும், இந்த அளவு முறைக்கு மேற்கொண்டும் செலவு செய்யும் வகையில் நிர்ணயிக்கும் அதிகாரம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உண்டு.

8. இணைப்பு ஒன்றின் பகுதி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் ஒன்றிலிருந்து ஐந்து வரையில் உள்ள வேலைத் திட்டங்கள் சம்பந்தப்பட்டமட்டில், பஞ்சாயத்துக்களின் உணவு உற்பத்தித் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அவைகளின் தேவைகளைத் தக்க முறையில் பரிசீலனை செய்து, அதைக் கருத்தில் வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட எல்லாப் பஞ்சாயத்துக்களிடையே, கிடைக்கின்ற நிதிகளைப் பங்கீடு செய்து ஒதுக்குதல், பஞ்சாயத்து யூனியன்களின் கடமையாகும்.

அப்படிப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை, அவ்வப்போது செய்யவோ, திருத்தவோ, பஞ்சாயத்து யூனியன்களுக்கு முழு அதிகாரம் உண்டு. இணைப்பு ஒன்றின் பகுதி ஒன்றில், எண்ணிக்கை ஒன்றிலும் ஏழிலும் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உண்டாகின்ற செலவுத் தொகை சம்பந்தமாக, அதனால் பயன்பெறுகின்ற ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனியாக எவ்வளவு நன்கொடையாக அளிக்க வேண்டும் என்ற அளவினை நிர்ணயிக்கவும்; பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் உண்டு.

9. எல்லாப் பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களிலும் இந்த உத்தரவானது 1–10–1961 தேதியிலிருந்து அமுலுக்கு வந்துவிடும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

10. இணைப்பு இரண்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு அம்சங்கள் சம்பந்தமான கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டிய முறையானது, இணைப்பு ஒன்றில் அடங்கியுள்ள புள்ளிக்கணக்கு அறிக்கையின் ஏழாவது பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இணைப்பு மூன்றில் மேலும் இது விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

11. பஞ்சாயத்து யூனியன்களால் உருவாக்கப்படும் விவசாய மானிய பங்கீடுத் திட்டமும் யூனியனுடன் இணைக்கப்பட்டுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களும் உருவாக்குகின்ற உணவு உற்பத்தித் திட்டங்களும் கூட்டாக சேர்ந்து, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் விவசாயத் திட்டமாக அமையும். விவசாயத் திட்டத்தை செயல்படுத்தி நடத்த ஏற்படும் செலவை, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் சமாளிக்க வேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வசமும் முன் பணம் மானியத் தொகையாக ரூ. 10,000-த்தை அளிக்கவேண்டுமென்று அரசாங்கம் தனியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது.

[கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறை 8–9–1961-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460.]

இணைப்பு I

பகுதி-I. ரூபாய் ஒரு லட்சம் ஈட்டு மானியத்தின்கீழ் செயல்படுத்தப்படவேண்டிய வேலைத் திட்டங்கள்.

வரிசை எண்.	இனங்கள் (Items)	தொகை. அரசாங்க மானியம் 1 லட்சத்திலிருந்து கிடைக்கும் தொகை. ரூ.	தொகை. பஞ்சாயத்துக்களின் நன்கொடைகளின் மூலம். ரூ.	மொத்தம். ரூ.	குறிப்புகள்.	அனுமதி அளிக்க, பகிர்ந்தளிக்க, மானியத்தைப் பெறுகின்ற உரிமைகள், மற்ற விஷயங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
அ.	பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவைகளால் நிறைவேற்றப்படுகிற இனங்கள்.					பஞ்சாயத்து வேலைத் திட்டத்தை தயாரித்து, அதை யூனியனுக்கு ஒப்புதலுக்கு அனுப்பும். பஞ்சாயத்து யூனியன் ஒப்புதல் அளித்தபிறகு, பஞ்சாயத்து அதற்கான நிதியை அனுமதித்து, தன்னுடைய நிதியிலிருந்து அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளும்.
1.	விறகு, தீவனம், பசுந்தழை உரம் (பழம் தரும் மரங்கள், நிழல் தரும் மரங்களைச் சேர்த்து, ஆனால் வாழை மரங்களைச் சேர்க்காமல்).	27,000	13,500	40,500	விவசாய வளர்ச்சி அதிகாரியுடன் கலந்தாலோசித்து, என்ன மரங்கள், செடிகள் வைக்கலாம், தோட்டங்களை எப்படி வைத்துப் பராமரிக்கலாம் என்பது பற்றி பஞ்சாயத்து முடிவுசெய்யும்.	அப்படிச் செய்த பிறகு, வேலை முடிந்த பிறகு அதன் அடிப்படையில், பஞ்சாயத்து யூனியனிலிருந்து மானியத் தொகையைக் கேட்கும். யூனியன், பஞ்சாயத்திற்கு மானியத் தொகையினை அளித்துவிட்டு, பின்பு அரசாங்கத்தினிடமிருந்து அதைக் கேட்டுப்பெறும்.
2.	கலவை எரு தயாரித்தல், சமுதாயக் கலவை எரு தயாரிக்கும் இடங்களைப் பராமரித்தல்.	4,000	2,000	6,000	பஞ்சாயத்துக்களின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்து, இந்தத் தொகையினை உதவித் தொகையாக பஞ்சாயத்துக்களிடையே யூனியன் விநியோகம் செய்யும். இந்த உதவித் தொகை ஒரு ஆண்டுக்கு ஒரு தரப்படுத்தப்பட்ட கலவை எருக்குழிக்கு 4 ரூபாய் விகிதத்திற்கு மேல் போகக்கூடாது.	—மேற்சொன்ன மாதிரியே—
3.	பசுந்தழை உரத் தைத் தயாரித்தல்.	4,000	2,000	6,000	பஞ்சாயத்துக்களால் புறம்போக்கு போன்ற நிலங்களில் இது தயார் செய்யப்படும். இயன்றால், இந்தப் பயிர்கள் விதைஉற்பத்திக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் பயிர்கள் ஏலத்தில் விடப்படலாம்; அல்லது சமுதாயக்கலவை எரு தயாரிக்கும் இடத்திற்கு பயன்படுத்தப்படலாம்.	—மேற்சொன்ன மாதிரியே—

வரிசை எண்.	இனங்கள் (Items).	தொகை: அரசாங்க மானியம் 1 லட்சத்திலிருந்து கிடைக்கும் தொகை. ரூ.	தொகை: பஞ்சாயத்துக்களின் நன்கொடைகளின் மூலம். ரூ.	மொத்தம். ரூ.	குறிப்புகள்.	அனுமதி அளிக்க, பரிந்தளிக்க, மானியத்தைப் பெறுகின்ற உரிமைகள், மற்ற விஷயங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
4.	பஞ்சாயத்துக்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பயிர்ப் பாதுகாப்பு, மற்ற வேலைகளுக்காக விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்கள், உபகரணங்கள்.	5,000	2,500	7,500	ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் குறைந்த பட்சம் ஒரே கையால் இயக்குகின்ற ஸ்பிரேயரும், ஒரு வார்ப்படப் பலகை கலப்பையும் இருக்க வேண்டும். இவை பயிற்சிகளுக்காக உபயோகப் படுத்தப்படலாம்; அல்லது விவசாயிகளுக்கு, வாடகை பெற்றுக் கொண்டு, அளிக்கப் பெறலாம்.	பஞ்சாயத்து திட்டத்தைத் தயாரித்து, அதை யூனியனுக்கு, ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கும். யூனியன் ஒப்புதல் அளித்தபின், பஞ்சாயத்து செலவை அனுமதித்து, தன்னுடைய நிதிகளிலிருந்தே செலவை ஏற்றுக்கொள்ளும். அதன் பிறகு வேலை முடிந்த பிறகு கேட்கின்ற முறையில் பஞ்சாயத்து மானியத்தைக் கோரும். யூனியன் மானியத்தை கொடுக்கும். பின்பு, மாநில அரசாங்கத்தினிடமிருந்து அதைக்கேட்டு பெறும்.
5.	வேறு மற்ற இனங்கள்.	6,500	3,250	9,750	ஒரு ஒன்றெற்கென அமைக்கப்பட்ட அடிப்படையில், பஞ்சாயத்து யூனியனால், பஞ்சாயத்துக்களிடையே விநியோகம் செய்யப்பட வேண்டியது.	இந்தத் தொகை தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதை உபயோகப்படுத்துவதற்கான ஆலோசனைகள் கிடைக்கும் பொழுது, இதுபற்றிய வேலை முறை குறிப்பிடப் படும்.
ஆ.	பஞ்சாயத்தினால் சிபார்சு செய்யப்பட்டதும், பஞ்சாயத்து யூனியன் வசம் ஒப்படைக்கப் பட்டு செயல்படுத்தப்படுகிற இனங்கள்.	ஒன்றும் இல்லை.	ஒன்றும் இல்லை.	ஒன்றும் இல்லை.	....	....
இ.	பஞ்சாயத்து யூனியன் வசம் ஒப்படைக்கப் பட்டு. வட்டாரச் சிப்பந்திகளால் செயல் படுத்தப்படுகிற மற்ற இனங்கள்:					
6.	கால் நடை மருந்தகக் கட்டடம் சிகிச்சை செய்ய வசதியுள்ள கொட்டகையுடன்.	17,500	8,750	26,250	இப்பொழுது இருக்கிற கால் நடை மருத்துவ மனைகளுக்கு கட்டடங்கள் தேவையாக இருக்கின்ற இடங்களில், கட்டட வேலையை மேற்கொள்ளலாம். இல்லையென்றால், இந்த நிதி வசதி பின்னால் உபயோகத்திற்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப்படலாம்.	....
7.	ஒவ்வொரு வட்டாரத்திலும், 10 மீன் பாது காப்பு நிலையங்களை ஏற்படுத்துதல்.	36,000	18,000	54,000	இணைப்பு II பார்க்க.	....
	ரூ.	1,00,000	50,000	1,50,000		

பகுதி II—ஈட்டு மானியமல்லாத மானியம் ரூ. 1 லட்சத்தில் நேரடியாக நிறைவேற்றப் படவேண்டிய வேலைத் திட்டங்கள்

வரிசை எண்.	இனங்கள்.	மானியத் தொகை. ரூ.	குறிப்புகள்.	அனுமதிக்க, விநியோகம் செய்ய மானியத்தை கேட்டுப் பெற, போன்ற மற்ற வேலைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
அ.	பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு அவைகளால் நிறைவேற்றப்படுபவை.	இல்லை.		
ஆ.	பஞ்சாயத்து யூனியன்வசம் ஒப்படைக்கப்பட்டு, பஞ்சாயத்தின் சிபார்சின் பேரில் நிறைவேற்றப்படுபவை.			
1.	கிராம சகாயகர் டணித் திட்டத்தைப் பராமரித்தல்.	30,000	தரமான விதைகள் இம்பீரியல் மணங்கொன்றுக்கு ? ரூபாய் வீதம், கிராம சகாயக்குகளுக்கு பண உதவியாக பகிர்ந்தளிக்க.	கிராம சகாயகர் தலைவரிடமிருந்து இந்தப் டண உதவியைக் கோருவார். இந்த கோரிக்கையில், பஞ்சாயத்துத் தலைவர் எதிர்க் கையொப்பம் இடுவார். கிராம சகாயகர் யூனியனிமிருந்து பணம் அளிக்கக் கோருவார். தன்னுடைய சொந்த நிதியிலிருந்து யூனியன் கிராம சகாயருக்குப் பணம் அளிக்கும். மாநில அரசாங்கத்தினிமிருந்து யூனியன் மானியத் தொகையைக் கோரும்.
2.	காய்கறி விதைகளை, பழ விதைச் செடிகளை விநியோகம் செய்தல்.	7,000	காய்கறி விதைகளைப் பொறுத்த வரையில், பண உதவி இதற்காக ஆகும் செலவில் 50 சதவிகிதத்திற்கு மேல் போகாது. பஞ்சாயத்து அல்லது அதனால் உரிமை அளிக்கப்பட்டால், தலைவர் இதனால் பயன் பெறுபவர் யார் என்பதைத் தேர்ந்தெடுப்பார். பழவகைச் செடிகளைப் பொறுத்த வரையில், ஒரு நபருக்கு 15 ரூபாய் என்ற விகிதத்தில் பண உதவியானது கட்டுப்படுத்தப்படும்.	பஞ்சாயத்து யூனியன் திட்டத்திற்கு அனுமதி அளிக்கும். பயன்பெறறவர்களின் பங்கினை யூனியன் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டு, அதனுடைய கணக்கில் அந்தத் தொகையை வரவு வைக்கும். அதன் பிறகு, ஒத்துக்கொள்ளப்பட்ட வகைகளைச் சேர்ந்த வணிக ஸ்தாபனங்களிடமிருந்து தேவைகளை ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பெறும். அவைகளுக்காக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் பணம் கொடுத்துவிடும். அதன் பிறகு, சம்பந்தப்பட்டவர்களுக்கு, அவர்களுடைய பெற்றுக்கொண்டதற்கான சரியான அத்தாட்சி பெற்று, அவைகளை பிரித்தளிக்கும். அதன் பிறகு, மாநில அரசாங்கத்தினிடம் யூனியன் தனக்குச் சேர வேண்டிய மானியத் தொகையைக் கோரும்.
3.	தனிப்பட்ட நபர்களுக்கு பயிர்ப்பாதுகாப்பு சாதனங்களையும், உபகரணங்களையும் வழங்குதல்.	7,500	பண உதவித் தொகை 50 சதவீதத்திற்கு மேல் போகக்கூடாது. (பயன் பெறுபவர்களின் குறைந்த பட்ச நன்கொடை மொத்தம் ரூ. 7,500.)	மேற்சொன்ன செயல்முறையே.
4.	தனிப்பட்ட நபர்களோ, ஸ்தாபனங்களோ, கலவை எருவை உற்பத்தி செய்தல்.	6,000	ஒரு தர அளவுள்ள (Standard) கலவை எருக்குழிக்கு பண உதவி ரூபாய் ஆறு. பயன் பெறுகின்றவர்களை பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும்.	மேலே இனம் (1)க்கு, கிராம சகாயக் பணித்திட்டத்திற்கு இருப்பது மாதிரி.

வரிசை எண்.	இனங்கள்.	மானியத் தொகை.	குறிப்புகள்.	அனுமதிக்க, விநியோகம் செய்ய, மானியத்தை கேட்டுப்பெற, போன்ற மற்ற வேலைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
5.	தனிப்பட்ட நபர்கள் பசுந்தழை உரத்தை உற்பத்தி செய்தல். [தனிப்பட்ட இடங்களிலிருந்தோ, மாவட்ட விவசாய அதிகாரியிடமிருந்தோ, யூனியன் விதைகளைப் பெறுமு.]	5,000	பண உதவித்தொகை 20 சத விகிதத்திற்கு மேல் போகக்கூடாது. [பயன் பெறுவர்களின் குறைந்த பட்ச நன்கொடை மொத்தம் ரூ. 20,000.]	காய்கறி செடி விதைகள் பழச்செடி விதைகள் உள்ள இனம் (2) மாதிரி.
6.	பொலிக் காளைகள் விநியோகம் செய்தல்.	7,500	பண உதவித் தொகை 50 சத விகிதத்திற்கு கட்டுப்படுத்தப்படுவது. பஞ்சாயத்துக்கள் யாருக்கு அளிக்கவேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும். [பயன் பெறுபவர்களின் குறைந்த பட்ச நன்கொடை ரூ. 7,500.]	மேல் சொன்ன மாதிரியே.
7.	பரிவர்த்தனை முறையில் செம்மறி ஆடுகள் விநியோகம் செய்தல்.	1,500	இணைப்பு II பார்க்க.	கணக்கு வைத்துக்கொள்கின்ற முறைக்கு இணைப்பு III பார்க்க.
8.	பரிவர்த்தனை முறையில் சேவல்கள் விநியோகம் செய்தல்.	1,500		
	இ. பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள மற்ற இனங்கள்—			
9.	கால்நடை வளர்ச்சி அதிகாரி, கிராம சேவக்குகளுக்கு முதல் உதவிச் சாதனப் பெட்டிகளை வழங்குதல்.	500	....	இதற்கான திட்டங்களை பஞ்சாயத்து யூனியன் உருவாக்கி அனுமதி அளித்து, செலவை ஏற்றுக்கொள்ளும். அதன் பிறகு மாநில அரசாங்கத்தினிடமிருந்து மானியத்தை யூனியன் கோரும்.
10.	வட்டார கோழி வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துதல் அல்லது கோழி வளர்ப்புப் பண்ணை நடத்துகிற தனிப்பட்ட நபர்களுக்கு பண உதவி அளித்தல்.	3,000	பண உதவி அளிக்கப்பட்டால், அது 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாது தனிப்பட்ட நபர் ஒருவருக்கு 100 ரூபாய்க்கு மேலும் போகக் கூடாது.	வட்டார கோழி வளர்ப்புப் பண்ணைக்கு உபயோகப்படுத்தப்பட்டால், மானியமானது வேலை முடிந்த பிறகு அளிக்கின்ற முறையில் இருக்கும். தனிப்பட்ட நபர்களுக்கு பண உதவி அளிப்பது என்ற முறையில் உபயோகப்படுத்தப்பட்டால், மேலே (2)வது இனத்திற்கு சொல்லியுள்ள நடைமுறை அனுசரிக்கப்படவேண்டும்.
11.	வட்டாரத் தலைமையிடங்களில் வைக்க விவசாய செயல் விளக்கக் கருவிகளையும் சாதனங்களையும் வாங்குதல்.	4,500	சக்தியால் இயங்குகின்ற ஒரு ஸ்பரேயர், மாவட்ட விவசாயியால் அனுமதிக்கப்படுகின்ற மற்ற சாதனம்.	இதற்கான திட்டங்களை யூனியன் உருவாக்கி, அனுமதி அளித்து, அதற்கான செலவை முதலில் ஏற்றுக் கொள்ளும். பின்பு மாநில அரசாங்கத்தினிடமிருந்து மானியத்தைக் கோரும்.
12.	கிராம சேவக்குகளுக்கு விவசாயக் கருவிகள், சாதனங்கள்.	3,000	உதாரணம் : கையால் இயங்குகின்ற ஸ்பரேயர், கை டஸ்டர்கள், இரும்புக் கலப்பைகள், ரோட்டரி விவசாயக் கருவிகள். இதன் எண்ணிக்கையும், வகையும், மாவட்ட விவசாய அதிகாரியின் அனுமதியோடு, யூனியனால் மாற்றப்படலாம்.	இதற்கான திட்டங்களை யூனியன் உருவாக்கி, அனுமதி அளித்து, அதற்கான செலவை முதலில் ஏற்றுக் கொள்ளும். பின்பு, மாநில அரசாங்கத்தினிடமிருந்து மானியத்தைக் கோரும்.

வரிசை எண்.	இனங்கள்.	மானியத் தொகை. ரூ.	குறிப்புகள்.	அனுமதிக்க விநியோகம் செய்ய, மானியத்தைக் கோரிப்பெற, போன்ற மற்ற வேலைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
13.	விவசாய செயல் விளக்கச் திட்டங்களை அமைத்தல். ஒரு கிராம சேவக்குக்கு ஒரு ஆண்டுக்கு 12 இடங்கள்.	2,400	50 சென்ட் இடங்கள், பலவகையான கலாச்சார, எரு சம்பந்தமான செயல் விளக்கம் அளிப்பதற்காக இருக்கவேண்டும்.	மேல் சொன்ன மாதிரியே.
14.	செயல் விளக்கப் பண்ணைகளை கிராம சேவக்குகள் நடத்துதல்.	5,600	ஒரு கிராம சேவக் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு பண்ணை—10 ஏக்கர் நிலப் பரப்பில் இருக்கவேண்டும்—எல்லாத் தரமான விவசாய முறைகளும் செய்து காட்டப்படவேண்டும்.	யூனியன் இதற்கான திட்டங்களைத் தயாரித்து, அனுமதி அளித்து, அதனுடைய செலவை ஏற்றுக்கொள்ளும். பின்பு, மாநில அரசாங்கத்தினிடமிருந்து மானியத் தொகையைக் கோரும்.
15.	உணவுப் பயிர்களுக்காக, பயிர் நோய்த் தடுப்பு மருந்துகளை விநியோகம் செய்வதில் பண உதவி.	15,000	பண உதவி 25 சதவிகிதத்திற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. [பயன் பெறுபவர்களின் குறைந்த பட்ச நன்கொடை ரூ. 45,000.]	இதற்காக, யூனியனின் அனுமதி தேவையில்லை. மாவட்ட விவசாய அதிகாரி போதிய மருந்துகளைச் சேகரித்து வைத்து, அவற்றை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்க நடவடிக்கை எடுப்பார். அவர் ஒரு வட்டாரத்திற்கு ரூ. 3,000 வருடமொன்றுக்கு பண உதவி என்ற அளவு வரையில் மருந்துகளை விநியோகம் செய்வார். பஞ்சாயத்து யூனியனின் விவசாயமானியத்திற்கு இந்தச்செலவைக்காட்டும் ஒப்படைப்பு செலவுப் பட்டியல் ஒன்றை அவர் அனுப்பிவைப்பார். அப்படிப் பற்றில் கணக்கு வைக்கப் படுவது எவ்வளவு என்பதைக் காட்டும் மாதாந்தர அறிக்கைஒன்றை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மாவட்ட விவசாய அதிகாரி அனுப்பிவைப்பார்.
	...		.....	
	மொத்தம் ரூ. ..	1,00,000		

இணைப்பு—II.

இணைப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறுவகைப்பட்ட வேலைத் திட்டங்களை செயல்படுத்துவது பற்றி விவரமான அறிவிப்புக்கள்.

பகுதி 1.—ஈட்டுமானிய வகையில் உள்ள வேலைத் திட்டங்கள்.

1. பஞ்சாயத்து தோட்டங்களை உண்டாக்கி அபிவிருத்தி செய்தல்—

விறகுத் தீவனம், பசுந்தாள் உரம் ஆகியவற்றிற்காகவும், பழம் தரும் மரங்களையும், நிழல் தரும் மரங்களுக்காகவும், பஞ்சாயத்து தோட்டங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்தலை இது குறிக்கும். பஞ்சாயத்து தோட்டங்களை உண்டாக்கும்பொழுது, பஞ்சாயத்து இரு வகையான செலவுகளை மேற்கொள்ளவேண்டி வரும். விதைகள் வாங்க, வரப்பிட இப்படிப்பட்ட வேலைகளுக்காகும் மீளா இனச் செலவு, வேலி போட, தண்ணீர் ஊற்ற, கண்காணிப்பு செய்ய என்பது போன்றவைகளுக்காக தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் செலவு என்பது இந்த இரு வகையாகும். கூலிகளை அமர்த்தி அதற்காக ஆகும் செலவுக்காக ஒரு வரம்பு முறை நிர்ணயிக்கப்படவில்லை. இருந்தாலும், இணையப்பட்ட பஞ்சாயத்துக்களிடையே, மானியத்தொகையை பகிர்ந்தளிக்கும் பொழுது, இந்த வேலைத் திட்டத்தில் செயலில் வீண் செலவுகளுக்கு இடமளிக்காமல், நல்லதொரு கட்டுக் கோப்பான நிலையை ஏற்படுத்துகின்ற வகையிலும், அதே சமயத்தில், தோட்டங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்தலில் ஊக்கமாக இருக்கின்ற பஞ்சாயத்துக்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையிலும் நல்ல தொரு நடைமுறையினை பஞ்சாயத்து யூனியன் கையாள வேண்டும்.

2. பஞ்சாயத்துக்கள் கலவை எரு தயாரித்தல்—

2 (i) இப்பொழுது கீழ்க்கண்ட ஐந்து வேலைத் திட்டங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன:

(1) நகராட்சி மன்றங்களிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களிலும் நடைமுறையில் உள்ள நகர கலவை எரு தயாரிக்கும் திட்டம். (2) பொறுக்கி எடுக்கப்பட்ட 162 வட்டாரங்களில் உள்ளூர் எருக்கள் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம், (3) பெரிய பஞ்சாயத்துக்களில் மலக்கலவை எருவை பெருக்குவதற்கான திட்டம். (4) சிறிய கிராமங்களில், மலக்கலவை எருவை உபயோகப் படுத்துகின்ற முறையில் செய்யப்படுகின்ற முன்னோடித் திட்டம், (5) பொறுக்கி எடுக்கப்பட்ட 50 வட்டாரங்களில் மாட்டுத் தொழுவங்கள்—கிராமக்கலவை எரு திட்டம். —

2. (ii) மேற்கண்ட திட்டங்கள் பெருவாரியான பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி உள்ளன. மேலே சொல்லப்பட்ட, ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டங்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் நேரடிப் பொறுப்பில், தொடர்ந்து நிறைவேற்றப்படும். இதற்காக தேவைப்படுகிற நிதிகள், ரூபாய் 2 லட்சம் மானியத்தில் சேராமல், தனியாக வசதி செய்து தரப்படும். இந்த இனத்தின் கீழ், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அரசாங்க மானியம் ரூ. 4,000, இந்தக் குறிப்பிட்ட வேலைத் திட்டங்கள் அமுலில் இல்லாத பஞ்சாயத்துக்களில் உபயோகப்படுத்த வேண்டும்.

2. (iii) ஒரு சமுதாய உரம் தயாரிக்கும் இடத்தை பஞ்சாயத்து பராமரிக்கலாம். கிராமத்தின் குப்பை, கழிவுப் பொருள்களிலிருந்து கலவை எருவை பஞ்சாயத்து தயாரிக்கலாம். குப்பைக் கூட்டுபவனுக்கு கூலி, சிறிய சாதனங்கள், குப்பை வண்டிகள் போன்றவைகள் வாங்க இதுபோன்றவற்றிற்கெல்லாம் பஞ்சாயத்து செலவிடலாம். கலவை எரு தயாரிக்க குழிகளை குப்பை கூட்டுபவர்தான் சாதாரணமாக அமைக்க வேண்டும். அவர்தான் குழிகளைப் பாதுகாக்கின்ற தொழிலையும் செய்ய வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒரு கலவை எருக் குழிக்காக, (தொடர்ந்து ஏற்படுகிற) செலவுத் தொகையாக ரூபாய் நான்குக்குமேல் போகாத வரையில், பஞ்சாயத்துக்களிடையே, பண உதவியாக, இந்தத் தலைப்பின்கீழ் உள்ள நிதிகளைப் பஞ்சாயத்து யூனியன் பகிர்ந்தளிக்கலாம். கலவை எரு விற்றுக் கிடைக்கின்ற வருவாய், கலவை எருக் குழியை வைத்துப் பராமரிப்பதில் பஞ்சாயத்துக்கு ஏற்படுகின்ற செலவு இந்த இரண்டுக்குமிடையே ஒரு பஞ்சாயத்தில் ஏற்படக் கூடிய வித்தியாசத்தை ஈடுகட்டுவதற்காகத்தான் இந்தப் பண உதவி அளிக்கப்படுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

3. பஞ்சாயத்துக்கள் பசுந்தழை உரத்தைப் பெருக்குதல்.

ஐந்தாண்டுகளுக்கு இதற்காகச் செய்யப்பட்டுள்ள நிதி வசதி ரூ. 6,000. அரசாங்க மானியம் ரூ. 4,000, பஞ்சாயத்தின் நன்கொடைத் தொகை ரூ. 2,000 சேர்ந்து இந்த ரூபாய் ஆறாயிரமாகிறது. தனிப்பட்ட விவசாயிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யவோ, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது தங்களால் ஒழுங்கு முறையில் வைக்கப் பட்டுள்ள கிடைக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களில் ஒரு பயிரை பயிரிட்டு அபிவிருத்திச்

செய்யவோ, பஞ்சாயத்துக்கள் பசுந்தழை உரத்தைத் தயாரிக்கலாம். பஞ்சாயத்து யூனியன்கள் வசம் பராமரிப்புக்காக மாற்றப்பட்டுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கரைகளிலும், படுகைகளிலும் பஞ்சாயத்துக்கள் பசுந்தாழ் உரப் பயிர்களை வைத்து அபிவிருத்தி செய்யலாம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பயிராக்கப் பட்டுள்ள பயிர் நிலப் பரப்பின் அடிப்படையில், இந்தத் தலைப்பின் கீழ் உள்ள நிதியை பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிடையே பகிர்ந்தளிக்கலாம்.

4. பஞ்சாயத்துக்களுக்கும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் விவசாயக் கருவிகள்—சாதனங்கள்—

இந்தத் தலைப்பின் கீழ், 2,500 ரூபாய் பஞ்சாயத்து நன்கொடை உட்பட, மொத்தம் 7,500 ரூபாய் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் அது அளிக்கும் ஈட்டு நன்கொடையைப் பொறுத்து, குறைந்த பட்சம் ஒரு கையால் இயக்குகின்ற மருந்து தெளிக்கும் கருவியையும், ஒரு வார்ப்பட இரும்புக் கலப்பையும் பெற்றிருக்க வேண்டும். இந்த அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு பஞ்சாயத்து யூனியன் இந்த உதவியை வழங்கலாம். வாங்க வேண்டிய கருவிகளின் வகைகளுக்கு மாவட்ட விவசாய அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும். அவை செயல் விளக்கக் காட்சிக்கு அல்லது விவசாயிகளுக்கு கடனுக்கு வாடகை முறையில் கொடுப்பதற்குப் பயன் படுத்தப்படலாம்.

(5) பிற வேலைகள்—

இந்தத் தலைப்பில், பஞ்சாயத்து நன்கொடை 3,250 ரூபாய் உட்பட, மொத்தம் 9,750 ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையைப் பஞ்சாயத்து யூனியன் வைத்துக்கொண்டு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களில் ஏதாவது தனிப் பட்ட திட்டத்தைச் செயல் படுத்த வேண்டி வரும் போது, இந்தத் தொகை பயன் படுத்தலாம்.

(6) கால்நடை மருந்தகக் கட்டடம்—

இந்த வேலைக்காக, பஞ்சாயத்துக்களின் நன்கொடை 8,750 ரூபாய் உட்பட, அரசாங்க ஈட்டு மான்யமாக மொத்த ரூபாய் 17,500 ஒதுக்க சிபார்சு செய்யப் பட்டுள்ளது. ஆரம்பத்தில், இந்தத் தொகையில் பஞ்சாயத்து யூனியன் சொந்தக் கட்டடமின்றி, ஏற்கனவே நடந்துவரும் மருந்தகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு உபயோகப் படுத்தலாம். தொடர்ந்து, கால்நடைப் பாதுகாப்புத் துறை தொடங்கியுள்ள புதிய மருந்தகங்கள் உள்ள இடங்களில் இந்த நிதி உபயோகப் படுத்தப்படலாம். கட்டப்படும் கட்டடம் கால்நடைப் பாதுகாப்புத் துறையினால் அனுமதி வழங்கப் பட்ட வரைப்பட அமைப்பின்படி கட்டப்படலாம். தேவையான உத்தேசத் திட்டங்கள் வட்டார மேற்பார்வையாளரால் தயாரிக்கப்பட்டு, பெரு வழிகள்—கிராம வேலைகள் துறை அதிகாரிகளால் முறைப்படி அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த வேலைக்கு, நிர்வாகத்துக்குரிய அனுமதியைப் பஞ்சாயத்து யூனியன் அளிக்கும்.

(7) மீன் வளர்ப்பு நிலையங்கள்—

இந்தத் தலைப்பின் கீழ், பஞ்சாயத்துக்களின் நன்கொடை 18,000 ரூபாய் உட்பட மொத்தம் 54,000 ரூபாய்க்கு வகை செய்யப் பட்டுள்ளது. 1961-62 வருட காலத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு கிராம சேவக்குக் குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொன்று வீதம், மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 வட்டாரங்களில் இந்தத் திட்டம் முதற்படியாகத் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் மீன் வளர்ப்புக் கென்றும், அந்த இனப் பெருக்கத்திற்கென்றும், மீன் வளர்ப்புக் குளங்களை வெட்டுவதை உள்ளடக்கியதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட குளங்களை மீன் இலாகா நிரப்பும். இப்போதைக்கு இந்தத் தலைப்பின்கீழ் வரும் முழு உதவியையும் ஒவ்வொரு யூனியனிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்தத் தேவையில்லை. ஒரு பகுதியை நிறுத்தி வைத்து பிற்காலத்தில் பயன் படுத்திக் கொள்ளலாம்.

பிரிவு II. ஈட்டு மானியமல்லாத மானியத்தின் கீழ் இடம் பெறும் திட்டங்கள்.

1. கிராம சகாய சேவைப் பராமரிப்பு—

இது பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு முக்கியமான வேலையாகும். இந்த வேலைக்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஐந்தாண்டுகளுக்கு 30,000 ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

இந்தத் தொகை முழுவதையும் பஞ்சாயத்து யூனியன் கிராம சகாயக்குகளுக்கு, உதவி நிதியாக, உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு, பஞ்சாயத்து குறிப்பிடும் விலைக்கு விற்கப்படும் ஒரு இம்பிரியல் மணங்கு பொறுக்கு விதைகளுக்கு 2 ரூபாய் வீதம் கொடுப்பதற்கு பயன் படுத்தப்படும். கிராம சகாயக்குகள் பொறுக்கு விதைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக விற்று மேற் குறித்த விகிதத்தில் உதவி நிதியைக் கேட்டுப் பெறலாம். ஒவ்வொரு ஆண்டும் நெல், தினை வகைகள் பயிரிடப்படும் நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியில் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப் படவேண்டும் என்பதே இந்தத் திட்டத்

தின் அடிப்படை நோக்கமாகும். வட்டாரத் தலை நகர்க் களஞ்சியத்தில் தேவையான மூலவித்துக்கான விதைகளை (Primary Seeds) சேர்த்து வைக்க மாவட்ட விவசாய அதிகாரி ஏற்பாடு செய்வார். கிராம சகாயக்குகள் மூலவித்துக்கான விதைகளை வாங்கி அவற்றைத் தங்கள் பண்ணைகளில் பெருக்குவார்கள். இந்த விதைகளை முறைப்படி சுத்தம் செய்து தேவையான அளவு உலர்த்திய பின்னர் விவசாய வளர்ச்சி அதிகாரி அவற்றைப் பரிசோதித்துப் பைகளில் அடைக்கச் செய்து முத்திரை இடுவார். அவ்வாறு முத்திரையிடப்படும் போதே கிராம சகாயக்குகளுக்கு ஒரு இம்பிரியல் மணங்குக்கு 50 நயா பைசா வீதம் உதவி நிதி அளிக்கப்படலாம். அவ்வாறு முத்திரையிடப்பட்ட மூட்டைகள் மட்டிலுமே விவசாயிகளுக்கு வழங்கப்படும். அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்கப்படும். மீதியிருக்கின்ற உதவி நிதியை, அந்த விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர், கிராம சகாயக்குகள் கேட்டுப் பெறலாம்.

2. உணவுப் பயிர்களில் பூச்சித் தடுப்பு முறைகளுக்கு வழங்கப்படுவதற்கான உதவி நிதி—

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், இந்தத் தலைப்பின் கீழ், ஐந்தாண்டுகளுக்கு 15,000 ரூபாய் ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட விவசாய அதிகாரி, இப்பொழுது செய்து வருவதைப் போன்றே தொடர்ந்து, விவசாய இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பூச்சி மருந்துகளைத் தேவையான அளவு, அங்கீகரிக்கப்பட்டுள்ள விலைக்கு வாங்கி சேமித்து வைத்து அதற்கான பட்டியல் தயாரித்து அனுப்பும் வேலையைச் செய்து வருவார். விவசாய வளர்ச்சி அதிகாரி இந்தப் பூச்சி மருந்துகளை விலையில் 25% த்தைக் குறைத்து (75% விலைக்கு) உணவுப் பயிர்களுக்கு வினியோகம் செய்வார். அவர் பஞ்சாயத்துத் தலைவரின் சான்றிதழின் மேல் உணவுப் பயிர்களுக்கு வினியோகிப்பார். ஒவ்வொரு மாத முடிவிலும் ஒவ்வொரு களஞ்சியத்திலும் இந்த உதவி நிதிக்காக செய்யப்படும் செலவுகளை, இந்த மானியத்திலிருந்து ஆகும் செலவைக் கவனிக்க, பஞ்சாயத்து யூனியனுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இந்த அளவுக்கு மேல் உணவுப் பயிருக்காகவும் உதவி நிதிச் செலவும், உணவுப் பயிரல்லாத பயிர்களுக்கு ஆகும் உதவி நிதிச் செலவும், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சேராமல், விவசாய இலாகாவினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

3. காய்கறி விதைகள், பழச்செடி நாற்றுக்கள் ஆகியவற்றின் விநியோகம்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஐந்தாண்டுகளுக்கு 7,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து அல்லது அதற்கென குறிக்கப்பட்ட தலைவர் ஆகியோரின் சிபாரிசின் பேரில் தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் காய்கறி விதைகளில் விலையில் 50 சத விகிதம் மேற்படாமல் உதவி நிதி அளிக்க மேற்குறித்த தொகை பயன்படுத்தப்படும். வட்டாரத் தலைநகரத்தில் உள்ள டெபோவில் காய்கறி விதைகளையும், பழ நாற்றையும் சேமித்துவைக்க மாவட்ட விவசாய அதிகாரி ஏற்பாடு செய்வார். அவ்வாறு சேமிக்கப்பட்டவை பஞ்சாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு வினியோகிக்கப்படும். டெபோவில் ஒரு பதிவேடு வைக்கப்பட்டு, அதில் இந்த விலைச்சலுகைக்காக ஆகும் செலவைக் கவனிப்பதற்கென்று அந்த யூனியன் பகுதியிலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு வினியோகிக்கப்பட்ட விவரங்கள் பதிவு செய்து கொள்ளப்படும். இந்த உதவி நிதி, பழ நாற்றைப் பொறுத்த மட்டில் ஒரு ஆளுக்கு 15 ரூபாய்க்கு மேற்படக்கூடாது. நிறுவனங்களுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லை.

4. விவசாயக் கருவிகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல்—

இந்தத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 7,500 ரூபாய் ,கருவிகளை வாங்கும் தனிப்பட்டவர்களுக்கு உதவிநிதி அளிக்க உபயோகப்படுத்தப்படும். இந்த உதவி நிதி விவசாயத்துறை இயக்குநரால் முடிவாக அங்கீகரிக்கப்பட்ட குறைந்த அளவு விலையில் 50 சத விகிதத்துக்கு மேல் கொடுக்கப்படமாட்டாது. பஞ்சாயத்துக்கள், யாருக்கு இந்த உதவி நிதிச்சலுகையைக் காட்டலாம் என்று தேர்ந்தெடுத்து, அவர்களிடமிருந்து அவர்களுடைய பங்குத்தொகையை வசூல் செய்து, பஞ்சாயத்து யூனியன் நிதிகளில் வரவு வைக்கும் விவசாயத்துறை இயக்குநர் அல்லது மாவட்ட விவசாய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின் படி, பஞ்சாயத்துக்களுக்கு மருந்துத்தூள் தூவும் கருவிகள் (Dusters and Sprayers, etc.) வழங்கப்படும். தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க எந்த வகையான கருவிகள், எத்தனை கருவிகள் வேண்டும் என்பதெல்லாம் பஞ்சாயத்துக்கள் முடிவு செய்யலாம். பஞ்சாயத்து யூனியன் அங்கீகரிக்கப்பட்ட விலைகளுக்கு, அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிலையங்களுக்கு கொள்முதல் விண்ணப்பத்தை அனுப்பி, கருவிகளை வாங்கி, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு விநியோகிப்பார்கள்.

5. தனிப்பட்ட நபர்கள் தயாரிக்கும் கலவை எரு அபிவிருத்திக்கு உதவுதல்.

இந்தத்தலைப்பின் கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 6,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை, கலவை எருக்குழிகளை வெட்டி உரம் தயாரிக்கும் தனி நபர்களுக்கு, ஒரு ஸ்டாண்டர்டு குழிக்கு (15'×8'×3') 6 ரூபாய்க்கு மேற்படாமல் உதவி நிதி அளிக்கப் பயன்படுத்தப்படும். இந்த உதவி நிதிக்குத் தகுதியானவர்களை இதற்கெனத் தேர்ந்தெடுக்கும் பஞ்சாயத்து, சிபாரிசு செய்யும். கம்

கல்வை எருக்குழிகள் வெட்டப்பட்டதும் இந்த உதவி நிதியில் ஒரு பாதியும், முதலாண்டு உர உற்பத்திக்குப் பின்னர் மறு பாதியும் கொடுக்கப்படலாம். இது ஓராண்டுக்கு திரும்பப்பெறாத உதவி நிதியாக முழுச்செலவும் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த உதவி நிதி புதிய உரக் குழிகளுக்கு மட்டுமே அளிக்கப்படும்.

6. தனி நபர்கள் பயிரிடும் பசுந்தாள் உர உற்பத்திக்கு உதவி.—

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஐந்தாண்டுகளுக்கு, இந்தத் தலைப்பின் கீழ் 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தனி நபர்கள் பசுந்தாள் விதை, தழை உற்பத்தி, விவசாயத் திட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். இது ஒவ்வொரு பஞ்சாயத்தின் உற்பத்தித் திட்டத்திலும் இடம் பெறுவதாகும். ஒவ்வொரு பஞ்சாயத்துப் பகுதிக்குத் தேவையான எல்லாப் பசுந்தழை உரத்தையும் அந்தப் பகுதியிலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே குறிக்கோளாகும். அந்தந்தப் பஞ்சாயத்துப் பகுதிக்குத் தேவையான பசுந்தழைப் பயிருக்கு வேண்டிய விதைகளையும் அந்தந்தப் பகுதியிலேயே உற்பத்தி செய்து கொள்வது முழு வளர்ச்சியைக் குறிப்பதாகும். தேவையான பசுந்தழைப் பயிர் விதைகள் மாவட்ட விவசாய அதிகாரியால் வட்டாரத் தலை நகர டெப்போவில் சேமித்து வைக்கப்பட்டு, பஞ்சாயத்தினால் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்படும். வெளியில் விற்கப்படும் விலையில் 20 சத விதம் குறைவாக மாவட்ட விவசாய அதிகாரியால் விலை நிர்ணயம் செய்யப் படும். இந்த 20 சதவீத விலைச் சலுகைச் செலவை இந்த நிதியை ஒதுக்கும் பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளும்.

7. பொலிக்காளை விநியோகம்.—

இந்தத் தலைப்பின் கீழ் 7,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை பொலிக் காளையின் விலையில் 50 சதவீதத்திற்கு மேற்படாமல் அளிக்கப்படும் உதவி நிதிக்காகப் பயன்படுத்தப் படும். இந்த பொலிக்காளை உதவி நிதி பெறத் தகுதியுடையவர்களைப் பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும். அவ்வாறு பஞ்சாயத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்குப் பொலிக் காளைகளை மாவட்டக் கால்நடை அதிகாரி தேர்ந்தெடுத்து வழங்குவார். இப் பொலி காளைகளைப் பெறுவோர் அதன் விலையில் பாதியை பஞ்சாயத்து யூனியனிடம் செலுத்தி விடவேண்டும்.

8. செம்மறிக் கிடாக்கள் பரிவர்த்தனை முறையில் விநியோகித்தல்.—

9. சேவல்கள் பரிவர்த்தனை முறையில் விநியோகித்தல்—

செம்மறிக்கிடா அல்லது சேவல் மாற்றிக்கொண்டு பெறுவதற்குத் தகுதியுடையவர்களைப் பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும். பஞ்சாயத்து யூனியன் அவர்களுக்கு அவைகளை விநியோகிக்கும். மாவட்டக் கால் நடை அதிகாரி அங்கீகாரத்திற்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன், கிடாக்களையும், சேவல்களையும் வாங்கிப் பரிவர்த்தனை செய்யும். இந்தப் பரிவர்த்தனையினால் யினால் பஞ்சாயத்து யூனியன் பெறுகின்ற கிடாக்களும், சேவல்களும் ஏலத்தில் விற்கப்படலாம். இந்தத் தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி வசதிகள் இவ்வாறு வாங்கி விற்பதினால் ஏற்படுகின்ற பண வித்தியாசத்தை ஈடுசெய்ய உபயோகப்படுத்தப்படும்.

10. கால்நடைப் பாதுகாப்பு வளர்ச்சி அதிகாரிக்கும் கிராம சேவகருக்கும் முதல் உதவிப் பெட்டி (**First Aid Kit**) வழங்குதல்

மாவட்டக் கால் நடை அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட முதலுதவிப் பெட்டிகளை, பஞ்சாயத்து யூனியன் வாங்கி அவற்றை, கால் நடைப் பாதுகாப்பு வளர்ச்சி அதிகாரிக்கும், கிராம சேவகருக்கும் வழங்கும்.

11. வட்டாரக் கோழி வளர்ப்பு நிலையம் (அல்லது) தனியார் கோழி இனப்பெருக்க நிலையங்களுக்கு உதவி நிதி அளித்தல்

இத் தலைப்பின் கீழ் 3,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நல்ல இனப் பெருக்கத்திற்குத் தனிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கென்று பஞ்சாயத்து யூனியனால் ஒரு வட்டாரக் கோழி வளர்ப்பு நிலையம் தொடங்கப்படலாம். அதில் எந்த வகைப் பறவைகளை வளர்க்கலாம் என்பதற்கு இந்த நிலையம் தொடங்குவதற்கு முன் மாவட்டக் கால் நடை அதிகாரி கலந்தாலோசிக்கப் படுவார். இந்தத் தொகை கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தனி நபர்களுக்கு உதவவும் பயன்படுத்தப்படும். அப்படித் தனி நபர்களுக்கு உதவி நிதி அளிக்கும்போது அது அந்தப் பறவைகளின் விலையில் 50 சத விதத்துக்கு மேற்படாமலும், 100 ரூபாய் அளவுக்குமேலாகாமலும் இருக்க வேண்டும்.

12. வட்டாரத் தலை நகரில் விவசாயச் செயல் விளக்கக் கருவி வாங்கி வைத்தல்—

இதற்காக 4,500 ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்தத் தொகை ஒன்று தானியங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி ஒன்று (Power Sp ayer) அல்லது மாவட்ட விவசாய அதிகாரி அங்கீகரிக்கும் வேறு கருவி வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இந்தக் கருவிகள் காட்சிகளுக்கும், வாடகைக்குக் கொடுக்கவும் பயன் படுத்தப்படும்.

13. கிராம சேவகருக்குக் கருவி வாங்கி அளித்தல்—

இந்தத் தலைப்பில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 3,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கையால் இயக்கும் மருந்து தெளிக்கும் கருவிகள் (Hand Sprayers, Hand Dusters), பர்மிய செட்டேன் (Burmese

Settun), விஞ்ஞான இரும்புக் கலப்பைகள், ரோட்டரி உழவுக் கருவிகள் (Rotary Cultivators) ஆகியவை வாங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. எந்த வகைக் கருவி, எங்கு செய்யப்பட்டதை வாங்கலாம் என்கின்ற விஷயங்களை மாவட்ட விவசாய அதிகாரி அங்கீகரிக்க வேண்டும். மேற்குறித்த கருவிகள் அல்லாமல் அந்தப் பகுதிக்குச் சிறப்பாகக் கருவிகள் தேவைப்பட்டால் அவற்றை, மாவட்ட விவசாய அதிகாரியின் முன் அனுமதியுடன் பஞ்சாயத்து யூனியன் வாங்கிக் கொள்ளலாம்.

14. செயல் விளக்க இடங்கள் அமைப்பு—

கலாச்சாரா, எரு சம்பந்தமான முதலான செயல் விளக்க இடங்கள் ஒரு கிராம சேவகர், ஓராண்டுக்குப் 12 இடங்களில் அமைக்க வேண்டும். முதல் ஆண்டில், பொதுத் தலைப்புக்களுடன், தேவையான விளம்பரப் பலகைகளைத் தயார் செய்ய 5 ரூபாய் செலவு செய்யலாம். ஒவ்வொரு இடமும் 50 சென்ட் பரப்பு இருக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திற்கும் விதைத் தயாரிப்புக்கு அல்லது பிற நோய்த் தடுப்பு முறைகளுக்கு என்று 3 ரூபாய் செலவிடப்படலாம்.

15. செயல் விளக்கப் பண்ணைகளை நடத்துதல்—

ஐந்தாண்டுகளுக்கு, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு இந்தத் தலைப்பின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 5,600 ஆகும். ஒவ்வொரு கிராம சேவகரின் வேலை எல்லையில் உள்ள பிரதேசத்தில் ஒரு செயல் விளக்கப் பண்ணை இருக்க வேண்டும். அவருடைய தலைமை நிலையமாக உள்ள கிராமத்தில் இந்த செயல் விளக்கப் பண்ணை இருப்பது நலம். இந்தப் பண்ணை கூடுமானவரையில், 10 ஏக்கரா நில அளவில் இருக்க வேண்டும். இந்தத் துறையில் முன்னேற்றமான எல்லா பயிற்சிகளும் செய்து காட்டப்படலாம். விவசாயம் சம்பந்தமான செலவுகள், வருவாய்கள் பற்றிய கணக்கு விவரங்கள் பராமரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பண்ணைக்கும், கீழ்க்கண்ட செலவுத் திட்டமானது நடைமுறைக்காக சிபார்சு செய்யப்படுகிறது :—

முதல் வருடக்காலத்தில் :

	ரூ.
ஒரு எக்கருக்கு 5 ரூபாய் என்ற விகிதத்தில், விதைகளுக்கான செலவு.	50
ஒரு எக்கருக்கு 5 ரூபாய் என்ற விகிதத்தில் பயிர் நோயைத் தடுக்கின்ற முறைகளின் செலவுகளுக்காக.	50
ஒரு எக்கருக்கு 50 நயா பைசா என்ற அளவில் விதைகளைச் சீர்திருத்துவதற்காக.	5
இடப்பக்கத்தில் தலைப்புகள் போட, வலப் பக்கத்தில் விவரங்கள் குறிக்க இடம்விட்ட பெரிய அளவில் உள்ள விளம்பரப் பலகைக்காக.	15
ரூ.	120

முதல் ஆண்டுக்கு அடுத்த ஆண்டுகள் ஒவ்வொன்றிற்கும் :

	ரூ.
ஒரு எக்கருக்கு 5 ரூபாய் வீதத்தில் விதைகளுக்காக	50
ஒரு எக்கருக்கு 5 ரூபாய் வீதத்தில் பயிர் நோய்த்தடுப்பு முறைகளுக்காக, நோய்த் தடுப்பு மருந்துகளுக்காக.	50
ஒரு எக்கருக்கு 50 நயா பைசா என்ற வீதத்தில் விதைகள் திருத்த.	5
விளம்பரப் பலகையை சீர்திருத்துதற்காக.	5
ரூ.	110

யூனியனில் ஐந்தாண்டுகளுக்கு 10 செயல் விளக்கப் பண்ணைகள் நடத்த ஆகும் மொத்தச் செலவு $(1 \times 120 + 4 \times 110) \times 10 =$ ரூ. 5,600.

யூனியன் கமிஷனர் இந்தச் செலவைச் செய்து கொள்ளலாம்.

இணைப்பு III.

பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று நடத்த வேண்டி, அவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள, விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலை முறைகளில் கையாளப்பட வேண்டிய கணக்குகள் பற்றிய நடைமுறை :

வேலைத் திட்டங்களை வகைப்படுத்துதல் :—

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ஏற்று நடத்த வேண்டிய விவசாயத் திட்டங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன :—

அ. ஈட்டு மானியத்தின் கீழ் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டிய வேலைகள். அவையாவன :—

(1) விறகு, தீவனம், பசுந்தழை உரம் ஆகியவற்றிற்காக பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்துதல்

(2) கலவை எரு தயாரித்தல்—சமுதாய எரு தயாரிக்கும் கொல்லைகளைப் பராமரித்தல்—கிராமக் கழிவுகளிலிருந்து கலவை எரு தயாரித்தல்.

(3) பசுந் தழை உரத்தை அபிவிருத்தி செய்தல்—புறம்போக்குகள், குளம் குட்டைகளின் கரைகள், பசுந் தழை உரத்திற்கு அல்லது சமுதாய எருக்கொல்லைகளிலோ மற்ற கிடைக்கக்கூடிய நிலங்களில் பசுந்தாள் உரப்பயிர் வகைகளை உண்டாக்குதல்.

(4) பயிற்சி முறைகளைச் செய்து காட்டும் வேலைகளுக்காக, இனமாகவோ, வாடகை வாங்கிக்கொண்டோ, விவசாயிகளுக்கு அளிப்பதற்காக குறைந்தபட்ச பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களையும், தேவைப் பொருள்களையும் பஞ்சாயத்துக்கள் வசமோ, அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களிடமோ இருக்கும்படிச் செய்தல்.

(5) இதைத் தவிர மற்ற வேலைகள். இந்த வேலைத் திட்டங்களைச் செய்ய, பஞ்சாயத்துக்களிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு ஈட்டு நன்கொடை தேவைப்படுகிறது.

ஆ. ஈட்டு மானியமல்லாத முறையின்கீழ், பஞ்சாயத்துக்களின் சிபார்சுகளின் பேரில், பஞ்சாயத்து யூனியன் வசம் ஒப்படைக்கப்பட்டு, வட்டாரச் சிப்பந்திகளால் மட்டும் செயல்படுத்தப் படுகின்ற வேலைகள் :

(1) கிராம சகாயகர் வேலைத் திட்டம்.

(2) காய்கறி விதைகள், பழவகைச் செடிகளை அரை விலையில் விநியோகம் செய்தல்.

(3) பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களையும், அதற்கான தேவைப் பொருள்களையும் விவசாயிகளுக்கு அரை விலையில் வழங்குதல்.

(4) தனிப்பட்ட நபர்கள் கலவை எரு தயாரித்தலை அபிவிருத்தி செய்தல்.

(5) தனிப்பட்ட நபர்கள் பசுந்தழை பயிர்களைத் தயாரித்தலை அபிவிருத்தி செய்தல்.

(6) பொலிக் காளைகளை வழங்குதல்.

(7) செம்மறி ஆடுகளை பரிவர்த்தனை முறையில் வழங்கல்.

(8) சேவல்களை (Cockerels) பரிவர்த்தனை முறையில் வழங்கல்.

இந்த வேலைத் திட்டங்களுக்காக பஞ்சாயத்துக்கள் ஒருவித நன்கொடையையும் அளிக்க வேண்டியதில்லை.

இ. பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, வட்டாரச் சிப்பந்திகளால் ஏற்று நடத்தப்படும் மற்ற வேலைகள் :—

(1) செயல் விளக்க (Demonstration) தேவைப் பொருள்களை வட்டாரத் தலைமை இடங்களில் வாங்கி வைத்தல்.

(2) கிராமச் சேவகர்களுக்கு வழங்கவேண்டிய உபகரணங்கள்.

(3) செயல்விளக்க இடங்களை (Demonstration Plots) கிராம சேவக்குகள் அமைத்தல்.

(4) ஒவ்வொரு கிராம சகாயக்கும் ஒவ்வொரு செயல் விளக்கப் பண்ணைகளை நடத்துதல்.

(5) உணவுத் தானிய விதைகளைக் காப்பாற்றும் பூச்சி மருந்துகளை குறைந்த விலையில் வழங்கல்.

(6) கால்நடை மருந்தகங்கள்—கட்டடங்கள் அமைத்தல்.

(7) வளர்ச்சி அதிகாரிகளுக்கும் கிராம சேவக்குகளுக்கும் முதல் உதவி உபகரணங்களை அளித்தல்.

(8) தனிப்பட்ட வகையில் கோழிப் பண்ணை நடத்துபவர்களுக்கு பண உதவி அளித்தல், அல்லது வட்டார கோழிப் பண்ணையை நடத்துதல்.

(9) மீன் வைத்துப் பாதுகாக்கும் இடங்களை அமைத்தல்.

இவைகளில், 6, 9 இனங்கள் தவிர, மற்றவற்றிக்கு, பஞ்சாயத்துக்களோ, பஞ்சாயத்து யூனியன்களோ ஈட்டு நன்கொடை அளிக்கத் தேவையில்லை. ஆறு, ஒன்பது ஆகிய இரண்டு இனங்களுக்கும், மூன்றில் ஒரு பங்கு ஈட்டு நன்கொடை அளிக்கப்படவேண்டும்.

பல்வேறு வகைப்பட்ட திட்டங்களுக்கு அவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு என்று பஞ்சாயத்துக் களிடையே பங்கீடு செய்தல் :—

2. விவசாய மானியங்கள் முன் பணம் பெறும் திட்டத்தை பஞ்சாயத்து யூனியன் மன்றம் தயாரிக்க வேண்டும். அதில் இனங்கள் ஏ, பி, சி என்ற வகையில் எந்தெந்த வேலைத் திட்டங்கள் என்று ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். ஈட்டு நன்கொடைகள் தேவைப் படுகிற வேலைத் திட்டங்களுக்காக ஆகும் செலவின் அளவு, ஐந்தாண்டுகளுக்கு அரசாங்க மானியத்தில் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே போல, நன்கொடைகள் தேவைப் படாத திட்டங்களுக்காக ஆகும் பணமானது ஐந்தாண்டுகளுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் போகக் கூடாது.

2. (2) பஞ்சாயத்துக்களால் தயார் செய்யப்பட்ட கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்த, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வேண்டிய தேவைகள் என்ன என்பதை கணக்கில் வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் கோரியுள்ள தேவைகளை எல்லாம் பஞ்சாயத்து யூனியன் ஒன்றுக திரட்ட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் கிடைக்கும் நிதி அளவின் அடிப் படையில், பஞ்சாயத்துக்களுக்கு குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்காக எவ்வளவு தொகை கிடைக்கும் என்பது பற்றி, பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் தெரியப்படுத்த வேண்டும்.

பஞ்சாயத்துக்கள் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றிய நிதி, கணக்கு சம்பந்தமாக கையாளப்பட்ட வேண்டிய நடைமுறைகள் :—

3. ஏ பிரிவில் சொல்லப்பட்டுள்ள வேலைத் திட்டங் களுக்காக, உதவி மானியத் தொகையாக, வேலை முடிந் ததின் பின்னுல் அளிக்கும் முறையில், அரசாங்க மானியத் தொகையானது பஞ்சாயத்து யூனியன் மூலமாக பஞ்சாயத்துக்களுக்கு கிடைக்கும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகளைச் செயல்படுத்து வதற்கான செலவினை பஞ்சாயத்துக்கள் ஏற்று அதற் காகச் செலவு செய்து, பிறகு, திட்டங்களுக்காக செலவு விவரங்கள் ஒவ்வொரு கால் ஆண்டுக்கும் எவ்வளவு ஆனது என்று விவரங்களைக் காட்டி, பணத்தை திருப்பிப் பெறுவதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கிராம சேவக் இந்த அறிக் கையை சரிபார்த்து, அதற்கு எதிர்க் கையொப்பம் இட வேண்டும். இதன் அடிப்படையில், பஞ்சாயத்து யூனியன் மன்றம், தன்னுடைய உற்பத்திக் கணக்கில் சம்பந்தப் பட்ட தலைப்பில் வரவு வைத்துக்கொண்டு, சம்பந்தப் பட்ட பஞ்சாயத்தின் கிராமப் பஞ்சாயத்துத் தொகை நிதிக் கணக்கில் பற்று வைப்பதின் மூலம் பஞ்சாயத் துக்கு செலவழித்ததைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். கணக்கு எண் இரண்டில் பற்று வைக்கச் சொல்லி உபகஜானுவுக்கு அறிவிப்புச் செய்து, பிரதேச நிதிக் கணக்கு ஒன்றில் செக் மூலம் பணம் அடைவதின் மூலம் இதைச் செய்யலாம்.

பஞ்சாயத்துக்களின் சிபார்சுகளின் பேரில் வட்டாரச் சிப்பந்திகளால் நிறைவேற்றப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய செயல் முறை.

4. (1) பாரா ஒன்றில், பிரிவு அ-யில் 2, 3, 4, 5 என் னுள்ள இனங்கள் சம்பந்தப்பட்ட வகையில், இந்த வேலைத் திட்டங்களுக்காக எவ்வளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதைப் பஞ்சாயத்து யூனியன் மன்றம் நிச்சயிக்க வேண்டும். பணம் வழங்குகின்ற திட்டங்கள் சம்பந்தமாக, பஞ்சாயத்து யூனியனுக்கு பூராவும் தேவையானவற்றை கணக்கிட்டு, தேவைக் குறிப்புகளை வட்டாரச் சிப்பந்திகள் தயாரிப்பார்கள். தனிப்பட்ட நபர்களால் அரை மதிப்பின் அளவில் வரவு வைக்கப் பட்ட வரவுத் தொகைகளும், இந்த வேலைகளுக்காக ஆகும் செலவுக்காக பயன்படுத்தப்படும். உதவித் தொகைகள் மூலம் கிடைக்கும் நிகரச் செலவுகள் மட்டும் திட்டச் செலவாக எடுத்துக்கொள்ளப்படும்.

4. (2) இந்த பணம் வழங்குகின்ற திட்டங்களுக்காக வேண்டிய கோரிக்கையை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் சிபார்சு செய்யவேண்டும். அப்படிச் சிபார்சு செய்யப்பட்ட கோரிக்கை அந்தப் பிரதேசத்தின் கிராம சேவக்கின், மூலமாக, பஞ்சாயத்து யூனியன் கமிஷ னருக்கு அனுப்பப்படவேண்டும்.

4. (3) கிராம சகாயத் திட்டம், தனிப்பட்ட நபர்களால் கலவை எரு தயாரிப்பை அபிவிருத்தி செய்தல் ஆகிய வேலைகளினுல், தனிப்பட்ட நபர்களுக்கு உதவித் தொகைகள் ரொக்கமாக அளிக்கப்படவேண்டிய நிலை இருக்கும். இங்கும், திட்டத்திற்காக, பஞ்சாயத்து வாரியாக, தொகையை மேலும் பகிர்ந்து அளிக்கின்ற வகையையும் பஞ்சாயத்து யூனியனே முடிவு செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர் வளர்ச்சித்துறை சிப்பந்திகளால் அளிக்கின்ற போதிய சான்றுகளின் பேரில்தான், பஞ்சாயத்து யூனியன் கிராம சகாயக்குக்கு உதவித் தொகை அளிக்கும்.

4. (4) மேலே வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறை போலவே, ஆ (6) வது இனத்திற்கான நடைமுறையும் இருக்கும். அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் உதவித் தொகையும் தனிப்பட்ட நபர்களிடமிருந்து வசூலிக்கப் படவேண்டிய ஈட்டு நன்கொடைகளும் பொலிக்காளைகள் வாங்கப் பயன்படுத்தப்படும். அரசாங்க உதவித் தொகை

மட்டும்தான் திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கு எதிராக கணக்கில் வைக்கப்படும். ஏழு, எட்டு இனங்கள் சம்பந்தப்பட்ட வகையில், செம்மறி ஆடுகள், சேவல்கள் வாங்குவதினால், செலவு ஏற்படும். பரிமாறிக் கொண்ட பிறகு, பரிவர்த்தனை முறையில் வாங்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள, செம்மறி ஆடு அல்லது சேவல் ஆகியவை விதையடிக்கப்பட்டு, விற்கப்படவேண்டும். அப்படி விற்று கிடைக்கின்ற தொகையானது, பஞ்சாயத்து யூனியன் நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். திட்டமிடப்பட்ட வரம்பு (Schematic Ceiling) என்பதற்கு எதிராக, மொத்த செலவுக்கும் வரவுக்குமிடையே உள்ள வித்தியாசத் தொகைதான், கணக்கில் வைக்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்ற வேண்டிய வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக கையாளப்படவேண்டிய செயல் முறை :

5. (1) இந்தத் தலைப்பில் ஒன்பது வேலைத் திட்டங்கள் உள்ளன. இதில், ஏழுத்திட்டங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் அல்லது பஞ்சாயத்திவிடமிருந்து ஈட்டு மானியமாக ஒன்றும் கிடையாது. பூச்சி ஒழிப்பு மருந்துகள் பஞ்சாயத்து யூனியனுக்கு மாவட்ட விவசாய அதிகாரியால் வழங்கப் பெறும். பஞ்சாயத்துக்கு இதற்கான தேவைகளை குறிப்பிட்டுக்கேட்கும் அதிகாரம் பஞ்சாயத்து யூனியனிடம் இருக்கும். குறைந்த விலையில் இந்தப் பூச்சி ஒழிப்பு மருந்துகளை விற்பதினால் கிடைக்கும் வருவாய்த் தொகை, மாநிலத்தின் கணக்கில் பொருத்தமான தலைப்பில், விவசாய வளர்ச்சி அதிகாரியினால், கட்டப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியனுக்கு கிடைக்கும்படி இருக்கக்கூடிய உதவித் தொகையையும், கொடுக்கப்பட்டவைகளின் மதிப்பைக் காட்டும் ஒரு ஒப்படைப்புக் கணக்கு (Pro forma Account) இருக்கும். திட்டமிடப்பட்ட வரம்புக்கு எதிராக, உதவித் தொகை மட்டும்தான் வரவு வைக்கப்படும்.

5. (2) மற்ற இனங்கள் சம்பந்தப்பட்டவரையில், பஞ்சாயத்து யூனியன்களால் செலவானது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். திருப்பித் தருகின்ற தொகையானது அரசாங்கத்தினிடமிருந்து பெறவேண்டும்.

அரசாங்க மானியத்தை நோக்கி செய்யப்படுகின்ற செலவுக்காக மாநிலக் கணக்கில் வரவுத் தலைப்புகள்---கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் :

6. (1) இந்த செலவுகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானிய உதவித் தொகையாக ' 40. விவசாயம் ' என்ற பொதுத் தலைப்பில் பொருத்தமான சிறிய விவரத் தலைப்பின் கீழ் வரவு வைத்து விடலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் ஆ (6), ஆ (7), ஆ (8), இ (6), (இ) (7), இ (8) என்ற இனங்கள் சேர்க்கப்படமாட்டாது. பின்னால், வருட முடிவில், ஒரு வட்டாரத்திற்கு, ஓராண்டுக்கு 30,000 ரூபாய் வரையில் '47-ஏ' என்ற தலைப்பிற்கு வரவு வைத்தும், "40-விவசாயம்" என்ற தலைப்புக்கு எதிர்பற்று வைத்தும், ஓர் ஒப்படைப்பு மாற்றமானது (Proforma Transfer) செய்யப்படும்.

6. (2) செலவுக் குறிப்புகளை கவனத்தில் வைத்து, அதன் அடிப்படையில் மாவட்ட விவசாய அதிகாரியிடமிருந்து கால் ஆண்டுக்குகொருமுறை திருப்பிப் பெற வேண்டிய தொகை பற்றிய கோரிக்கையை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சமர்ப்பிப்பார்.

6. (3) கால்நடைப் பராமரிப்பு சம்பந்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இனங்கள் சம்பந்தமாக, உதவி மானியத் தொகையானது, "47-ஏ சமுதாயம்---பி. அபிவிருத்தித் திட்டங்கள்---மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலைத்திட்டங்கள்---சமுதாயத் அபிவிருத்தி வேலைகள் —2. கால்நடைப் பராமரிப்பும் விவசாய வளர்ச்சியும்" என்ற தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படும். இந்த மானியத் தொகையை வழங்குகின்ற அதிகாரத்தைப் பெற்றவராக ரெவின்யு டிவிஷனல் அதிகாரி இருப்பார். பஞ்சாயத்து யூனியன் கணக்குகளிலிருந்து அளிக்கப்படுகின்ற செலவுக் குறிப்புகளை வைத்து, அதன் பேரில் கால் ஆண்டு இடைவெளிக்கொருமுறை, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், மானியச் செலவை ரெவின்யு டிவிஷனல் அதிகாரியிடமிருந்து திருப்பிப் பெறுகின்ற தொகையாக, திருப்பிப் பெற கோரிக்கை செய்து கொள்வார்..

—o—

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

மாநில பஞ்சாயத்து மகாநாடு

(ஜலண்டு மைதானம்—1961 அக்டோபர் 8, 9 தேதிகளில்)

நிகழ்ச்சி நிரல்

1961 அக்டோபர் 8, ஞாயிற்றுக்கிழமை

1. காலை 11-00 மணியிலிருந்து பகல் 1-மணி வரை—
   துவக்க விழா.

2. பிற்பகல் 3-மணியிலிருத்து 5-00 மணி வரை—
   விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம்.

1961 அக்டோபர் 9, திங்கட்கிழமை

3. காலை 10-30 மணியிலிருந்து 11-00 மணி வரை—
   மத்திய அரசாங்க அமைச்சர் திரு. எஸ். கே. டே அவர்களின் சொற்பொழிவு.

4. காலை 11-00 மணியிலிருந்து 12-10 மணி வரை—
   கருத்தரங்கு : " பஞ்சாயத்துக்களும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டமும் "

5. பிற்பகல் 12-10 முதல் 1-00 மணி வரை—
   கருத்தரங்கு : " பஞ்சாயத்துக்களும், குடும்பக் கட்டுப்பாடும் "

6. பிற்பகல் 3-45 மணியிலிருந்து 4-45 மணி வரை—
   கருத்தரங்கு : " பஞ்சாயத்துக்களும், உணவு உற்பத்தியும் "

7. மாலை 4-45 மணியிலிருந்து 5-00 மணி வரை—
   மத்திய அரசாங்க துணை அமைச்சர் திரு. பி. எஸ். மூர்த்தி அவர்களின் சொற்பொழிவு.

8. மாலை 5-00 மணியிலிருந்து 6-00 மணி வரை—
   மகாநாட்டின் நிறைவுக் கூட்டம்.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961

Regd No. M. 7277.
கிராம நலம்
விலை 13 ந.பை.

" ஒப்பில்லாத சமுதாயம், உலகத்திற்கு ஒரு புதுமை, வாழ்க ! பாரத சமுதாயம் வாழ்கவே !"

" பாரத நாட்டிலுள்ள பாமர மக்கள் நல்வாழ்வு வாழ ஒரு வாய்ப்பினை அளிப்பதே, நம் தேச அபிவிருத்தியின் அடிப்படை நோக்கமாக அமையவேண்டும். இந்தியாவிலுள்ள நாற்பது கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற வேலை, மகத்தான ஒரு பணியாகும்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய மக்கள் சுதந்திரத்தை எதிர்நோக்கி நம்பிக்கையுடன் எவ்விதம் செயலாற்றினார்களோ, அவ்விதமே, இன்றைய திட்டங்களும், எதிர்கால நல்வாழ்வு, என்னும் நம்பிக்கையின் அடிப்படையில், தீட்டப் பெற்றவையாகும். எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும், உறுதியும், மக்களிடையே உள்ளன. இன்றைய இன்னல்களை முழுதும் உணர்ந்திருக்கும் இந்நாட்டு மக்களுக்கு, அந்த இன்னல்களை நீக்கிக்கொள்ள முடியும் என்பதிலே திட நம்பிக்கை உண்டு. கடந்த பத்தாண்டுகளில், திட்டமிட்டு வேலை செய்ததன் பயனாகக் கிடைத்த அனுபவமும், பொருளாதார, சமுதாயத் துறைகளில் ஏற்பட்டுள்ள பெரிய மாறுதல்களும், இந்தியா, நிலையான பொருளாதார முன்னேற்றத்தை அடையும் என்ற உறுதியான நம்பிக்கையை, ஊட்டுவனவாக உள்ளன.

இம் மாறுதல்கள், நகரவாசியை மட்டுமன்றி, கிராமத்தில் உள்ள உழவனையும் பாதிக்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும், புதிய போராட்டங்களும், அறைகூவல்களும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அவைகளை, தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் சமாளிக்க வேண்டும். இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்கள் மலர்வதும், அதன் பயனாக, இந்த நாட்டின் உருவமே மாறி வருவதும், உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஊட்டும் நிகழ்ச்சிகளாகும்.

சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இந்தியாவின் திட்டமிட்ட அபிவிருத்தியை இயக்கி வருகின்ற முக்கிய நோக்கங்கள், இரண்டு. இவற்றுள் ஒன்று, வேகமாகப் பெருகி வருகின்றதும், யந்திர தொழில் நுட்ப முன்னேற்ற முள்ளதுமான ஒரு பொருளாதார அமைப்பினை உருவாக்குதல். மற்றொன்று, ஒவ்வொரு பிரஜைக்கும் சரிசமமான வாய்ப்பினை அளிக்கின்ற நீதியின் அடிப்படையில் திகழ்கின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குதல். இந்த இரண்டு நோக்கங்களும் ஜனநாயக முறைகளில் உருவாக வேண்டும். பெரும்பான்மையான மக்கள், பிற்போக்கான சம்பிரதாயங்களில் மூழ்கியிருக்கும் இந்நாட்டில், முற்கால மரபு சார்ந்த பழைய சமுதாயத்திற்குப் பதிலாக, உயிரோட்டமோடு வேகமாக இயங்கும் புதிய சமுதாயத்தை நிறுவுவதென்பது, ஒரு மகத்தான வேலையாகும். இதை அமைதியான ஜனநாயக முறைகளில், மக்களின் சம்மதத்துடன் செய்வது இவ்வேலையை மேலும் கடினமாக்குகிறது."

[மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னுரை]